விலை ரூபா: 14.00 (கொழும்பு விலை ரூபா: 17.00) பக்கங்கள்:- (08+16) Registered as a News paper in Sri Lanka


# வலம்புரி
VALAMPURI



திருமணப் பட்டுப்
புடைவைகளின் ஸ்கராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469


சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 13 திங்கட்கிழமை (29.07.2002) தொலைபேசி 3378 ஒலி 222

# மன்னார் தச்சனாமடுக் குளத்தில் அழுகிய நிலையில் மூன்று சடலம்

## தமிழீழக் காவல்துறையினர் மீட்டனர்

(வவுனியா நிருபர்)

**மன்னார் மடு தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள தச்சனா மருதமடுக் குளத்தில் இருந்து அழுகிய நிலையில் மூன்று சடலங்களை தமிழீழக் காவல்துறையினர் மீட்டெடுத்துள்ளனர்.**

**பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இம் மூன்று சடலங்களும் வவுனியா அரச அதிபர் ஊடாக வவுனியா பொலிசாரிடம் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து தமிழீழ காவல்துறையினர் நேற்றுக் கையளித்தனர்.**

தச்சனா மருதமடுக் குளத்தில் மூன்று சடலங்கள் காணப்படுவதாக தமிழீழ காவல்துறையினருக்கு கிடைத்த தகவலை அடுத்து ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற காவல்துறையினர் அழுகிய நிலையில் மூன்று சடலங்களையும் மீட்டுள்ளனர்.

மீட்டெடுக்கப்பட்ட மூன்று சடலங்களும் ஆண்களுடையது என இனங் காணப்பட்டுள்ளது.

சடலங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் தமிழீழக் காவல்துறையினர் இது மர்மப் படுகொலை என்று தெரிவித்துள்ளதுடன், இப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்து இருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த 23ந் திகதி எசல போயா தினத்தன்று கண்டியில் இருந்து "ரோசா" வான் ஒன்றில் 17 பேர்கள்

(08ம் பக்கம் பார்க்க)

## ரவி - பீரிஸ் - ராஜித ஆகியோரின் அமைச்சுப் பதவி பறிக்கப்படும்?

### திட்டம் தீட்டுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண ஆகியோரின் அமைச்சுப் பதவிகளைப பறித்து அவர்களை விலத்துவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எடுத்து களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கா ஜனாதிபதி சந்திரிக்காவின் கைப்பை விவகாரம் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களை அடுத்து இருவருக்கும் இடையிலான முறுகல் நிலை வலுத்துவரும் இச்சமயத்தில் அவரது அமைச்சுப் பொறுப்பில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களை, அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்

## வை.கோ. கைது

### யாழ் நகரில் இன்று ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கைது செய்யபட்டதைக் கண்டித்து யாழ்.நகரில் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று இடம்பெறவுள்ளது.

பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று பி.ப ஒரு மணியளவில் யாழ் பஸ் நிலையம் முன்பாக இவ்

## அரசிடம் பேரம் பேசும் ஆற்றல் முஸ்லிம் காங்கிரசுக்கே உண்டு

### அமைச்சர் ஹக்கீம் உரை

(கொழும்பு)

அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக இருந்துவந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கையின் சமாதான முயற்சிகளில் தற்போது பேரம் பேசும் ஆற்றலையும் பெற்றுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பதுளையில் இடம்பெற்ற கட்சியின் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு த்னது பூரண ஆதரவை வழங்கும் அதேவேளை அரசுக்கும்-தமிழீழ

(08ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பாதையில் மங்கிய ஒளி தெரிகிறது

### முன்னாள் இந்தியத் தூதுவர் உரை

(கொழும்பு)

சுரங்கப் பாதையின் மறுநுனியில் ஒளி தெரிகின்றதா என்று, இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து, தன்னிடம் பலர் வினாத்தொடுக்கின்றார்கள் என்று, இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்து இடமாற்றம் பெற்று,

அவர் மேலும் பேசுகையில் என்னிடம் வினாத்தொடுத்தவர்களுக்கு நான் கூறும் பதில் இதுதான் "சுரங்கப

(02ம் பக்கம் பார்க்க)


வலம்புரி உடன்
வாரமலர்
சங்கு நாதம்

பறித்து அவர்களை விலத்துவதற் கான நடவடிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எடுத்து வருகிறார் என அரசியல் வட்டாரங்

ரது அமைச்சுப் பொறுப்பில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களை, அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்

(08ம் பக்கம் பார்க்க)

டில் இன்று பி.ப ஒரு மணியளவில் யாழ் பஸ் நிலையம் முன்பாக இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெறவுள ளது.

(த)

இலங்கைக்கான இந்தியத் தூது வராக இருந்து இடமாற்றம் பெற்று, நோர்வே தூதராகச் செல்லும் காந்தி, தனது பிரியாவிடை நிகழ்விலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

சங்கு நாதம்

தவறாது கேட்டு வாங்குங்கள்

# நேரடி விவாதத்திற்கு ஜனாதிபதி வருவாரா!

## அமைச்சர் திஸநாயக்கா சவால்

(கொழும்பு)

லஞ்சம் பெற்றதாக என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் குறித்து நேரடி விவாதத்திற்கு வரத் தயாரா என சமுத்தி அமைச் சர் எஸ்.பி.திஸாநாயக்கா ஜனாதி பதி ச்ந்திரிகாவுக்கு சவால் விடுத் துள்ளார்.

பொலநறுவையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி சந்தி ரிகா அமைச்சர் திஸாநாயக்காவை அவதூறாகப் பேசியதுடன் லஞ்சம் பெற முற்பட்டதாகவும் குற்றம்சாட்டி யிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள அமைச்சர், ஜனாதிபதி என்மீது கொண்டுள்ள கசப்புணர் வின் காரணமாகவே வீணான குற் றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளதா

(08ம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்புக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அமெரிக்கா உதவும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுகளில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற் றுக்குப் பரிகாரம் காண அமெரிக்கா முன்வந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

தனது அமெரிக்க விஜயத்தின் பலாபலன்கள் குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள் ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுதந்திரவர்த்தகம் தொடர்பாக அமெரிக்காவும் இலங்கையும் பல வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளவுள்ளன. அமெரிக்க விஜ யத்தை அடுத்து உலக நாடுகள் அனைத்தும் தமது ஒத்துழைப்பையும் உதவியையும் இலங்கைக்கு வழங் கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எமது திட்டங்களையும், செயற்பாடுகளை

(08ம் பக்கம் பார்க்க)


கையில் இருக்கும் நகைகளுக்கு

கச்சிதமான கைமாற்று

ஹற்றன் நஷனல்

அடகு வைக்கும் வசதி

ஒரு பவுணுக்கு ரூ. 5500/- அடகுப்பணம்! மாதாந்த வட்டி 183% மட்டுமே!



- அதி கூடிய அடகுப்பணம்
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தவணை முறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதி
- அடகு நகைகளுக்கு இலவச காப்புறுதி
- கணனி மூலம் மதிப்பீடு செய்யப்படுவதால் தங்க நகைகளுக்குச் சேதம் ஏற்படாது
- உயர் பாதுகாப்பும் கொடுக்கல் வாங்கல்களில் பூரண இரகசியமும் பேணப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[C/4634]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### உடன் தேவை

மண்டைதீவில் உள்ள சைவ ஆலயம் ஒன்றிற்கு நித்திய பூஜைசெய்வதற்கு அந்தணர் ஒருவர் உடன்தேவை குடும்பமாக தங்குவதற்கு வீட்டுவசதியும் செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில்பேசி முடிவெடுக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: விளம்பர இல 300 மே/பா வலம்புரி யாழ்ப்பாணம். (C 4759)

### மணமகள்தேவை

இந்து கௌரவகுடும்பத்தை சேர்ந்த கொழும்பில் எம்.பி.பி.எஸ். படித்த28வயதுபூரட்டாதி 4ம்பாதம் உடைய டாக்டர்மணமகனுக்குகுறைந்தது A-Lபடித்த அழகிய மணமகள் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

★ ★

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த லண்டனில் நிரந்தர வசிப்பிட உரிமை பெற்று என்ஜினியராக கடமையாற்றும் (Electrical and Electronic Engineer) 09 06.74ல்பிறந்த உத்தராடம்4ம் பாதம்உடையவருக்கு குறைந்தது க.பொ.த.உயர் தரம்படித்த அழகிய மணப்பெண்தேவைதொடர்புவிளம்பரஇல301,வலம்புரி,15வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். (5751)


# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உலகவங்கி அதிகாரிகள் குழு நேற்று விஜயம் செய்தது

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுவந்துள்ள உலகவங்கிக்குழுஅதிகாரிகள் நேற்று காலை யாழ்போதனா வைத்தியசாலைக்கு விஜயம்செய்து வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இக்குழுவில் உலகவங்கியின் உபதலைவர் பிரட்ஹேர்பாட் உலகவங்கி அதிகாரிகளான நரேஷ்துரைசுவாமி, நிக்பில் கிரிம் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் யாழ் போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர் பின்வரும் விடயங்களைச்சுட்டிக் காட்டினார் யாழ்போதனா வைத்தியசாலையில் மருத்துவம் போதிப்பதற்கு உரியவசதிகள் இல்லை அத்துடன் தற்காலத்தில் சமாதான சூழ்நிலையைஅடுத்து வெளிமாவட்டங்களைச்சேர்ந்த நோயாளர்கள் பலர்இங்குவருவதனால் ஆளணிப்பற்றாக்குறையும் கட்டடவசதி, வாட்வசதி தளபாடபற்றாக்குறை காணப்படுகிறது.

அத்துடன் சத்திரசிகிச்சை வாட்டுக்கு புதியகட்டடம் ஒன்று கட்டப்படுதல் வேண்டும் ஏனெனில் நாளுக்குநாள் அதிகரிக்கும் நோயாளர்களின் சத்திரசிகிச்சைக்கு போதியளவான கட்டடவசதி இல்லாமை காணப்படுகிறது அத்துடன் இந்த யாழ்போதனா வைத்தியசாலையை ஏனைய வெளிநாட்டுவைத்திய சாலைகளின் தரத்திற்கு உயர்த்துமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டார்பணிப்பாளர்.

இதற்குப்பதிலளித்த உலக வங்கி அதிகாரிகள் குழுவினர் தெரிவித்தாவது.

வடக்குகிழக்கிற்கு30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது வடக்கு கிழக்கை புனரமைப்பு செய்வதற்காக யுத்தத்தினால்பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் சென்றுபார்வையிட்டு மதிப்பீடு செய்து வருகின்றோம்.

அத்துடன் யாழ்போதனா வைத்தியசாலைக்கு அவசர தேவைகளை மட்டும் நாம் தற்போது செய்யமுடியும் எனினும் பகுதி பகுதியாகத்தான் நாம் புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்கு திட்டமிட்டு இருக்கின்றோம் என அவர்கள் அங்கு தெரிவித்தனர். (ஷ-6)

## வான் விபத்துக்குள்ளானது

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சுற்றுலாச் சென்ற ஹயஸ் வாகனம் ஒன்று நேற்றுமுன்தினம் அநுராதபுரத்திற்கு அண்மையில் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் பிரயாணம் செய்த எட்டுப்பேரில் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருநகர் டேவிற் வீதியைச் சேர்ந்த ஏ.கிஷாந் (வயது 20) என்பவரே காயமடைந்தவராவர்.

இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைபெற பரீட்சை எழுதுவதற்காக சுற்றுலா சென்றவர்களுடன் பயணம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தின்போது ஹயஸ் வாகனம் பலத்தசேதத்திற்கு உள்ளாகியது. (இ- 6)

## சமாதானப்

பாதைகள் பெரும்மாலும் நேராகவே இருப்பதுண்டு. ஆனால் இந்தச்சுரங்கப்பாதை அப்படியானதல்ல. இது வளைந்தும், நெளிந்தும் செல்கின்றது.

இதனால் சிலவேளைகளில் சிறுஒளிமின்னுவது போல தெரிகிறது.ஆனால் பெரும்பாலான நேரங்களில் இருளும் மங்கலுமாகவே தெரிகிறது.

எனினும் இதனைஊக்குவிப்பதாக இலங்கை அரசின் விசுவாசமும் பொறுமையும் சிறந்த அணுகுமுறையும் அமைவதால் சமாதானம் வெற்றியடையும் என்று கூறினார்

இதேவேளை இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்புடன் இலங்கைஅரசு பேச்சுக்களில் ஈடுபடுமானால் புலிகள் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்று கேட்டதற்கு,

இந்தியா சட்டங்களைவைத்திருக்கிறது. இலங்கை சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று இந்திய வெளியுறவுஅமைச்சர் குறிப்பிட்டதை கோபாலகிருஷ்ணகாந்தி நினைவுபடுத்தினார். (இ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராமசேவையாளர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒனறு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் மேற்படி அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிமேற்குகோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளார். (ஷ)

★ ★

சண்டிலிப்பாய் சங்கானை கோட்டங்களும் கே கே எஸ் வீதிக்கு மேற்குப்புறமாக உள்ள தெல்லிப்பழை,உடுவில் கோட்டங்களின் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சண்டிலிப்பாய் கோட்டத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களையும்கலந்து கொள்ளுமாறு வலிமேற்கு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ஷ)

## இராமநாதன் கல்லூரி முதலிடம்

(உடுவில்)

மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் குழு நடனப் போட்டியில் இராமநாதன் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது. 'சாந்தியும் சமாதானமும்' என்ற தொனிப்பொருளில் அமைந்திருந்த பிரிவு 2 ல் இராமநாதன் கல்லூரி முதலிடத்தை பெற்றுள்ளது. கடந்த வருடமும் நடனப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாவது இடத்தையும் இராமநாதன் கல்லூரி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-261)

## கடனுக்கானவட்டிவீதத்தை மத்தியவங்கி குறைத்தது

(கொழும்பு)

இலங்கைமத்தியவங்கி கடனுக்கான வட்டி வீதங்களை குறைத்துள்ளது;இதன்காரணமாக இன்றுமுதல் வங்கிகளில் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் போது வட்டிவீதங்கள் குறைந்து காணப்படும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறுமாதங்களாக பணவீக்கவீதம் குறைந்திருந்ததன் காரணமாக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்தியவங்கிவெளியிட்டுள்ள அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவங்கிகளின் கடன் கொடுக்கும் வீதத்தைகுறைப்பதற்கான இடைக்கால நடவடிக்கை எனவும் மத்திய வங்கியும் வர்த்தகவங்கிகளும் இந்த வட்டிவீதங்களை மேலும் குறைப்பது சம்மந்தமாகக் கலந்துரையாடப்படுவதாகவும் நிதி அமைச்சர் சொக்ஸி கூறியுள்ளார்.

இந் நடவடிக்கையானது பொருளாதாரத்திற்கு புத்துயிர் அளிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## மாணவர்கள் யாழ் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

காலி,றுகுணு கல்வியியற்கல்லூரிகளைச்சேர்ந்த மாணவர்கள் சமாதான சுற்றுலா ஒன்றைமேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்துள்ளனர்

கடந்த வெள்ளிக்கிழமை வருகைதந்த இக்குழுவினருடன் றுகுணுதேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திருமதி லச்சுமி களுவாராச்சி மற்றும் ஜீ.ரி.சற் நிறுவன அதிகாரிகள் ஆகியோரும் வருகைதந்துள்ளனர்.

இவர்கள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நயினாதீவு ஆகிய இடங்களைச்சென்று பார்வையிட்டனர்.

நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பும் இக்குழுவினருடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி மாணவர்களும் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தென்பகுதிக்குச் செல்லவுள்ளனர். (த)

## மக்கள் வங்கியின் வனிதாவாசனா திட்டம் 10 பேருக்குப் பரிசு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் மகளிர்களுக்கான தங்கப்பவுண் பரிசுத் திட்டமான ''வனிதா வாசனா'' பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் மக்கள்வங்கி கன்னாதிட்டிக்கிளையில் நேற்றுபத்துமகளிர்களுக்குஇப் பரிசுவழங்கப்பட்டது.

இப்பரிசைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு:

திருமதி எ. தர்மலிங்கம், திருமதி சிவசர்மா, செல்வி எஸ். எல்.எ.சுபத்ரா, திருமதி எல். நலந்தகாந்தன், திருமதி ஏ. கந்தையா, செல்வி கீர்தாராம் சுதா, செல்வி எ. சாந்தாராணி, திருமதி எஸ். யோகநாதன், திருமதி எல்.நடராஜலிங்கம், திருமதி என்.கந்தையா என்பவர்கள் ''வனிதா வாசனா'' தங்கப்பவுண் பரிசுத் திட்டத்தின் கீழ் பரிசு பெற்றவர்கள்.

மக்கள் வங்கிகன்னாதிட்டிக் கிளையில் அவ்வங்கியின் முகாமையாளர் உதவிமுகாமையாளர் ஆகியோரால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கியில் ஆகக் கூடிய வைப்புக்களைப் பெற்ற மக்கள் வங்கிசுன்னாகம்கிளை,மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை, மக்கள்வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர்களுக்கு ஒரு தொகை குடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில்யாழ். பிராந்திய முகாமையாளர் எம். கே. சிவபாதவிருதயர், வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் மற்றும் யாழ்.மாவட்டமக்கள் வங்கிக்கிளைகளின் முகாமையாளர்கள், வாடிக்கையாளர் எனப்பலர்இந்நிகழ்வில்கலந்து கொண்டனர். (க- 06)


யாழ். இராமநாதன் கல்லூரி

**சிறுவர் நூலகத் திறப்பு விழாவும்**

**கலை விழாவும்**

**இடம்:** கல்லூரி பிரதான மண்டபம்
**காலம்:** இன்று (29. 07. 02) திங்கட்கிழமை
**நேரம்;** பி.ப. 12. 30 (புதிய நேரம்)

**தலைவர்**
திரு. து. கிருபாகரன்
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கட்டுறுப் பயிலுநர்)

**பிரதம விருந்தினர்கள்**
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி தேசிய கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்)
திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர் இராமநாதன் கல்லூரி)

**கௌரவ விருந்தினர்கள்**
கலாநிதி ஜி. குக் (ஜி. ரி. சற்)
திருமதி லக்சுமி களுவாராச்சி
(பீடாதிபதி தேசிய கல்வியியற் கல்லூரி றுகுணு)

**சிறப்பு விருந்தினர்கள்**
திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா
(விரிவுரையாளர் J. N C. O. E)
செல்வி கிரிஜா கந்தசாமி
(விரிவுரையாளர் J. N. C. O. E)

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்
**தாஸ் இரும்புக் களஞ்சியம்**
K. K. S வீதி, சுன்னாகம்.
(C- 4683)


## கைதிகள் இடமாற்றம்

(உடுவில்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் களுத்துறைச் சிறைச்சாலையிலிருந்த இருநபர்கள் யாழ் சிறைச்சாலைக்கு கடந்த 28 ம் திகதி மாற்றப்பட்டுள்ளனர்.

தாய்லாந்திலிருந்து இலங்கைக்கு 2000 ம் ஆண்டு வந்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சண்முகநாதன் சிவயோகநாதன் (கிராஞ்சி பூநகரி) என்பவரும் மானிப்பாய் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து களுத்துறைச்சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட பொன்னுத்துரை ஸ்ரீ கௌரிதாசன் (லவ் லேன் உடுவில்) என்பவருமே மாற்றப்பட்டவர்களாவர்கள் (க-261)

## உடல் பருமனை குறைக்கும் வில்லைகளால் ஆபத்து

(டோக்கியோ)

உடல் பருமனைக் குறைக்கும் வில்லைகளால் ஜப்பானியர்கள் 300பேர்பாதிக்கப்பட்டுள்ளதாக ஜப்பானியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சீனஉற்பத்தியானஇவ் வில்லைகளை பாவித்ததனால் 4 பெண்கள் இதுவரையில்பலியாகிஉள்ளதாகவும் மேலும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வில்லையைப் பயன்படுத்துவதால் உடல்அழற்சி நோய்கள் ஏற்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ் வில்லைகளுக்கான மொத்தசில்லறை வியாபாரங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (க-03)

### முன்னாள் அமைச்சர் மங்கள மீது

# இரகசியப் பொலிஸார் விரிவான விசாரணை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் கிறடிற்காட் துஷ்பிரயோகம் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர் ராஜித சேனாரட்னஇரகசியப் பொலிஸாருக்கு பணிப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களுக்கு அமைச்சர் ராஜித விளக்கம் அளிக்கும் போது, அரசாங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்தசகல விதமான கொடுப்பனவுகளையும் வசதிகளையும் பெற்றிருந்த போதிலும்இரு கிறடிற்காட்டுகள் மூலம் சுமார் 6 இலட்சம் ரூபாவை மங்கள பெற்றிருந்தார். இது ஒரு ஊழல்நடவடிக்கையாகும்.

கடந்த பெப்ரவரி மாதம் இது தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ள போதிலும், அதன் பதில் பணிப்பாளர்நாயகம் கிங்ஸ்லி விக்கிரம சூரிய இந்த ஊழல் விவகாரத்தை மூடிமறைப்பதற்கு முயற்சி செய்துள்ளார். (உ-8)

### பொதுஜன ஐக்கிய முன்னணியின்

# பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எதுவும் இல்லை

## கட்சிச் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ. எச். எம். பௌஸி, றிச்சட் பத்திரன ஆகியோர் மீது கட்சி விதிகளை மீறிய குற்றச்சாட்டுத் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் ஜி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இவ்விருவரும் கருத்துத் தெரிவித்தமை தொடர்பாக இருவரிடமும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்க விளக்கம் கோரியிருந்தார்.

இது தொடர்பான பூரண விளக்கத்தை பௌஸியும், றிச்சட் பத்திரனவும் கட்சியிடம் சமர்ப்பித்துள்ளதாகவும். இது தொடர்பாக தான் ஜனாதிபதியை சந்தித்து பேசி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விருவரும் இதற்கான விளக்கத்தைக் கொடுக்காத காலகட்டத்தில் கட்சிக்கும் இவர்களுக்கும் இடையேயான கருத்து மோதல்கள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தும் குறிப்பிடத்தக்கது. (க-08)

### வை. கோ. கைதைக் கண்டித்து

# வடமராட்சி வர்த்தகர்கள் கறுப்புபட்டி அணிந்து பணி

(துன்னாலை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து இடம்பெற்ற போராட்டத்துக்கு வடமராட்சிப் பகுதி வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடி பறக்கவிட்டு வர்த்தகர்கள் கறுப்புப்பட்டி அணிந்து ஆதரவு அளித்தனர்.

இக் கறுப்புப் பட்டிப் போராட்டத்திற்கு யாழ். வணிகர் கழகம் அழைப்பு விடுத்திருந்தது. வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் உள்ள சகல வர்த்தக நிலையங்களும் இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தன. (வ-41)

### புதியதலைவர் பொறுப்பேற்பு

(மானிப்பாய்)

பலமாத காலங்களாக வெற்றிடமாகவிருந்த வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைவர் பதவிக்கு அச் சபையில் உப தலைவராக கடமையாற்றிவந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினர் வேலுப்பிள்ளை மகேந்திரன் (வள்ளுவன்) நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (26-07-2002) அன்று மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தனது பதவியை ஏற்றுக்கொண்டு அன்றைய தினமே பிரதேச சபையின் தலைவர் பதவியைப்பொறுப்பேற்றுக்கொண்டார். (க-232)

# காவலூர்-யாழ் பஸ்சேவைகள் சீராக நடைபெறுவதில்லை

ஊர்காவற்றுறையில்இருந்து யாழ் நோக்கி காலையில் இடம் பெறும் பேருந்துச் சேவைகள் சீராக இடம்பெறுவதில்லை என்றுபுகார் தெரிவிக்கப்படுகிறது.

காலையில் இடம்பெறும் 780 இலக்கபேருந்துச் சேவையேஒழுங்காக இடம் பெறாததனால் பொதுமக்கள், மாணவர்கள் அரச ,அரசசார் பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் பெரும் இடைஞ்சல்களை எதிர் கொள்வதாகக் கூறப்படுகிறது.

காலை 6 மணிக்கான இச் சேவைவாரத்தில் சில நாட்களில் நடைபெறுவதாகவும் சில தினங்களில் இடைநிறுத்தப்படுவதாகவும் பயணிகள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ஷ-75)

# வடமராட்சி வெகுஜன அமைப்புகள் ஒன்றியம்

### அண்மையில் அங்குரார்ப்பணம்

(மந்திகை)

வடமராட்சி பிரதேசத்திலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் இணைந்து வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினை அண்மையில் அங்குரார்பணம் செய்துள்ளனர்.

ஒன்றியத்தினுடைய தலைவராக உடுப்பிட்டிபலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் சி. கணபதிப்பிள்ளை, உபதலைவராக தேவரையாளி இந்துக்கல்லூரி பழைய மாணவர் மன்ற செயலர் கி. பரமதாஸ், செயலாளராக வடமராட்சி வலய ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர் [illegible]துரை சத்தியசீலன் ஆகியோரும் ஓய்வுபெற்ற அதிபர் சு. கணபதிப்பிள்ளை, பா. தவயோகம் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும், தெரிவு செய்யப்பட்டனர். (உ-23)

### விபத்துச்சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் குருநகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எம். ஞானசீலன் (வயது 42) என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவராவார். இவ்விபத்துச்சம்பவத்தின்போது சைக்கிள் பலத்த சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஷ-6)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்துசென்றுகொண்டிருந்த வயோதிப மாது ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதால் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய்ச் சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதேஇடத்தைச் சேர்ந்த என். மாதி (வயது 65)என்ற வயோதிபப் பெண்மணியே காயமடைந்தவராவார். (ஷ-6)

# கொழும்பு பேராயர் மக்களுக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு யுத்தத்தினால் சீரழிந்த சமுதாயத்தை மீளக் கட்டி எழுப்புவதற்குஇலங்கை மக்கள்அனைவரும் அணிதிரள வேண்டும் என்று புதிதாக நியமனம் பெற்றுள்ள கொழும்பு பேராயர் அதிவணக்கத்துக்குரிய ஒஸ்வேல்ட் கோமஸ் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதிதாக நியமனம் பெற்ற கொழும்புபேராயர் அதிவணக்கத்திற்குரிய ஒஸ்வேல்ட்கோமசின் அதிகாரபூர்வ பதவிஏற்பு வைபவம் நேற்று முன்தினம் கொட்டாஞ்சேனைபுனிதலூசியாஸ் தேவாலயத்தில் இடம்பெற்றது. அந்த வைபவத்திலேயே புதிய பேராயர் ஒஸ்வேல்ட் கோமஸ் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்;

இலங்கையில் உள்ளகத்தோலிக்க மக்கள் பௌத்த மக்களுடனும்,ஏனையமக்களுடனும் நெருங்கிய நட்புறவுடன் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

இந்த விழாவில் பெருந்தொகையான கத்தோலிக்கர்களும், பௌத்த குருமாரும் கலந்துகொண்டார்கள்.

சங்கைக்குரிய பேராசிரியர் வெல்லம்பில விமலரத்தின, சங்கைக்குரிய மாதுருபாகே சோபித, கொள்ளுப்பிட்டிய மகிரங்க சங்கமித்த ஆகிய தேரர்களும் கலந்து கொண்டு புதிய பேராயருக்கு ஆசிவழங்கினர்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியின்செயலாளர்பாலபட்டபெண்டிஅனுப்பி வைத்துள்ளார். பிரதமரின் சார்பில்பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் கலந்து கொண்டார். (க-04)

### மானிப்பாய், ஆனைக்கோட்டை

# மருந்தகங்கள் மீது அதிகாரிகள் திடீர் பாய்ச்சல்

(சுதுமலை)

மானிப்பாய் ஆனைக்கோட்டைப் பகுதியில்உள்ள மருந்து விற்பனைநிலையங்கள் மருந்தகங்கள் என்பன யாழ். மாவட்ட சுகாதாரசேவைகள் திணைக்களத்தின் உணவு மருந்துப் பரிசோதகர் ரி. மகாதேவன் தலைமையில் இவ்வாரம்திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இப்பகுதியில் உள்ள பல மருந்துவிற்பனை நிலையங்களில்தகுதிவாய்ந்தமருந்தாளர் பணிபுரியவில்லை எனவும் பலமருந்தகங்கள் இவ்வருடத்திற்கான உரிமம்பெற்றுக் கொள்ளாமையும் அவதானிக்கப்பட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

விரைவில் இக்குறைபாடுகள் நிவிர்த்தி செய்யவேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும்உணவு மருந்துப் பரிசோதகரால் எச்சரிக்கை செய்யப்பட்டது.

மேலும் சண்டிலிப்பாய்,நவாலிப்பகுதியில் உள்ள பேக்கரிகள், தேநீர்சாலைகள் என்பனவும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவால் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டது. (உ-252)

### மின் விநியோகம் சீரில்லை

(மந்திகை)

யாழ். குடாநாட்டில் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படுவதாக கூறப்படுகின்ற போதிலும், வடமராட்சி வடக்குப் பகுதிக்கான மின் விநியோகம் இன்னமும் சீர்ப்படுத்தப்படவில்லையென சம்பந்தப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கரையோரப் பிரதேசங்களான சுப்பர்மடம், பொலிகண்டி, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளிலேயே இம் மின்விநியோகச் சீர்கேடுநிலவுகிறது.

இப் பகுதிகளுக்கு மின் விநியோகிக்கப் பயன்படுத்தப்படும் ஜெனரேற்றர் அடிக்கடி பழுதடைந்துவிடுவதே இதற்குக் காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-23)

# அரசியல் தலையீடற்ற வேலை வாய்ப்புக்கு விசேட திட்டம்

(கொழும்பு)

அரசியல் தலையீடு எதுவும் அற்றவகையில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான விசேடதிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என தொழில் வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்தசமரசிங்கதெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதற் கட்ட நடவடிக்கையாக மாவட்ட ரீதியில் தொழில் வாய்ப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்நிலையங்கள் ஊடாக அரச மற்றும் தனியார் நிலையங்களில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் சேகரித்து வைக்கப்படவுள்ளது.

இவ் வெற்றிடங்களுக்கு தகுதியுள்ளவர்களுக்கு எவ்வித அரசியல் தலையீடுமின்றி நியமனங்கள் வழங்கப்படும் என்பதோடு,

இதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்புகளின் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-08)

### மாகாண மட்ட

# உதைபந்தாட்டப் போட்டி வெள்ளியன்று ஆரம்பம்

(சுண்டுக்குளி)

யாழ். உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளின் 14 வயதுக்குட்பட்டமாணவர்கள்பங்குபற்றும்உதைபந்தாட்டப் போட்டிகளின் ஆரம்ப விழா கடந்த வெள்ளிக்கிழமை9.00மணிக்குஇலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின்பிரதிப்பொதுச் செயலாளரும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவருமான எல். கிளிபேட் அன்ரனிப்பிள்ளையின் தலைமையில்,சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குபிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், சிறப்பு விருந்தினராகயாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி எ.எவ்.ஜே.ரூபசிங்கமும் கலந்து கொண்டனர்.

அதனைத்தொடர்ந்துதுரையப்பா விளையாட்டுஅரங்கு சென்.அன்ரனீஸ்விளையாட்டு மைதானம்சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம். யாழ்.பல்கலைக் கழக மைதானம் என்பவற்றில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் சென்ஜோசப் கல்லூரி தேவரயாழி இந்துக்கல்லூரி ,சென் ஜோன்ஸ் கல்லூரி,சென்மைக்கல்கல்லூரி,யூனியன்கல்லூரி, சம்மாந்துறை மகாவித்தியாலயம்,புனிதவளனார் மகாவித்தியாலயம், சென்லூசியாஸ் கல்லூரி, அளவை வடக்கு றோ.க.தமிழ் வித்தியாலயம்,சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம் இக்மேசியஸ் கல்லூரி, அருணோதயா கல்லூரி, மத்திய கல்லூரி, ஆகியகல்லூரி அணிகளும் பங்கு பற்றின. (ந-110)

## காரைநகரில் புலிகளின் பெயரைக்கூறி வர்த்தகர் மிரட்டப்பட்டார்

(காரைநகர்)

காரைநகரில் புலிகளின் பெயரைக்கூறி வர்த்தகர் ஒருவரை மிரட்டிய சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட வர்த்தகநிலையத்திற்கு மோட்டார்சைக்கிளில்வந்த இருவர் வர்த்தகரின் பொருளாதார நிலைமைகளை விசாரித்ததுடன் சட்டவிரோதமான விற்பனைகளை நிறுத்தும்படியும் எச்சரிக்கை செய்ததுடன்,

மேலதிக விசாரணைக்காக கொக்குவிலில்உள்ள தமது அலுவலகத்திற்கு வருகைதர வேண்டும் எனவும் அவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

இதனையறிந்து அவ்விடத்திற்கு விரைந்த விடுதலைப் புலிகள் மேற்குறிப்பிட்ட சம்பவத்திற்கும்தமக்கும்தொடர்பில்லை என்று கூறியதுடன், சம்பந்தப்பட்ட நபர்கள் தொடர்பான தகவல்களையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைப்போல் தொடர்ந்து நடைபெறாதுஇருக்க மக்களை விழிப்பாக இருக்கும்படியும் இவ்வாறான சம்பவங்கள்பற்றி தங்களிற்கு உடன் தகவல் தருமாறும்விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

(ஷ-246)

## கிரிந்திவல பௌத்தபிக்கு கொல்லப்பட்டார்

(கொழும்பு)

கிரிந்திவல, ரத்தம்வல விகாரையின் பௌத்த பிக்கு ஒருவர் நேற்றுமுன் தினம் இடம்பெற்றதாக்குதல் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஹக்கல்லே வஜ்ஜிரதேரர் (வயது 45) என்ற பௌத்த பிக்கு கொலை செய்யப்பட்டவராவார்.

இத்தாக்குதலில் காயமடைந்த இன்னொரு பிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் தொடர்பாக பிக்கு ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத் தாக்குதல் குறித்த மேலதிக விபரங்கள் எவையும் இதுவரையில் தெரிய வரவில்லை.

(க)

## பாக். ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தை ஒட்டி முக்கிய வீதிகள் தடை

### பாதுகாப்பு ஏற்பாடுகள் துரிதம்

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப்பின்இலங்கைக்கான விஜயத்தை முன்னிட்டு நகரத்தின் முக்கியமான வீதிகள் பலவும் நேற்று போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்தன.

இதனை முன்னிட்டு கொழும்பின் பிரதானமான வீதிகளான கட்டுநாயக்கா விமான நிலைய வீதி,பேலிய கொடசுற்று வட்டம், இலங்கை, யப்பான் நட்புறவுப்பாலம், ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க மாவத்தை, சென் அன்ரனிஸ் மாவத்தை, ஜோர்ஜ் டி. சில்வா மாவத்தை, அப்துல்காதர் மாவத்தை போன்றனவே நேற்று போக்குவரத்துக்காக தடை செய்யப்பட்டிருந்தன.

அதே நேரம் ஜனாதிபதி முஷாரப்பின் வருகைக்கான பாதுகாப்பு ஒத்திகைகள் நேற்று பி. ப. 2.00 மணியளவில் இடம் பெற்றதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-08)

### முல்லைத்தீவு வைத்தியசாலையிலிருந்து

## 4 நோயாளிகள் மேலதிக சிகிச்சைபெற யாழ்வருகை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்தநான்கு நோயாளிகள் மேலதிக சிகிச்சைக்காக அன்புலன்ஸ் மூலம்நேற்றுமுன் தினம்யாழ் போதனாவைத்தியசாலைக்குக்கொண்டுவரப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பைச்சேர்ந்த வேலன் கணபதி (வயது 65) திருமதி செல்வரத்தினம் நேசம்மா (வயது 58) அலம்பிலைச் சேர்ந்தஅகிலவர்ணன் புனிதா (வயது 36) சின்னக்குட்டி குணரட்ணம்(வயது56) ஆகியோரே யாழ்.போதனா வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (ஷ-6)

## 2004 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பாடத்திற்கு மூன்று புத்தகம் அறிமுகம்

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பாடத்துக்கு 3 பாடப்புத்தகங்களை கல்வியமைச்சு அறிமுகம் செய்யவுள்ளது.

தரம்6ல் இருந்து க.பொ.த (சா-த) தரம் வரையிலான பாடசாலை மாணவர்களுக்கே இப்புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் ஆலோசகர் ஆரிய விக்கிரம அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வி கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஒரு பாடத்துக்கு 3 பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்ட போதிலும் ஒரு பாடத்துக்கு ஒரு புத்தகம்என்றஅடிப்படையிலேயே இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களினது விருப்பத்திற்கு அமைய பாடப்புத்தகத்தை தெரிவுசெய்துகொள்ள முடியும் எனவும் இவ்வாறு எது தேர்ந்தெடுக்கப்படுகின்றதோ அப்புத்தகம் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்பதுடன் எஞ்சிய இருபாடப்புத்தகங்களும்பாடசாலை நூல்நிலையங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது எனவும்தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தை அமுல்படுத்தும் நோக்கில் 1997 ஆம் ஆண்டுகாலப்பகுதிகளிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க- 8 )

# தமிழர் பகுதியில் மண் அகழ்தல் தவிர்க்கப்பட வேண்டியது அவசியம்

### விடுதலைப் புலிகளின் யாழ். பணிமனை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது சுற்றுச் சூழலையும், நிலையத்தையும் பாதுகாக்கின்ற தாவரங்களை அழிப்பதும், மண் அகழ்வதும் கால்நடைகள் கொல்லப்படுவதும்தமிழர் பகுதியில்தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை பணிமனை மண் அகழ்தல் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இயற்கை எமக்களித்த கொடையினை குறுகிய நோக்கை மட்டும், கொண்டு, எந்தவிதமான தூரநோக்கமுமின்றி, அழிப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

தேசமும் வளங்களும் எங்கள் சொத்துக்கள், பனை, தென்னை மற்றும் வேம்பு, மா, பலா போன்ற பயன்மிகு மரங்களை வரைமுறையற்று அழிப்பது நிறுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

மேலும் பணம் ஒன்றையே நோக்காகக் கொண்டு மண், ஏற்றுவதால் காலப்போக்கில கடல் நீர் உட்புகுந்து நன்னீர் உவர் நீராக மாறும் என்பதால் உடன் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

யுத்தம் ஓய்ந்துள்ள இந்தக் காலப்பகுதியில் அனைவரும் இணைந்து ஆக்க பூர்வமாக செயற்படுதல் அவசியமாகும். மரங்கள் அழிப்பதோ, மண் அகழ்வதோ உடன் நிறுத்தப்படுவதோடு உணவுத்தேவைகளுக்காக எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி திருட்டுத்தனமாக கால்நடைகள் கொல்லப்படுவதும் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகும். மேற்படி அழிப்பு நடவடிக்கையானது மக்கள் நலனுக்கும் தாயக தேசத்திற்கும் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளாகவே அமையும். இந்நிகழ்வுகள் மிகவும் கட்டுப்பாடுகளற்ற நிலையில் தீவகப் பிரதேசத்தில்நிகழ்கின்றது. இவை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## இராசி பலன்

29-07- 2002

(ஆடி, 13, திங்கள்)

பஞ்சமி மு.இ 9. 35 வரை

உத்தரட்டாதி முழுவதும்

ராகு காலம்- 7.33- 9. 03

நல்ல நேரம்- 12 03-1.33

**மேடம்**
உடல் சோர்வு, காரிய தாமதம், நண்பர்களால் வெறுக்கப்படல், சுப செலவு

**இடபம்**
குடும்ப சுகம்,எடுத்த காரியம் கை கூடும்,நல்ல வரவேற்பு, பொருள் சேர்க்கை

**மிதுனம்**
தொழில் நன்மை, அதிகாரம், சினேகிதர் உதவி, முயற்சி கைகூடும்

**கடகம்**
தந்தைவழி உறவு, உடல் உபாதை, காரிய தாமதம், பிரயாணம்

**சிங்கம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், சயன சுகக் குறைவு, வாகன பயம்

**கன்னி**
உறவினர் வருகை, சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய சித்தி, எதிர்பாராத நன்மை

**துலாம்**
தொழில் நிலை மாற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி, பகைவர் நேசம், காரிய நன்மை

**விருச்சிகம்**
செல்வாக்கு குறைவு, தொழில் கஷ்டம், உடல் நலக்குறைவு, புத்திரரால் கவலை

**தனுசு**
ரோகபயம், அதிகாரிகள் வெறுப்பு, முயற்சி தாமதம், பொருள் விரயம்

**மகரம்**
இனிய சம்பவம், அன்னியர் உதவி, தனவரவு, பிரயாண நன்மை

**கும்பம்**
கௌரவக்குறைவு, காரிய அனுகூலம், உடல் நலம், மாதர் நட்பு

**மீனம்**
ஜனவசியம்,போசன சுகம், கற்பனை மிகுதி, முயற்சி கை கூடும்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## அமைச்சர் கருஜெயசூரிய சீனா பயணமானார்

(கொழும்பு)

மின் சக்தி எரிபொருட்துறை அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவருமானகரு ஜெயசூரிய உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு சீனாவிற்குச் சென்றுள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் விசேட பிரதிநிதியாகவே இவர் சீனா சென்றுள்ளதாக இலங்கை இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனாவில்தங்கியுள்ளஅமைச்சர் கருஜெயசூரிய சீன வெளிவிவகார அமைச்சரை சந்தித்து உரையாடியதுடன், பிரதமரையும்சந்தித்து உரையாடியுள்ளார்.

இலங்கையில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள்சம்பந்தமாகவும் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் சம்பந்தமாகவும் இவர் சீன அரசியல் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்.

(க-19)

## சீன அரசு இலங்கைக்கு 65 கோடி ரூபா நிதியுதவி

(கொழும்பு)

சீன அரசு65கோடிரூபாவை இலங்கைக்குஉதவியாகவழங்கவுள்ளது

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் விசேட தூதுவராக சீனாவுக்குவிஜயம் மேற்கொண்டிருக்கும் மின் சக்தி அமைச்சர் கருஜெயசூரிய, சீன வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இவ்வுதவி கிடைத்துள்ளதாக அமைச்சுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சீனாவினால் உதவியாக வழங்கப்படவுள்ள இந்நிதித் தொகையில் 25 கோடி ரூபா அன்பளிப்பாகவும், மிகுதிப் பணம் 40 கோடி ரூபாவும் 30 வருட கால வட்டியிலாக் கடனாகவும்வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளுக்கு சீனா முழு ஆதரவை தெரிவிக்கும் என அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-08)

### சாவகச்சேரியில்

## குறைகேள் நிவர்த்தி சேவை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் குறைகேள் நிவர்த்தி சேவையானது நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00மணிமுதல் 2.00 மணிவரை சாவகச்சேரிமக்கள் வங்கிக் கிளையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாடிக்கையாளர் தங்கள் கடன்களை மீள பெற்றுக் கொள்வது தொடர்பாகவும்,ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-06)

## அமெரிக்கத்துறவி சுவாமி ஸ்ரீமத்தந்திரதேவ யாழ்.விஜயம் செய்துள்ளார்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வரும் இலங்கையில் சமயப்பணியாற்றுபவருமான இந்து சமயத்துறவி சுவாமி ஸ்ரீமத் தந்திரதேவ மகராஜ் யாழ்.விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஆறுதினங்கள் தங்கியிருக்கும் சுவாமிகள் சமயச் சொற்பொழிவுகள், பஜனைகள், பசுப் பாதுகாப்புத் தொடர்பானகருத்தரங்குகள் என்பவற்றில் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில்சொற்பொழிவு, பஜனை,ஆசி வழங்கல் நிகழ்விலும்,

முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, நண்பகல் 12.30 மணிக்கு கொக்குவில் கிழக்கு நாமகள் மகாவித்தியாலயம், மாலை 5.00மணிக்குசுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் சொற்பொழிவு நிகழ்வுகளிலும் சுவாமிகள் கலந்து கொள்வார்.

நாளை முற்பகல் 10.00 மணிக்கு நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் மாலை 3.30 மணிக்கு புங்குடுதீவு சர்வோதயம் சிவன்கோயில் சொற்பொழிவுபஜனைநிகழ்வுகளிலும் அவர்கலந்துகொள்ளவுள்ளார்.

(ஷ)

# இன்று ஒரு தகவல்

## இவை புரியாத புதிர்கள்

'ஒருவர் வந்தார். சார்! தலையைப்பிய்த்துக்கொள்கிற மாதிரி ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்கள்' என்றார், 'இப்போதுதினமும்அப்படித்தானே சார் நடந்துகொண்டிருக்கிறது' என்றேன். 'இருந்தாலும் அது போதாது சார்! இன்னும் கடுமையாக வேண்டும்' என்றார். அவர் மிகவும் அறிவு பூர்வமான ஒரு ஆசாமியாகத் தெரிந்தார், சரி... இவரை இன்றைக்கு முடிந்த அளவுக்கு குழப்பிப் பார்க்கலாம் என்று ஆரம்பித்தேன். அவரைப் பார்த்தே ஒருகேள்வி கேட்டேன், 'சார்! 'நான் சொல்வதெல்லாம் பொய்' என்று ஒருவன் சொல்கிறான். அது உண்மையா? பொய்யா?' என்றுகேட்டேன்.

அவர் கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தார். 'அதுதான் 'நான்சொல்வதுபொய்' என்று அவனே சொல்கிறானேசார்.. பின்பு என்ன சந்தேகம் அது பொய் தானே' என்றார். 'சரி.. அவன்சொல்வதுபொய் என்று சொல்கிறீர்கள். அவன் என்ன சொல்கிறான். நான் சொல்வதுபொய் என்கிறான். அப்படியென்றால்அவன்பொய் என்றுசொல்வது பொய்! அது உண்மைஎன்றுதானேஆகும்!' என்று ஆரம்பித்தேன். அவர் லேசாகத் தலையைச் சொறிய ஆரம்பித்து விட்டார். கச்சேரிகளை கட்ட ஆரம்பித்து விட்டதுஎன்பதைப் புரிந்துகொண்டேன்.

இன்னொரு கதை சொல்கிறேன்கேளுங்கள்என்று ஆரம்பித்தேன், ஒரு புத்திசாலியான பெரியவர். அவர் ஏதோ தப்புப் பண்ணி விட்டார். விசாரணை பண்ணினார்கள். எல்லாம் முடிந்ததும் கடைசியாக நீதிபதி அவரைப் பார்த்துச் சொன்னார். 'உங்கள்கடைசி விருப்பத்தைச் சொல்லலாம். ஆனால் ஒருவிஷயம், நீங்கள் உண்மையைச் சொன்னால் உங்களைத் தூக்கிலே போடுவோம். பொய் சொன்னால் உம்முடைய தலை வெட்டப்படும்' என்றார்நீதிபதி. அந்தப் புத்திசாலியான பெரியவர் உடனே, 'அப்படியானால் என் தலைவெட்டப்படட்டும்' என்றார்.

இதைக் கேட்டதும் தண்டனையை தள்ளிவைத்துவிட்டார்கள். ஏன் தெரியுமா? அவர் தலையை வெட்டிவிட்டால். அவர் செய்த குற்றம் உண்மை என்று ஆகும். அது உண்மை என்று ஆகினால் அவரைத் தூக்கில் போட்டிருக்க வேண்டும் சரி அவரைத் தூக்கில் போடலாம் என்றால் அப்போது அவர் சொன்னது 'பொய்' என்று ஆகிவிடும், அதனால் அவர் தலைவெட்டப்பட்டிருக்க வேண்டும். இப்போது அவரை என்ன செய்வது என்று என் எதிரில் உட்கார்ந்திருந்தவரைக் கேட்டேன். நிஜமாகவே அவர் இப்போது குழம்ப ஆரம்பித்திருந்தார். ஒருமாதிரியாக என்னைப் பார்த்தார். இதற்கு நான் என்ன செய்ய முடியும். அவர்தானே இது மாதிரித் தகவலைக் கேட்டார்?

இப்போது நான் சொன்ன உதாரணங்கள் ஏற்படுத்துகிற குழப்பம் இருக்கிறது பாருங்கள்... அதற்குப் பெயர்தான் முரண் உரை அல்லது புரியாத புதிர். அறிவியல் துறையிலும் இதுமாதிரிச்சிக்கல்கள் ஏற்படுவது உண்டாம். சமீபத்தில் ஒரு கட்டுரை படித்தேன், அதிலே அதைப்பற்றி நிறையச் சொல்லியிருந்தார்கள். அவை ஒரு பக்கம் இருக்கட்டும். அப்போது எதிரில் உட்கார்ந்திருக்கிறாரே நண்பர் அவருக்குத் திருப்தியாக இருக்கிற மாதிரி ஒரு கதை சொல்வோம்.

ஒரு ஆள் ஒரு பெரியகடைக்குள் நுழைந்தார். அது ஒரு களஞ்சியசாலை, அவர் எதையோயாருக்கும் தெரியாமல் எடுத்து விட்டார் போலிருக்கிறது. அவரைக் கூப்பிட்டுத் தனியாக விசாரித்திருக்கிறார் அந்தக் கடைக்காரர். அந்த ஆள் அவரைப் பார்த்து, 'அதுசரி! கடைக்காரரே! நான் உங்கள் கடைக்குள் நுழைந்ததை நீங்கள் பார்த்தீர்களா?' என்றார், 'ஆமாம்' பார்த்தேன் என்றார் அவர், 'சரி! இதற்கு முன்னர் என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? என்று கேட்டார் அந்த ஆள். இல்லை என்றார் கடைக்காரர். அப்படியென்றால் கடைக்குள் நுழைந்தது நான்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்றார் அந்த ஆசாமி.

கடைக்காரர் தலையைப் பிய்த்துக் கொள்ள ஆரம்பித்தார். இந்தக் கதையைச் சொல்லிவிட்டு எதிரில் இருந்த நண்பரைப் பார்த்தேன். ஆரம்பத்தில் தலையைப்பிய்த்துக் கொள்கிற மாதிரித் தானே தகவல் கேட்டார். இப்போது அவர் சட்டையையும் சேர்த்துப் பிய்த்துக் கொண்டு தெருவில் இறங்கிப் போய்க் கொண்டிருந்தார். அனேகமாக இனிமேல் இந்தப் பக்கம் வரமாட்டார் என்று நினைக்கிறேன்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# பாலக்காட்டு வெட்டை மக்களை மீளக்குடியமர்த்த துரித நடவடிக்கை

(மட்டக்களப்பு)

கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் அனர்த்தங்களால் வாழைச்சேனைபாலக்காட்டு வெட்டைக் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து அந்நூர் தேசிய கல்லூரியில் வாழ்ந்துவரும் குடும்பங்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில்நடைபெற்ற சமாதானக் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சமாதானக்குழுவினர்பாலக்காட்டு வெட்டை கிராமத்துக்குசென்று பார்வையிட்ட பின் நேற்றுமுன்தினம்நடைபெற்ற இக்கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்இடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து சென்றவர்களை குடியேற்றும் நடவடிக்கைகள் துரிதமாக்கப் பட்டுக் கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-08)

# சமாதானத்தைச் சீர்குலைக்கும் இனவாத அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட வேண்டும்

## பிரதமருக்கு அவசர மகஜர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் சமாதான நடவடிக்கைகளை சீர் குலைக்கும் வகையில் செயற்பட்டு வரும் இனவாத கட்சிகளை தடை செய்ய வேண்டுமென அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முன்னணியின் தலைவர் எஸ். யோகநாதன் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரில் தற்போதைய சமாதான முயற்சிகள் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மக்கள் மனதில் நிறைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த காலங்களில் இடம் பெற்று வந்த போர் மற்றும் அனர்த்தங்களினால் தொழிலாளர்கள் உட்பட அனைவரும் பல இன்னல்களை அனுபவித்து வந்துள்ளனர்.

இவ்வாறான அழுத்தங்களிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசை தேர்ந்தெடுத்துள்ளனர் எனவும் அம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(க-8)

## இன்று கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப.5.00 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட பொது அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவற்றுடனான கலந்துரையாடல் இன்று பி.ப.4 00 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-3)

## படகு சேவை இடைநிறுத்தம்

(நெடுந்தீவு)

திருத்தவேலைகள் காரணமாக குறிகட்டுவான், நெடுந்தீவு இடையிலான குமுதினி படகு சேவை கடந்த 26 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(ஷ-250)

## ஊழியர் பற்றாக்குறை

(கம்பர்மலை)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஊசிபோடும் பிரிவில் ஊழியர்கள் பற்றாக்குறையாக இருப்பதனால் மக்கள் காலதாமதமாக வீடு திரும்பவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

(க-253)

## பிரதேசசபைக்கு புதியவாகன தரிப்பிடம்

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 4 இலட்சம்ரூபா செலவில் புதிய வாகனத்தரிப்பிடம் ஒன்று துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் இப்பிரதேசசபைக்கு ஓர் வாகனத் தரிப்பிடம் இல்லாமையால், சபையின் உத்தியோகத்தர், ஊழியர்கள் பெரும் சிரமம் அனுபவித்துவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-232)

## நெல்லியடியில் இன்று கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி உழவுஇயந்திர உரிமையாளர்களுக்கான கூட்டம் இன்று பி.ப. 3.மணிக்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவினர்இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-23)

# வை. கோ. கைதின் பின் ஈழத்தமிழர் குறித்தஎழுச்சி தமிழகத்தில்ஏற்பட்டுள்ளது

## வணிகர் கழக உப தலைவர்

(யாழ்ப்பாணம்)

தமிழக அரசினால் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி கைது செய்யப்பட்டிருப்பது தமிழர்களையும், ஈழப்போராட்டத்தையும் நசுக்கும் ஒரு செயல்.

வை.கோ.கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து கடந்தவெள்ளிக்கிழமையாழ். வணிகர் கழக ஏற்பாட்டில் கறுப்புப்பட்டிப் போராட்டம் இடம்பெற்றது.

பின்னர் பிற்பகல் வேளை வணிகர் கழக யாழ். அலுவலகத்தில் தலைவர் இ. ஜெயசேகரன் தலைமையில் கண்டனக் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது.

இதில் உரையாற்றிய வணிகர் கழக உபதலைவர் த.சற்குணராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழர்கள் எங்கெல்லாம் துன்பப்படுகிறார்களோ அவர்களுக்காக குரல் கொடுத்த தன்மானத் தமிழர்வை.கோ. அரசியல் வாதிகள் சுயநலவாதிகள்என்ற வரையறைக்கு அப்பாற்பட்டு செயற்படுபவர்களில் இவரும் ஒருவர்.

தனக்கு ஆபத்து காத்திருக்கிறது என்பதை அறிந்திருந்தும் ஈழத்தமிழர்களுக்காக அஞ்சாது குரல் கொடுத்த உத்தமர்.

வை.கோ.வைக் கைது செய்வதன் மூலம் போராட்ட முனைப்பை முறியடித்து விடலாம் என்று தமிழக அரசு கருதினால் அது தவறு.

இவரின் கைது இன்று தமிழகத்தில் ஈழத்தமிழர் பற்றிய எழுச்சியை உண்டாக்கியிருப்பதே யாதார்த்தம் என்று குறிப்பிட்டார்.

(உ-2,6)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்த கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவசரகாலத்தடைச்சட்டம் பயங்கரவாதத்தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின விசாரணைகளைஇயன்றளவு விரைவாக நடத்தி சட்டமா அதிபர் கமலசபேசனிடம் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர், கடந்த4மாதங்களில் 203 தமிழ்க்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளமையும்.

களுத்துறை, மட்டக்களப்பு, வெலிக்கடை, யாழ்ப்பாணம் ஆகிய சிறைச்சாலைகளில் இன்னும் 386 பேர் தடுத்து வைக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவ காலங்களில் குடிநீர் வழங்க அன்பர் முன்வருகை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ காலத்தில் வருகை தரும் பக்தர்களின் நன்மை கருதி அவர்களுக்கான குடிநீர் வசதிகளைச்செய்துகொடுப்பதற்கு அன்பர் ஒருவர் முன்வந்துள்ளதாக யாழ். மாநகர முதல்வர் செ. கந்தையன் தெரிவித்தார்.

உற்சவ தினங்களில் குடிநீர் வழங்குவது பற்றி முதல்வருடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே இவ்விணக்கம் ஏற்பட்டுள்ளது. இவர் 10 பவுஸர் கொள்கலன் நீரை வழங்க முன்வந்துள்ளார்.

திருவிழாக் காலங்களில் மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் பொதுமக்களும் தம்மாலான உதவிகளைச் செய்யலாமெனவும் முதல்வர் மேலும் தெரிவித்தார்.

(ஷ-6)

## இந்தோனேசிய முன்னாள் அதிபரின் மகனுக்கு 15 ஆண்டு கால சிறை

(யகார்த்தா)

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுஹாட்டோவின் இளைய மகனுக்கு அந்நாட்டு உயர்நீதிமன்றம் 15 ஆண்டு கால சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரை கொல்ல உத்தர விட்டமை, சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்தமை ஆகியவற்றுக்காக இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொல்லப்பட்ட நீதிபதி சுஹாட்டோவின் மகனுக்குகுற்றச்சாட்டுக்களின் பேரில் தண்டனை வழங்கியதாலேயேநீதிபதியை இவர் கொலை செய்ய ஏவியிருந்தார் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (உ-8)

## ரஷ்ய அணு நீர்மூழ்கிகப்பல் நீரில் மூழ்க காரணம் எரிபொருள் கசிவே

(மொஸ்கோ)

ரஷ்யாவின் அணு நீர் மூழ்கிக் கப்பலான ஹேர்ட்ஸ் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் நீரில்மூழ்கக்காரணம் எரிபொருள் கசிவே என்பதை ரஷ்ய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

மேற்படி கப்பலானது பிரான்ஸ் கடலில் மூழ்க எதிரி நாடொன்றின் கப்பல் மோதியதால் ஏற்பட்ட எரிபொருள் கசிவே காரணம் என்ற கோணத்தில் புலனாய்வை நடத்திய ரஷ்யஅரசுதற்போது இம் முடிவுக்கு வந்துள்ளது.

மேற்படி கப்பல்மூழ்கடிக்கப்பட்டபோது அதில் பணியாற்றிய 118 பேர் நீரில் மூழ்கி இறந்தமைகுறிப்பிடத்தக்கது. (உ-8)

## மலேசிய வட எல்லையில் பாதுகாப்பு ஏற்பாடு

(கோலாலம்பூர்)

ஆயுதக்கடத்தலை தடுக்கும் வகையில் மலேஷியாவின் வடக்குப் புறத்தில் உள்ள எல்லைப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாய்லாந்துடனான எல்லைப் பகுதியில் குடிவரவு அலுவலர்களுடன் ஆயுத மேந்திய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளனர்.

தாய்லாந்தின் சடுன் மாகாணத்திலும் மலேஷியாவின் பெனாங் மாகாணத்திலும் பெருமளவு ஆயுதங்கள் அண்மையில் கைப்பற்றப்பட்டமையை அடுத்தே இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-3)

## லண்டனில் உள்ள இந்திய தூதரகம் முன் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

தமிழக பொலிஸாரினால் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் விடுதலை செய்யக் கோரியும் நேற்று முன் தினம் லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழர்களால் நடத்தப்பட்டது. மனித உரிமைக் குழுக்கள், தமிழ் மக்களின் குரல் என்ற அமைப்பினரே இவ் ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இந்தியத் தூதரகத்தில் உள்ள உயர் அதிகாரியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (வ)

## ஆப்கானிஸ்தானில் உள்ள மகளிர் நிலையங்களுக்கு அமெரிக்கா நிதியுதவி

# ஈராக் ஜனாதிபதியை பதவி கவிழ்க்க அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம்

## எதிர்க்கட்சிகளைப் பேச்சுக்கு அழைப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் ஜனாதிபதியை பதவி கவிழ்ப்பது குறித்து ஆராய அந் நாட்டு 6 எதிர்க்கட்சிகளை அமெரிக்கா முதல் தடையாக பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்துள்ளது.

ஈராக்கின் ஜனாதிபதி சதாமை பதவி கவிழ்ப்பதற்காக அமெரிக்க நிர்வாகம் பல்வேறு தந்திர உபாயங்களை கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் எதிர்க்கட்சிகளை இவ்வாறு அழைத்திருப்பதன் மூலம் சதாமைப் பதவி கவிழ்க்க அமெரிக்கா பாரிய திட்டம் தீட்டி இருப்பதாக செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை இப் பேச்சுவார்த்தைகள் அமெரிக்க வெள்ளை மாளிகையில் அடுத்த மாதமளவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், எதிர்க்கட்சிகள் அமெரிக்காவின் அழைப்புக்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (உ-8)

## தலைதுண்டிக்கப்பட்டசடலம் அமெ. பத்திரிகையாளரது

### டி. என்- ஏ. பரிசோதனை தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் கராச்சி நகரில் தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் கடந்த மே மாதம் அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல்பேள் (வயது38) என்பவருடையது என டி.என்.ஏ. பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேள் பாகிஸ்தான் கராச்சி நகரில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த போதே கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி கடத்திகொல்லப்பட்டார் என்றதும் ஏற்கனவே தெரிந்ததே.

இதேவேளை இவரது கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த பிரிட்டிஷ் பிரஜையான அஹமட் ஓமர்சையீட் ஷேக்கிற்கு பாகிஸ்தானின் பயங்கரவாத தடுப்பு சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளதுடன்,

அவருடன் குற்றம் சாட்டப்பட்டிருந்த பஹத நசீம், சல்மான் சாகிப், ஷேக் அடில் ஆகியோர் மீதான குற்றங்களும் நிரூபிக்கப்பட்டிருந்ததால் இவர்களுக்கு 25 ஆண்டு கால ஆயுள் தண்டனையை அந் நீதிமன்றம் வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-08)

## இந்தியாவில் கடும் மழை 2 வாரங்களில் 82 பேர் பலி

(புதுடில்லி)

பீகார், அஸாம் ஆகிய இரு மாநிலங்களிலும்மழை காரணமாகஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் இதுவரை சுமார் 82 பேர் பலியாகியுள்ளனர். கடும் வெள்ளத்தின் காரணமாக மேலும் பலர் இறந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசங்களில் மீட்புப் பணியை நடத்துவதற்கு இராணுவம் அமர்த்தப்பட்டிருப்பதுடன், இராணுவத்துக்கு உதவியாக 4 விமானப்படை உலங்கு வானூர்திகளும் 4 படகுகளும் அமர்த்தப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் சுமார் 20 நாட்களுக்கு மேலாக மழை பெய்து வருவதாலும் வெள்ளம் மந்தமாக வடிந்து வருவதனாலும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் இராணுவத்தினர் மிகுந்த சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

இதேவேளை, வெள்ளம் நிரம்பியுள்ள பகுதிகளில் அணைக்கட்டுக்கள் உடைக்கப்படும் அபாயமுள்ளதாகவும் அவ்வாறு நிகழ்ந்தால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் எனவும் அச்சந் தெரிவிக்கப்படுகிறது. (உ-19)

**மாணவர்களிடையே. . .**

மான கெடுதியின் கொடூரத்தை வெளிப்படுத்துதல்.

(3) ஆசிரியர்களையும், மாணவர்களையும் போதை வஸ்து துஷ்பிரயோகம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடவும், அவர்களது சூழலில் மதிப்பீடுகள் செய்து, புள்ளி விபரம்

## ஆசிய- பசுபிக் மாநாடு விரைவில் இடம்பெறும்

(பாங்கொங்)

அமெரிக்கா, சீனாவை உள்ளடக்கிய ஆசிய- பசுபிக் பிராந்திய மாநாடு விரைவில் புருணையில் இடம்பெற உள்ளது.

பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் தொடர்பாக இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் குறிப்பாக இந்தியா- பாகிஸ்தான்முறுகல் நிலையும் பிலிப்பைன்ஸில் முஸ்லிம் தீவிரவாதிகளின் ஆதிக்கம் தலைதூக்கியுள்ள நிலை குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இன்னும் ஆசிய- பசுபிக் அமைப்பில் அங்கத்தவர்களாக இணையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஒன்பது வருடம் பழமையான இவ் அமைப்பு பயங்கரவாத ஒழிப்பிற்காக எதுவிதபங்கும் ஆற்றவில்லை என குற்றஞ்சாட்டப் பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-08)

## அமெரிக்க அராபியர் வாஷிங்டனில் கைது

(வாஷிங்டன்)

பன்னிரண்டு மில்லியன் டொலர்கள் பெறுமதியான

செப்டெம்பர் 11 ஆம்திகதிச் சம்பவத்திற்குப் பின்னர்முஸ்லிம்விரோதஉணர்வுமேலோங்

# அமெரிக்கா நிதியுதவி

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் உள்ள மகளிர் நிலையங்களுக்கு அமெரிக்கா 14 இலட்சம் டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஆப்கானிஸ்தானியப்பெண்கள் தமது செயற்பாடுகள் பற்றிய ஆலோசனைகளை நடத்துவதற்கும் சுகாதார வசதிகளைப் பெறுவதற்கும் தொழில் ரீதியான பயிற்சிகளை வழங்குவதற்கும் இந் நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

மேலும் பல மகளிர் நிலையங்களை ஆப்கானிஸ்தானின் 32மாநிலங்களிலும் நிறுவி பெண்களின் தேவைகளை நிறைவேற்றப் போவதாக அமெரிக்க மகளிர்விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-8)

# தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிக்கு எழுத்தாளர் விருது

(ஜொகனஸ்பேக்)
இருபதாம் நூற்றாண்டில் ஆபிரிக்காவின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவராக தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஆபிரிக்காவில் சிறந்த எழுத்தாளர்களாக100 பேர் தெரிவு செய்யப்பட்ட போதே அவர்களில் ஒருவராக மண்டேலாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கேப்டவுணில் நடைபெற்ற சிறந்த எழுத்தாளர்களுக்கான விருது பெறும் வைபவத்தில் கலந்துகொண்டுதனதுவிருதை பெற்றுக்கொண்டமண்டேலா அங்கு எழுத்தாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது,

ஆபிரிக்காவை புனரமைப்பு செய்வதில் எழுத்தாளர்களும், கலைஞர்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

ஆபிரிக்காவில் ஏற்பட்டுள்ள வறுமைக்கும், பட்டினிக்கும் குடியேற்ற ஆதிக்கத்தை இனிமேல் குற்றம் சாட்டுவதில்எவ்வித பயனும் இல்லை, எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (8)

கள் செய்து, புள்ளி விபரம் தொகுத்து, 'தகவல் மையத்'திற்கு கொடுக்கலாம்.
(4) இரு வாரங்களுக்கு ஒரு முறை புனர்வாழ்வு சிகிச்சை நடத்தல்.
(5) பாதிக்கப்பட்ட மாணவர்களை அப் புனர்வாழ்வு சிகிச்சைக்குச் சென்று வரும்படி தூண்டுதல்.
6) நாடகம், தொலைக் காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், போதைப் பொருள் துஷ்பிரயோகத்தின் கெடுதியான தாக்கங்களை எடுத்துக் காட்டும் பண்பாட்டு செயற்திறன்கள் முதலியனவற்றை ஒழுங்குபடுத்துதல்.
(7) பாடசாலைச் சூழலில் வாழும் எல்லாப் பிள்ளைகளினது பெற்றோரும் சேர்ந்து 'போதைப் பொருள் துஷ்பிரயோக எதிர்ப்பு பெற்றோர் சங்கம்' ஒன்று (பா. அ. சங்கத்தை விட), அமைத்தல்.

ஒவ்வொரு பிள்ளையின் தனிப்பட்ட தேவைக்கும், முதிர்ச்சிக்கும் ஏற்ப ஒரு கற்கும் பிரிவினில் அவன் / அவளை சேர்த்து, மாணவர்களின் தொடர்ச்சியான வளர்ச்சியை விருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அமைப்பாக பாடசாலை உள்ளதால், அது போதைப் பொருள் துஷ்பிரயோகம் செய்வதைப் போராடி எதிர்க்கச் சிறந்த இடமாக உள்ளது. ●

டொலர்கள் பெறுமதியான போலிக் காசோலைகளுடன் இந்தோனேஷிய விமானத்தில் வந்திறங்கிய அமெரிக்க அராபியர் ஒருவர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜோர்தானைப் பிறப்பிடமாக கொண்ட இவர் ஜோர்தான் அரசின் இரகசியத் தகவல் சேகரிப்புப்பிரிவில்கடமை புரிந்துள்ளார்.

கியமையினாலேயே தான் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அல்கெய்டா இயக்கத்துடன் இவருக்கு தொடர்புகள் இருப்பதாக அமெரிக்காவின் பெடரல் வழக்குத் தொடுநர் இவர் மீதுகுற்றம்சுமத்தியதை இவரின் சட்டத்தரணி நபிள் அயாத் மறுத்துள்ளார். (க-3)

# அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இந்தியா விஜயம்

(புதுடில்லி)
எட்டு ஆசியநாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் முதல்கட்டமாக நேற்றுமுன்தினம் மாலை இந்தியா வந்து சேர்ந்தார்.

மலேசியாவிலிருந்து குறுகிய கால விஜயத்தின் கீழ்சுமார் 19 மணித்தியாலயங்கள் புதுடில்லியில்தங்கியிருந்துகாஷ்மீர் பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் பவல் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

மேற்படி பேச்சுவார்த்தையில்இந்தியவெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்க, துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி தேசிய பாதுகாப்புஆலோசகர் விஜய்மிக்ஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, தீவிரவாத ஆதரவு நடவடிக்கைகளை நிறுத்துமாறு பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் என இந்தியத் தரப்பு அதிகாரிகள் பவலிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்கா மீதான செப்ரெம்பர் 11 பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் கொலின்பவல் 3ஆவதுதடவையாக தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

இவருடன் அமெரிக்கப்பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவும் வந்துள்ளார்.

இந்தியாவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு இவ்விருவரும் நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளனர். (க-8)

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்

குறள்

வலம்புரி

## ஜே.வி.பிக்கு புரியாது!

நாட்டில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் அறிக்கைகளையும், விளம்பரங்களையும் பிரசுரித்த பத்திரிகைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஜே. வி. பி அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் ரீதியாக ஜே. வி.பி வைத்த வழக்குகளில் பல. அவற்றுக்காக அக்கட்சி மேற்கொண்ட செலவினங்களைத் தர்ம காரியங்களுக்காக செலவழித்திருந்தால் கௌதம புத்த பிரான் மகிழ்ந்திருப்பார். எதற்கெடுத்தாலும் வழக்கு வைக்கும் ஜே. வி.பிக்கு நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பின் தோல்விகள் கூட மகிழ்வையும் மனஆறுதலையும் வழங்குகிறது போல் தெரிகிறது. அந்த ஆறுதலை எதிர்பார்த்தே புலிகளின் அறிக்கைகளைப் பிரசுரித்த பத்திரிகைகளுக்கு எதிராக ஜே.வி. பி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

இலங்கையில் தரை கடல், ஆகாய மார்க்கங்களில் பெரும் பலம் படைத்த புலிப்படை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டு இலங்கை அரசும், முப்படைகளும் செயற்படும் போது ஜே.வி.பி புலிகளின் அறிக்கைகளை வெளியிட்ட பத்திரிகைகளுக்கு வழக்கு வைக்கப் போவதாக அறிவித்திருப்பது 21 ம் நூற்றாண்டின் மிகப் பெரிய முட்டாள் தனமான செயலாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஒருசிலர் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களுக்கு உடனடியாக நீதிமன்றங்கள் பிணை அனுமதி வழங்கியதை ஜே.வி.பி அறியாதது வேதனைக்குரியது.

நாட்டில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்போடு பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வேயில்லை என்ற முடிவுக்கு அரசு மட்டுமன்றி உலகம் முழுவதும் உணர்ந்திருக்கும் இவ்வேளையில் ஜே. வி. பி நாட்டுக்கு நல்லதைச் செய்யாமல் தேவையற்ற விடயங்களில் தனது மனித மூலதனத்தைச் செலவிடுவது இலவசக் கல்வியின் பயன்பாட்டைக் குறைத்துக் காட்டுவதாக அமையும் என்பதோடு நீதிமன்றங்களுக்கும் வேலைப் பளுவை அதிகரிக்கும்.

# மாணவர்களிடையே போதை வஸ்து பாவனை தடுப்பதற்கான நடவடிக்கைகள் அவசியம்

'பாடசாலைகளில் போதைப்பொருள் துஷ்பிரயோகம்' எனும் தலைப்பிலான சர்வதேச மாநாட்டில் ஓய்வு பெற்ற பேராசிரியை

திருமதி நவமணி செல்வராஜா ஆற்றிய 'பாடசாலைகளில் போதைப்பொருள் துஷ்பிரயோகம் தடுப்பில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்கு' எனும் உரையின் தமிழாக்கம்.

மருந்துகளை வைத்தியர்களினால் கொடுக்கப்பட்ட முறைப்படி பாவிப்பது மனித குலத்திற்குமிக்க நிலை சக்தியிருந்து (Potential), நோயிலிருந்து விடுவிப்பதற்கும் குணமடையும் தன்மையை உயர்த்தி வைப்பதற்கும் உதவும்,

போதைப் பொருள் பாவிப்பது பிரஜைகளின் சுகாதாரத்தை பாழ்செய்தும், நிறுவனங்களின்பொருளாதாரத்தின் அஸ்திவாரத்தை தெரியாத வண்ணம் கெடுக்கின்றது.

இத்துஷ்பிரயோகமானது இளம் சமுதாயத்தினரை கூடுதலாக தாக்குகின்றது,

அதனால் எமது தேசத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

போதைப்பொருள்

மதுபானம், புகையிலை, கனபிஸ் (கஞ்சா), ஹெரோயின், தூக்கமாத்திரை, கபேயின் (Cafein) இவை எல்லாம் மனித உடலையும் மனதையும் தாக்குகின்றன. இவை போதைப் பொருட்கள் எனப் பாகுபடுத்தப்படுகின்றன. சில சமுதாயத்தினால் ஏற்கக் கூடியவை, சிலமருத்துவத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. சில சட்டவிரோதமானவை. இப்போதைப்பொருட்களின் தாக்கங்கள் அவற்றை பாவிக்கும் நபர்களிலும் எப்படி பாவிக்கின்றனர் என்பதைப் பொறுத்தும் வேறுபடுகின்றன.

ஆயினும் எப்போதைப் பொருளும் துஷ்பிரயோகம் செய்தால் பிரச்சினைகள் உண்டாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் மதுபானப்பாவனை தான், இளம் சமுதாயத்தினருக்கு அபாயகரமான-போதைப் பொருள் பாவனையில், முதல் தடவையாக ஈடுபடுத்துவதை அறிமுகம் செய்கிறது.

ஏனென்றால் இலங்கையில் மதுபானப்பாவனைக்குதடுப்பு இல்லை. அத்துடன் அது பாவித்தல் ஒரு சமூகவிரோதமான செயல் எனககருதப்படுவதில்லை.

இலங்கையில் அண்மைக் காலம் வரை, போதைப் பொருள் பாவிப்பது அவ்வளவு பாரதூரமானதொன்று எனக்கூற முடியவில்லை. 1980-86களில் ஹெரோயின் வருகையால் இத்துஷ்பிரயோகம் பரவியது.

பல்லினப்போதைப்பொருட்கள் பாவித்தலால், பொதுவாகமதுபானத்துடன்சேர்ப்பதால் சுகாதாரத் தொந்தரவுகள் கொடுக்கின்றன. போதைப்பொருள் சம்பந்தமான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அதிகமாக 18வயதிற்கும் 30வயதிற்கும் இடைப்பட்டவர்களெனப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. (தேசிய ஆபத்தான போதைப் பொருள் கட்டுப்பாட்டு நிறுவனம்).

## திருமதி நவமணிசெல்வராஜா

அளவை மதிப்பீடு

1985 இன் முற்பகுதியில் தென் இலங்கையில் உள்ள கல்விக் கோட்டம் ஒன்றில் தரம் 8 தொடக்கம் 12 வரையிலுள்ள 6205 மாணவர்களின் மருத்துவம் தவிர்ந்த மருந்துகள் பாவனை சம்பந்தமானவற்றில் தங்கியிருக்கும் தன்மை அறிவு நோக்கு புழக்கங்கள் பற்றிய அளவை (Survey) யினால் மதிப்பீடு செய்யப்பட்டது' ஆய்வாளர்கள் இப் பிரதேசத்தை தேர்ந்தெடுத்ததன் காரணம் இது நாட்டுப்புறத்திற்கும் நகரப் புறத்திற்கும் இடையே உள்ள இயல்புகளை பகிர்ந்து கொள்ளப்படுவதனாலேயாகும்.

அத்துடன் இது கொழும்பு மாநகரத்திற்கு அண்மையிலுள்ளதாலும், உல்லாசப் பயணிகளின் வருகை சேர்க்கையிருப்பதாலும் ஆகும். இந்த அளவையிலிருந்து 1.2% மாணவர்கள் ஒருமுறையாவது போதைப் பொருளில் தங்கியிருக்கும் தன்மை உண்டாகக் கூடிய போதைப் பொருட்களைப் பாவித்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. பாவிப்பவர்கள் எல்லோரும் ஆண்களே.

எந்தப் பொருளையாவது ஒரு முறையாவது பாவித்த மாணவர்களில் 63.9% கனபிஸ்ஐயும் 33.3% ஹெரோயினையும் மிகுதி 2.8% ஒப்பித்தையும் பாவித்துள்ளார்கள். 38 7% மாணவர்கள் வினோதத்தால் (Curiosity) 49.3% நண்பர்களின் அழுத்தத்தால் போதைப் பொருட்களை பாவித்துள்ளனர். போதைப் பொருள் பாவித்தவர்களில் 2.7% முதல் முறையாக தமது 12 வயதிற்கு முன்னர் பாவித்துள்ளனர். 13.3% 12 இற்கும் 16 வயதிற்கும் உட்பட்டவர்களும் மிகுதி 84% 16 வயதாகிய பின்பும் பாவித்துள்ளனர். மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கையான மாணவர்களில் 11.7% மது பானம் பாவித்துள்ளனர். 9% தினர் புகையிலை பாவித்துள்ளனர். இவ்வகையில் இன்னோர் ஆய்வில், ஹெரோயினில் தங்கி உள்ளவர்களில் தனி ஒரு போதைப் பொருள் பாவிப்பவர்களும் பல் போதைப் பொருள் பாவிப்பவர்களும் உள்ளனர் என்பதை வெளிக்காட்டியுள்ளது. அதிக அளவு பாவித்தவர்களில் முக்கியமான போதைப் பொருள் ஹெரோயினாக இருந்தாலும் இவர்களில் ஏறக் குறைய 80%ஆனவர்கள் ஒன்றில் கனபிஸ் ஐப் பாவித்துள்ளனர். அல்லது பாவிக்கின்றனர்.

உல்லாசப் பயணிகளும் அங்காடி வியாபாரிகளும்

கனபிஸ் முதல் பாவித்தலை மூலாதாரமாக அறிமுகப்படுத்தப்பட்டமை 80% ஆனவர்களுக்கு நண்பர்கள் மூலமாக இருந்தது. உல்லாசப் பயணிகளும் போதைப் பொருட்கள் விற்கும் அங்காடி வியாபாரிகளும் இதற்கு மூலகாரணமானவர்கள்,

வளரும் பிராயமானது (Adolescence) முதிர்ச்சி அடைவதற்கு உடல் நிலை மாறுதல் ஒருகாரணமாகும். அப்பொழுது மனப் பாங்குகள் பெறுமதி நடத்தை மாதிரிகள் மாறுகின்றன. அது ஒரு கடினமான பருவம் ஆகும். மனப் பாங்குகள் மாற்றம் அடையும் பொழுது பிள்ளைகளைப் புரிந்துஅதற்குஏற்றவாறுசரிப்படுத்தினால் அன்றி அவர்கள் பெற்றோருடன் ஒத்துவாழ மாட்டார்கள். அத்தோடு, பெற்றோரினாலும், பாடசாலையில்நண்பர்களினாலும் நெருக்கடிகள் இருக்கும். அவர்கள் வியாகூலம் (anxiety) நெருக்கீடு (Stress) பரீட்சை இறுக்கங்கள் (tension), தொழில் தேடுதல், முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களை சமாளிக்க வேண்டியுள்ளது. இது தேர்ந்தெடுக்க வேண்டியும் தீர்மானங்கள் எடுக்க வேண்டியுமுள்ள ஒரு மாற்றமடையும் பருவமாகும்.

மாணவனானவன் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் பொழுது. விரக்தியும், சலிப்பும் ஏற்படுகின்றன. இந்நிலையில்தான் யாராவது ஒரு நெருங்கிய நண்பர் அப்பிள்ளைக்கு ஒரு போதைப் பொருளைக் கொடுக்கும் பொழுது, அதன், அழுத்தமும் வினோதத்தன்மையும், மிகப் பெரியதாக இருப்பதால் அப்பிள்ளை அதை உள்ளெடுத்து பரிசோதிக்கிறது.

விளைவுகள்

போதைப் பொருளைத் துஷ்பிரயோகம் செய்வதால் உற்சாகமின்மை, போதை- வெறியிலிருக்கும் பொழுது, விபத்துக்களுக்கு உள்ளாதல், அதிகளவு போதைப் பொருளை ஒரேமுறையில் பாவித்தலால் மயக்க நிலை அல்லது மரணமும் ஏற்படலாம், சமநிலையற்ற மனக் கிளர்ச்சிகள், மனக்குழப்பங்கள் அதற்கு அடிமையாகுதல் அல்லது தங்கியிருத்தலானவை ஏற்படலாம்.

போதைப் பொருட்கள் ஊசிமூலம் உட்செலுத்தப்படலால் தொற்றுதல் மூலம் புண்கள் உண்டாகலாம, குருதி நஞ்சாதல், செங்கண்மாரியும், எயிட்ஸ் தொற்றுதலும் ஏற்படலாம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இலங்கையில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்பது, பெற்றோர்-ஆசிரிய சங்கத்தின் இடத்தை 1982 இல் இருந்து எடுத்தது.

பாடசாலை அபிருத்திச் சங்கத்தின் குறிக்கோளகளாவன:

1) பாடசாலையினது கல்வி சம்பந்தமான, பெற்றோர்களினதும் மாணவர்களினதும், அச்சமூகத்தைச் சூழ்ந்த மக்களின்தும் விருப்புகளை விருத்தி செய்தல்.

2) அப்பாடசாலையின் சூழலிலுள்ள மக்களினது வாழ்வில் ஏற்படக்கூடிய விருப்புகளுக்காக, சமூக, பண்பாட்டு பொருளாதார மாற்றங்கள் நடைபெறுவதற்கு ஏற்ற இடமாக, அப்பாடசாலையை ஒரு ஏஜென்ற் (agent) ஆகப்பாவித்தல்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் குறிக்கோள்களிலும், இலக்குகளிலும் இச் சங்கம் பண்பாட்டு சமூக செயற்பாடுகள் பலவற்றில், குறிப்பாக சுகாதாரத்திலும், ஆரோக்கியத்திலும் செயற்திறன்கள் நிறுவுவதற்குமேலும் விரிவாக்கப்பட்டுள்ளன.

பா.அ.சங்கமானது பெற்றோர் பாதுகாவலர், ஆசிரியர் அடங்கியவை அப்பாடசாலையின் அதிபர், தலைவராக உள்ளார்.

பா. அ. சங்கத்தின் குறிக்கோளிலும் செயற்பாட்டிலிருந்தும் பாடசாலையில் போதைப் பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதில் முக்கிய பங்கு அளிப்பதற்கு அது ஒரு மிகச் சிறந்த நிறுவனமாக உள்ளது.

தடுக்கும் வழிமுறைகள்

பா. அ. சங்கமானது போதைப் பொருள் துஷ்பிரயோகத்தை, பின்வருவனவற்றினால் தடுக்க முடியும்.

(1) பாடசாலையின் பாடத்திட்டத்துடன் முக்கியமாக, போதைப் பொருள் துஷ்பிரயோகத் தடுப்புகளைச் சேர்த்தல்.

(2) பாடசாலை வளவில் ஓர் ''தகவல் மையம்'' நிறுவுதல். இம் மையமானது, போதை துஷ்பிரயோகம் பற்றிய விபரம், தனி நபருக்கு போதை விளைவிக்கக்கூடிய அபாயங்கள், போதை பாவிக்கிறார்களா என்பவற்றின் அறிகுறிகள், அவ் அபாயகர

6 ம் பக்கம் பார்க்க

## தினசரி தியானம்

### ஞானதீபம்

விளக்கைப் பிளந்து விளக்கினையேற்றி
விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்கவல்லார்க்கு
விளக்குடையான் கழல் மேவலுமாமே.

-திருமந்திரம்

தேஜோமயானந்தமே யாண்டும் ஒளி வீசும் ஞான விளக்கை என் உள்ளத்தினுள்ளே ஏற்றி வைப்பாயாக,

விவேகமே வடிவெடுத்து ஞான தீபம்பக்தியினின்று பெருக்கெடுக்கும் அமைதியே அதற்கு எண்ணெய். ஈசுவரத் தியானம்அது எரிவதற்கு ஏற்ற நல்லகாற்றாகிறது. இடையறாப் பிரமச்சரியத்தினின்று வரும் பேருணர்வு அத்தீபத்துக்குத் திரியாகிறது. பற்றற்ற உள்ளம் அந்த விளக்கை வைப்பதற்கேற்ற இடமாகிறது. அங்கு ஆசையென்னும் புயல் காற்றடிக்காதிருக்க வேண்டும். ஈசுவர சொரூபம் அத்தீபத்தில் எரியும்ஒளிப்பிளம்பாகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## மன்னார் தச்சனாமடு....

உயிலங்குளம் ஊடாக இராணுவ சோதனைச்சாவடியில் தம்மைப் பதிவு செய்துவிட்டு மடுவுக்குச் சென்றனர். பின்னர் அதில் 12 பேர் கண்டிக்கு உடனடியாகத் திரும்பிவிட்டனர். மிகுதி 5 பேரும் மடுவில் தங்கியிருந்தனர். அவர்களில் மூன்று பேரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள மூவரின் சடலங்களில் ஒருவர் குறித்த ரோசா வானின் சாரதி என்றும் மற்றவர் நடத்துநர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மாவட்ட நீதவான் எம்.இளஞ்செழியன் திரும்பிச் சென்ற 12பேரையும் உடனடியாக நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர் படுத்துமாறு வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தவிட்டுள்ளதுடன் பழுதடைந்த நிலையிலுள்ள மூன்று சடலங்களையும் மருத்துவ பரிசோதனைகளின் பொருட்டு பேராதனையிலுள்ள உடற்கூற்று பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி மரணத்துக்கான காரணத்தை அறிந்து அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறும் உத்தவிட்டுள்ளார்.

நீதிவானின் உத்தரவை அடுத்து நேற்றுமாலையே சடலங்கள் பேராதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (வ)

## அரசிடம்...

விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள சமாதான பேச்சு வார்த்தையை துரிதப்படுத்தும்படி முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முஸ்லிம் மக்கள் தமது பகைமைகளை களைந்து ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

இதன் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை மேலும் ஸ்திரப்படுத்தவும முஸ்லிம்கள் சார்பாக பேரம் பேசும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளவும் முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (த)

## பரத நாட்டிய அரங்கேற்றத்தில் படமெடுத்து ஆடிய நாக பாம்பு

### யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அதிசயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வில், திடீரென அரங்கில் புகுந்த நாக பாம்பொன்று, படமெடுத்தாடி சபையோரை மெய்சிலிர்க்க வைத்தது.

நாட்டிய அரங்கேற்றம் இடம்பெற்றுக் கொண்டுருந்தவேளை, அங்கு திடீர் என்று தோன்றிய நாகபாம்பு இசைலயத்தில் மயங்கி படமெடுத்து ஆடியபின், சபையோருக்கு எதுவித தீங்கும் இன்றி அகன்று சென்றது.இதேவேளை நேற்றய நாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் மயில், பாம்பு நடன நிகழ்வும் இடம் பெற்றமை சிறப்பம்சமாகும். (வ)

## நேரடி...

கவும், இது குறித்து நேரடி விவாதத்திற்கு ஜனாதிபதியால் வரமுடியுமா எனவும் அவர் சவால் விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக ஜனாதிபதிக்கும் சில அமைச்சர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடு நிலவுவது தெரிந்ததே (த)

## பாதுகாப்பு....

யும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். அத்துடன் நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளார். இது எமது அரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். நாம் செல்லும் வழிகள் சரியானவை என்பதனையே இவை உணர்த்துகின்றன.

சமாதானத்துக்கான பயணம் மிகவும் சிரமமானது. எனினும் இலக்கை அடைவதற்கு மனம் தளராது செயற்படுவோம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ரவி-பீரிஸ்...

களின் அடிப்படையில் அவற்றை மீளப் பொறுப்பேற்கப் போவதாகவும் இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்கு மீண்டும் கடிதம் ஒன்றை ஜனாதிபதி அனுப்பி வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த அமைச்சுக்களை பதவி விலக்கும் அதிகாரம் தன்னிடத்தில் உண்டு என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




## அழைப்பிதழ்

யாழ்ப்பாணத்தில்
தமிழகப் பேராசிரியர்களின்
இந்துமதப் பேருரைகள்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில்
தமிழக பேராசிரியர்கள் கே.சேகர், ந.விஜயசுந்தரி
ஆகியோரின்

"அர்த்துமுள்ள இந்துமதம்"

சிறப்புச் சொற்பொழிவுகள்

இடம் : யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றல்
காலம் : இன்று (29.07.2002) திங்கட்கிழமை மாலை 5.00மணி
தலைமை : மாண்புமிகு தி.மகேஸ்வரன் பா.உ
(இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்)
ஆசியுரை : சுவாமி ஆத்மகணானந்தாஜீ மகராஜ்

அனைத்து இந்து, சைவப் பெருமக்களும் திரண்டு வருக!
பயன் பெறுக்!!

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
க.பரமேஸ்வரன், செயலாளர்.
[C/4682]


## அகவை முப்பதில் 176ஆம் நாள் நினைவலைகள்

தாயவள் மடியினில் 29 - 07 - 1972



மண்ணவள் மடியினில் 04 - 02 - 2002

### அமரர் நாகன் கோபாலகிருஷ்ணன் (ரஞ்சன்)


தாயவள் மடியினில் தவழ்ந்த ஆண்டுகள் முப்பது ஆனதோ!
எமைத் தரணிதனில் தள்ளாட வைத்துச் சென்ற நாள் 176 ஆனதோ!
கனவோடும் நனவோடும் எம்மோடு வாழ்பவனே
முப்பதில் நாம் உமை இன்று நினைவு கூறுகின்றோம்.
முந்நூறு ஆனாலும் உன் நாமம் நாம் மறவோம்.
நித்தம் நின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

உன்பிரிவால்துயருறும்,
குடும்பத்தினர்மற்றும்,
மாமனார்.

(5746)


## ஜனசக்தியின் புதிய கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் மிக வேகமாக வளர்ச்சிகாணும் காப்புறுதி நிறுவனமான "ஜனசக்தி காப்புறுதி" தனது புதிய கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பதில் பெருமைப்படுகின்றது.

பிரதேச மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி, சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த புதிய யுகத்திற்கு அழைத்துச்செல்ல ஜனசக்தியின்




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

**Sankunatham**

திங்கட்கிழமை (29-04.ஆகஸ்ட்.2002)

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி 3378 நாதம்:- 22


பக்கம்-02

அரசியல் அலசல்

பக்கம்-08

மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11

மகளிர் உலகம்

பக்கம்-14

சிறுவர் அரங்கம்

பக்கம்-16

சினிமாச் சிதறல்


## பிரதமர் அமெரிக்காவில் பேட்டி
## விடுதலைப்புலிகள் மீது கடும் சீற்றம்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# பிரதமர் அமெரிக்காவில் பேட்டி

# விடுதலைப்புலிகள் மீது கடும் சீற்றம்

இனப்பிரச்சினை தீர்வில் அரசு-புலிகள் மட்டுமன்றி முஸ்ஸிம் பிரதிநிதிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குபற்ற வேண்டுமென்ற கருத்து வலுவடைந்து வருகின்றது. கடந்த 20 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாயின்




முஸ்ஸிம் மக்களை ஒதுக்கி வைத்துக் கொண்டு அதனைச் செய்ய முடியாதென்பதை புலிகளும் உணர்ந்துள்ளனர். அவ்வகையில் அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்போது முஸ்ஸிம் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதாயின் முஸ்லிம்களின் பிரதிநிதி யார் என்ற கேள்வி எழவே செய்கின்றது. சிறிலங்கா முஸ்ஸிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தானே அந்தப் பிரதிநிதி என்று கூறி வருகின்றார். இதற்கு



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அவர் செய்து கொண்ட ஒப்பந்தமும் காரணமாக இருக்கிறது. எனினும் முஸ்ஸிம் மக்களைப் பொறுத்தவரையில் ஏகப்பிரதிநிதி என்ற நிலைப்பாடு அங்கு இல்லை. இதனை நிரூபிப்பதாக அண்மையில் முஸ்ஸிம் தலைவர்கள் சிலர் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளைச் சந்தித்து, முஸ்ஸிம் மக்களின் பிரச்சினை குறித்துப் பேசுவதாயின் அது முஸ்ஸிம் காங்கிரசுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. முஸ்ஸிம்களைப் பொறுத்த வரையில் முஸ்ஸிம் பிரதிநிதிகள் பலர் உள்ளனர். எனவே அவர்களுடனும் பேச்சுக்கள் நடத்த வேண்டுமென கூறியிருந்தார்கள். இதனை ஏற்றுக் கொண்ட விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புப் பொறுப்பாளர் கரிகாலன் எதிர்காலத்தில் தங்களின் நியாயமான கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படும் என உறுதியளித்தார். இது சிறிலங்கா முஸ்ஸிம் காங்கிரசு தவிர்ந்த ஏனைய முஸ்ஸிம் கட்சிகளுக்கு ஆறுதல் அளித்தது.

### ரவூப் ஹக்கீம் சீற்றம்

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஸ்ரீலங்கா முஸ்ஸிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் முஸ்ஸிம் மக்களின் பிரதிநிதி தானே என்ற நிலைப்பாடு

**விதுரன்**


ரவூப் ஹக்கீமிடம் ஏற்பட்டிருந்தது. தலைவர் பிரபாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் முஸ்ஸிம் தலைவர்களில் முதன்மையானவன் என்ற இறுமாப்பும் ரவூப் ஹக்கீமிடம் ஏற்படவே செய்தது.

இந்த இறுமாப்பு ஏனைய முஸ்ஸிம் தலைவர்களிடம் பெரும் கடுப்பை ஏற்படுத்தியிருந்தது. இதன் காரணமாக விடுதலைப்புலிகளுடன் ஓர் சந்திப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற முடிவுக்கு முஸ்ஸிம் தலைவர்கள் வந்தனர். இதன் ஒரு கட்டமே மட்டக்களப்பில் கரிகாலனுடன் இடம்பெற்ற சந்திப்பாகும். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதால் ஏனைய முஸ்ஸிம் தலைவர்களுடன் விடுதலைப்புலிகள் சந்திப்பை ஏற்படுத்த மாட்டார்கள். என்ற நம்பிக்கை ரவூப் ஹக்கீமிடம் நிறையவே இருந்தது.

எனினும் விடுதலைப்புலிகள் முஸ்ஸிம் காங்கிரசு தவிர்ந்த ஏனைய முஸ்ஸிம் கட்சிகளின் தலைவர்களுடனும் பேசசுவார்த்தைகள் நடாத்தியபோது ரவூப் ஹக்கீம் பெரும் சீற்றம் அடைந்தார். தனது சீற்றத்தை வெளிக்காட்டும் வகையில் விடுதலைப்புலிகளை குறைபாட தொடங்கினார். தலைவர் பிரபாகரனுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஒப்பந்தம் செய்துகொண்டது உண்மையாயினும் அ:து ரவூப் ஹக்கீம் தான் முஸ்ஸிம் மக்களின் பிரதிநிதி என்ற எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டதல்ல. மாறாக பாராளுமன்றத்தில் முஸ்ஸிம் மக்கள் சார்பாகக் கூடிய பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ள கட்சி என்ற வகையிலேயே ஒப்பந்தம் ரவூப் ஹக்கீமுடன் செய்யப்பட்டது. எனினும் தலைவர் பிரபாவுடனான ஒப்பந்தத்தின் மூலம் ஏனைய முஸ்லிம் தலைவர்களுக்கு தலையிடி கொடுக்க முனைந்த ஹக்கீம் தோற்று போனமை, புலிகள் மதான எதிர்ப் பிரசாரத்திற்கு அவரைத் தூண்டியது.

### புலிகளின் கோரிக்கையை வலுக்குறைக்கும்

அரசும் விடுதலைப் புலிகளும் செயது கொணட புரிந்துணர்வு ஒபபந்தமானது யுத்த நிறுத்தத்திற்கு வழி கோலியது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட யுத்தநிறுத்தம் நிரந்தரமாக்கப்பட வேண்டுமாயின் சமாதானத்தீர்வு எட்டப்படுவது அவசியமாகும். இதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் சந்திப்பது அவசியமாகும். இத்தகையதோர் சூழ்நிலை



ஏற்படும் போது விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கின்ற மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை எல்லைப்படுத்துவதற்கு முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை மேசையில் இடம்பெறவேண்டுமென அரசு விரும்புகின்றது.

அதேவேளை முஸ்லிம் தலைவர்களும் இச்சந்தர்ப்பத்தை விட்டால் முஸ்லிம் மக்களின் உரிமை பற்றி பேசுகின்ற வாய்ப்பே இல்லாது போய்விடும் எனக் கருதுகின்றனர் இத்தகைய கருத்து நியாயமானது எனினும் அரசாங்கத்தை பொறுத்தவரை முஸ்லிம் தலைவர்கள் ஊடாக விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்ற தீர்வுத்திட்டத்தின் அகலப் பரப்பைக் குறைப்பது நோக்கமாகும்.

### சமாதான முயற்சியில் திடீர் மாற்றங்கள்

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும் அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடாமைக்கு புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கமும், புலிகள் மீதான தடையும் காரணமாக இருப்பதோடு. அதனை விட அரசதரப்பில் இருக்கக்கூடியதான

- ★ புலிகள் மீதான நம்பகத் தன்மை
- ★ அரசிடம் தீர்வுத்திட்டம் எதுவும் கைவசம் இல்லாமை.



- ★ எதிர்க்கட்சிகள மற்றும் பௌத்த பீடங்களின் எதிர்ப்பு
- ★ படைத்தரப்பில் காணப்படும் எதிர்ப்புக்கள்.

போன்ற பல விடயங்களும் காரணமாகவுள்ளது. இத்தகைய நிலையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பிரமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இரு நாட்டுத் தலைவர்களும் நடத்திய பேச்சுக்கள் என்ன என்பது வெளிப்படுத்தப்படவில்லையாயினும் இருநாட்டு வர்த்தக உடனபடிக்கை குறித்தே இருதலைவர்களும் பேசியதாக செய்திகள் பரப்பப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் நடைபெறும்போது அமெரிக்கா சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அந்நாட்டுத்தலைவருடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் குறித்தும் பேச்சு வார்த்தையின் போது அரசு முன்வைக்கின்ற தீர்வுத்திட்டத்தை புலிகள் ஏற்கத்தவறும் பட்சத்தில் அமெரிக்காவின் உதவி எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்தும் நிச்சயமாகப் பேசியிருப்பார்.

### அதிர்ச்சி தந்த பிரதமரின் பேட்டி

சாண்ஏற முழம் சறுக்குவதாக இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைந்துள்ளது. ஏதோ புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இனி அரசு புலிகள் பேச்சுவார்த்தை என எதிர்பார்த்திருந்த வேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமெரிக்க நியூயோர்க் ரைம்சிற்கு வழங்கிய பேட்டி அந்த எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்குவதாக அமைந்துள்ளது.

இருக்கும் மட்டும் இருந்துவிட்டு இறுதி நேரத்தில் காலைவாரி விடுவதாக பிரதமரின் பேட்டி அமைந்துள்ளது என்பது பொதுவான கருத்து.

பிரதமர் ரணிலின் பேட்டி வெளியானதும், நம்பிக்கையோடு இருந்த தமிழ் மக்களிடையே எல்லாம் ஒரு குட்டையில் ஊறிய மட்டைதான், ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன, ஏன் கூட வந்த குரங்கு ஆண்டாலும் நிலைமை ஒன்றுதான் என்ற முடிவை தமிழ் மக்கள் எடுக்க வேண்டியதாய் உள்ளது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு




வார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் எனக் கூறிய பிரதமர் ரணில், அமெரிக்கா சென்றதும் சுருதி மாற்றி வாசித்தது, சமாதானப் பிரியர்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்தது.

### சுருதியை மாற்றும் ஜனாதிபதி சந்திரிகா

அமெரிக்கா சென்ற பிரதமர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை தெரிவிக்க, ஜனாதிபதி சந்திரிகா தனது செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் விடுதலைப் புலிகளுடன் அரசு உடனடியாகப் பேச்சுவார்த்தையை நடத்த வேணடும் எனக் கூறியிருந்தார். வந்தவனைக கேட்டால் சென்றுவிடு என்பான், சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பான் என்ற திரைப்படப் பாடல் போன்று பிரதமரும், ஜனாதிபதியும் தத்தம் ஆட்சி அதிகாரங்களுக்கு ஏற்ப சுருதிகளை மாற்றிக் கொள்கின்றனர்.

### ரணிலின் பேட்டியை சமாளித்த செய்தி

அமெரிக்கா சென்ற பிரதமர்



ரணில் விக்கிரமசிங்கா நியூயோர்க் ரைம்சிற்கு வழங்கிய பேட்டி சமாதானத்தின்பால் நம்பிக்கையை இழக்கச் செய்திருந்த வேளையில், பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மெலிந்த மொறகொட விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து இரண்டுமணி நேரம் பேசியுள்ளார்.

அரசதரப்பு அமைச்சர் ஒருவர் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்த செய்தி சமாதானம் தோற்றுப்போய் விடுமோ என்றிருந்த மக்கள் மத்தியில் மீண்டுமோர் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளதுடன், விடுதலைப் புலிகள் பற்றி அமெரிக்காவில் பிரதமர் தெரிவித்த பேட்டியிலும் ஓர் அலட்சியப் போக்கை ஏற்படுத்தியுள்ளது.

ஆயினும், ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சரவையில், பிரதமர் ரணிலுக்கு நம்பிக்கைக்குரியவரும் அரசியல் திறன் மிக்கவருமான



அமைச்சர் மெலிந்த மொறகொட, ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாசிங்கம் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட திடீர் சந்திப்பு சமாதான முயற்சியில் ஓர் முக்கிய திருப்பம் என்றால் அது மிகையில்லை. எனினும், சந்திப்புக்கள் சுமுக நிலையை ஏற்படுத்துமே ஒழிய அவை சமாதானத்தை ஏற்படுத்தாதென்பது தெரிந்த உண்மை, அவ்வகையில், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடனான அமைச்சர் மெலிந்த மொறகொடவின் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக - பிரதமர் ரணிலின் பேட்டியை சமாளிப்பதாக அமைந்துள்ளதாயினும் அது பிரச்சினைக்கு - தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளுக்கு சரியான தீர்வை முன்வைக்குமா? நாட்டில் தற்போது நிலவும் யுத்த நிறுத்தத்திற்கு நிரந்தர இடம் வழங்குமா என்பதை காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

**வலம்புரி + சங்குநாதம்**
**வவுனியா, கொழும்பு**
**விலை ரூபா:- 17.00**


*மின் பாவனையாளர்களே!*

**NIPPON ஏனஜி பல்பை பயன்படுத்தி உங்கள் மின்சார கட்டணத்தை 5 மடங்காகக் குறையுங்கள்**



| விலை | ஏனஜி பல்ப் | சாதாரண பல்ப் |
|---|---|---|
| 295/- | 11w | 55w |
| 340/- | 13w | 65w |
| 340/- | 15w | 75w |
| 450/- | 18w | 90w |
| 470/- | 20w | 100w |
| 490/- | 22w | 110w |
| 500/- | 26w | 130w |



160V - 240V வரை தொழிற்படக்கூடியது.

மேற்குறிப்பிட்ட ஏனஜி பல்புகள் 1 வருட உத்தரவாதத்துடன் எமது நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.

5 பல்பிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு 10 %கழிவு (15.08.2002 வரை) வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**
11/10B, ஸ்ரான்லி வீதி, (முட்டாஸ்கடைச் சந்தியருகில்)
யாழ்ப்பாணம். T.P.No: 3335

குறிப்பு:– கீழ் குறிப்பிட்ட நிறுவனங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

1. **J.T.I.** No.07, Palaly Road, Jaffna.
2. **J.T.I.** 357, Clock Tower Road, Jaffna.
3. **Sriram Electronics** 105, Stanley Road, Jaffna.
4. **P.R. Communication** 14, Jubilee Bazaar, Jaffna.
5. **Ram CD World Electronic** 220, Stanley Road, Jaffna.
6. **Kinstan Electronics** 62/30, Stanley Cross Road, Jaffna.
7. **Rajan Electronics** Bus stand, Achchuvely.

# இருபதாம் நூற்றாண்டில் கவிதை

இருபதாம் நூற்றாண்டைத் தமிழ்க் கவிதைக்கு ஒரு நற்காலம் என்றே கூறலாம். கவிதைக்கு நல்ல மதிப்பும், நயத்தக்க வரவேற்பும், இந்நூற்றாண்டில் இருப்பதைக் காண்கிறோம். நாளிதழ், கிழமையிதழ், திங்களிதழ், ஆண்டுமலர் முதலிய அனைத்திலும் கவிதைக்கு முதன்மை தரப்படுவதால் அக்கூற்று மெய்ப்பிக்கப்படுகிறது. மேலும் தமிழகத்தின் ஊர்தோறும் நிகழும் இலக்கிய விழாக்களிலும், வானொலியில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கவியரங்கம் தனியிடம் பெறுகிறது.

கவிதையில், ஒரு தனியார்வம் பிறந்திருப்பதால் தக்காரும் எழுதுகின்றனர்; மற்றோரும் முயல்கின்றனர். அதனால் இந்நூற்றாண்டில் கவிதை எழுதுவோர் தொகை பெருகுவதைக் காண்கிறோம். இவருட் சிலர், கவிஞர்களாகவும், பலர் கவிதை எழுதுவோராகவும் புலனாகின்றனர் எவ்வாறாயினும் இந்த நூற்றாண்டைக் கவிதைக்கு ஓர் எழுச்சிக் காலம் என்று துணிந்து கூறலாம்.

## விடுதலைக் கவிதைகள்

இந்நூற்றாண்டில் கவிதைகளைப் பொதுப்பட நோக்கின், அனைத்தும் விடுதலை வேட்கை காட்டுவனவாக, உரிமையுணர்வு ஊட்டுவனவாக அமைந்து கிடப்பதைக் காணலாம். அயலவர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த நாடு விடுதலை பெறப் பிறமொழிச் சூழ்நிலையில் சிக்கித்தவித்த தாய்மொழி தன்னுரிமைபெற. ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகள் என்ற மனப்பான்மை ஒழிந்து, அவர்களும் சரிநிகர் சமமாய் வாழப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் சமப்படுத்தப்பட்டு, மேல், கீழ் என்ற பேதமை துடைக்கப்பட்டு, ஒன்றே குலம் என்ற ஒருமைப் பண்பு வளர்ந்து, சமுதாயம் விடுதலை பெற்றொளிர வழி வகை கூறுவனவாக, உணர்ச்சியும், எழுச்சியும் கலந்த ஆர்வத்தால் உந்தப்பட்டு வெளிவந்தனவாக இக்கவிதைகள் காட்சியளிக்கின்றன. பாரதியாரின் கவிதைககள் முதல் இன்று தோன்றியுள்ள கவிதைகள் வரை நாட்டு விடுதலை, மொழி விடுதலை, சமுதாய விடுதலை என்ற விடுதலை வேட்கைப் பாடல்களாகவே அவை அமைந்து கிடக்கின்ற உண்மையை வெள்ளிய அறிவினரும் தெளிதின் உணர்வர்.

## மூவகைக் கவிதைகள்

மேற்கூறிய விடுதலைப் பாடல்களையன்றி, வேறு பிற பொருள் பற்றிய பாடல்களும் இந்த நூற்றாண்டில் வெளிவந்துள்ளன. ஆயினும், விடுதலைப் பாடல்களே, மக்கள் மன்றத்தில் மிகுதியும் இடம் பெற்று விட்டன. காலமும், சூழ்நிலையுமே அந்நிலையை உருவாக்கின எனலாம். அனைத்தையும் ஒன்று கூட்டி, கருத்து முறையால் கவிதைகளை மூன்று வகைப்படுத்தலாம். அவையாவன; பழமையைப் பின்பற்றுவன, புதுமையை எதிர்நோக்கிச் செல்வன, பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைவன என்பனவாம். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு காணலாம்.

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எழுதிய 'மாரிவாயில்' டாக்டர் வ.சுப.மாணிக்கம் எழுதிய 'கொடைவிளக்கு' முதலிய நூல்கள் பழமையைப் பின்பற்றுவன. இவ்வணியில் செகவீர பாண்டியனார், கா.நமச்சிவாய முதலியார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்பிள்ளை, செய்குத்தம்பிப் பாவலர் போன்றவர் தம் கவிதைகள் சேரும். பாரதியார், பாரதிதாசன் முதலியவர்களுடைய கவிதைகள் புதுமையை நோக்கிச் செல்வன. திரு.வி. கல்யாணசுந்தரனார், சுத்தானந்த பாரதியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, ராய.சொக்கலிங்கனார், வி.துரைசாமி முதலானோர் கவிதைகள் இருமைக்கும் பாலமாக அமைவன.

இனி மொழி நடை, யாப்பு இவற்றால் நோக்கினும் அக்கவிதைகள் முத்திறத்தனவாகவே பாகுபடும். அருஞ் சொற்கள் ஆர்ந்து, யாப்பமைவு நேர்ந்து, மரபு வழியில் நிற்பன ஒரு திறத்தன. எளிய சொற்களை ஏற்று, யாப்பமைவு சிறிது மாறி, மரபுஞ் சிறிது பிறழ்ந்து வருவன மறு திறத்தன. கொச்சைமொழி குலவி, யாப்பமைவு காணாது, மரபை மறந்து செல்வன மூன்றாந் திறத்தன.

## கவிதை நூல் வகைகள்

இனி, இந்நூற்றாண்டில் தோன்றியுள்ள கவிதைகளை, நூல் வகையால் நோக்கின், தனி நிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள், நாடகக் காப்பியம், குழந்தை இலக்கியம், இசைப்பாடல்கள் என ஐந்து பிரிவினவாகப் பிரிக்கலாம். தனிநிலைச் செய்யுள் என்பது தனித்தனிப் பாடல்களின் தொகுப்பாகும். இத்தொகுப்பு நூல்களே இக்காலத்தில் பல்கி வரக் காண்கின்றோம் தொடர்நிலைச் செய்யுளாகிய காப்பிய நூல்கள், தொகுப்பு நூல்கள் தோன்றும் அளவுக்குத் தோன்றவில்லை. அத்துறை தக்கார்க்கே கைவரப்பெறும் என்பதாற் போலும்.

காப்பியங்கள், விரல் விட்டு எண்ணும் அளவுக்கே தோன்றியுள்ளன. பாஞ்சாலிசபதம் (பாரதியார்), பாண்டியன் பரிசு, குறிஞ்சித் திட்டு (பாரதிதாசன்), இராவண காவியம் (புலவர் குழந்தை), சான்றாண்மை (அடிகளாசியர்),அவனும் அவளும் (வே.இராமலிங்கம் பிள்ளை) மேக நாதம்(எஸ்.கே. இராமராசன்), மாங்கனி (கண்ணதாசன்), பூங்கொடி, வீரகாவியம் (முடியரசன்) என்றின்னோரன்ன காப்பியங்களே வெளி வந்துள்ளன. இவற்றுள்ளும் கால வெள்ளத்தால் எவை எவை இழுத்துச் செல்லப் படுமோ? எவை எவை காலத்தைத் தாண்டி நிற்குமோ? அறியோம்.

நாடகக் காப்பியங்களைப் பொறுத்தவரையில் இருபதாம் நூற்றாண்டில் நாம் ஒன்றும் கூற வியலாத நிலையில்தான் உள்ளோம். இத்துறை பற்றி கவிவாணர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. தனிச்செய்யுளில் ஏற்பட்ட ஆர்வமும் காலம் நீளுமே என்ற அச்சத்தால் ஏற்பட்ட பொறுமையின்மையும், இதற்குக் காரணங்களாக இருக்கக் கூடும்.

குழந்தைகளுக்காகப் பாடப்படுகின்ற பாடல்கள் நூல் வடிவிற் சில வந்துள்ளன. பேராசிரியர் மயிலை சிவ. முத்து, பாவலர் பால சுந்தரம், தமிழண்ணல், அழ. வள்ளியப்பா, நாகமுத்தையா, நாரா. நாச்சியப்பன், இரா. இராசகோபாலன், இரா.பொன்ராசன் முலிய கவிவாணர்கள் குழந்தை இலக்கியங்கள் புனைந்து பெருந் தொண்டாற்றி வருகின்றனர். இத்துறையில் பாரதியார் வெற்றி வீரராகக் காட்சி தருகிறார். கவிமணி அவரையும் மிஞ்சி நிற்கிறார். இவர்களைப் போன்ற பழுத்த நல்லறிவாளர் இத்துறையில் ஈடுபடுவாராயின் நல்லுலகில் நாம் வாழ முடியும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாபநாசம் சிவன், சுத்தானந்த பாரதியார், முடியரசன் போன்றோர் இசைப் பாடல்கள் பல புனைந்துள்ளனர். இவை இசைப் பாடலுக்கேற்ற மரபு வடிவம் உடையனவாக அமைந்துள்ளன. திரைப் படத் துறையில் வரும் இசைப் பாடல்கள் பெரும்பாலானவை கவிதைத் தன்மை குறைந்து வடிவின்றி, மரபின்றி மின்மினிகள் போல பளிச்சிட்டு உலா வருகின்றன.

## பரம்பரை உணர்வு

இலக்கியப் பரம்பரை உணர்வு கவிஞர்களிடத்து மிளிர வேண்டிய இன்றியமையாத ஒரு பண்பாகும். தொன்று தொட்டு வளர்ந்து வரும் கவிஞர் பரம்பரையில் நானும் ஒருவன் என்ற எண்ணம் இருந்தால் தான் கவிஞன் சிறப்பெய்த முடியும். முந்தையோரை மதிக்காத கவிஞனும், தந்தையைப் பேணாத தனயனும் ஒரு நிலையினரே. வாழையடி வாழை என வந்த திருக்கூட்டம் எனும் நினைவு கவிஞனுக்கு வேண்டும். அப்பரம்பரை உணர்வை பாரதியாரிடம் காணலாம். பாரதிதாசனிடமும் இதனைக் காணலாம். பாரதிதாசன் பரம்பரையினரிடமும் காணலாம்.

**''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்**
**வள்ளுவர்போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை**
**உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை''**

என்ற பாடல் வரிகளால் பாரதியார் முன்னைப் புலவர்களிடத்தில் வைத்திருந்த நன்மதிப்பும், பரம்பரை உணர்வும் தெளிவாக்கப்படுகின்றன.

பாரதிதாசன்,பாரதிக்குத் தாசன் எனப்பெயர் பெற்றுக் கொண்டமை ஒன்றே அவரிடத்து மிளிரும் பரம்பரை உணர்வை எடுத்துக் காட்டும். மேலும்,

**''திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத்தல் போல்**
**பாரதிப் புலவனைப் பற்றி**
**சிற்சில கூறுவேன்...''**

என்று பாரதிதாசன் பாடுகிறார். பெருமித்ததின் திருவுருவமாக விளங்கிய பாரதிதாசன் பாடும் இவ்வரிகளால் அவர்தம் அடக்க உணர்வும் பரம்பரை உணர்வும் புலனாகின்றன.

**''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - அவன்**
**பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானெடா**
**கேட்டுக் கிறுகிறுத்து போனேனே யடா''**

என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாடும் முறையால் பாரதிபால் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டை நம்மால் உணர முடிகிறது.

## கவிதையும் இலக்கணமும்

பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் பாடல்களில் இலக்கணம் மதித்து போற்றப் பட்டாலும், வளர்ந்து வரும் கவிஞர்கள், வளர்ந்து விட்டதாக எண்ணிக்கொண்டிருக்கும் கவிஞர்கள் எழுதிய பாடல்களில் இலக்கணம் எள்ளி நகையாடப்படுகிறது. இலக்கணம் வேண்டுவதில்லை என்றே வாதிடப்படுகிறது. கல்லார் பலராகி கவிதையுலகில் உலா வருவதால் நேர்ந்த விளைவே இது. கல்லாக் கவிஞர் இலக்கணம் வேண்டா வெனும் பொல்லாக் கொள்கை உடையராகவே இருத்தல் இயல்பு. கல்லார் சொல்லை நல்லோர் ஏற்கார். என்றுமே வாழ விரும்பும் கவிஞர் இலக்கணத்தைப் புறக் கணியார்.

## கவிதையிற் சொல்லழகு

இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள கவிதைகள் பெரும்பாலும் அனைவரும் எளிதிற் பொருளுணரத்தக்க சொற்களால் அமைந்தனவே ஆகும். இதற்குப் பாரதிதாசன முன்னோடியாக விளங்குகிறார். சங்க இலக்கிய நடையில் இருந்து சிறிது சிறிதாக இறங்கி எளிமையின் இறுதிக்கட்டத்திற்கே வந்துவிட்டது இன்றுள்ள கவிதை நடை. மக்கள்அடிமையில்மூழ்கி தாய்மொழியை மறந்து செயலற்றுக் கிடந்த காலம் பாரதியார் காலம். அதனால் அவர்களுக்கு ஆவேச வெறி யூட்ட, உள்ளத்தில் விடுதலைக் கனலை மூட்டக் கவிதைகளைக் கருவியாக்கிக் கொண்டார் அவர். அதனால் கற்றாரும் மற்றாரும் புரிந்து கொள்ளக் கூடிய அவர்கள்வாய் தானே பாடக் கூடிய எளிய நடையமைத்து இசைத்துப் பாடினார். பாரதிதாசனும் பிறரும் அவரை அடியொற்றிப் பாடுவதையே குறிக்கோளாகக் கொண்டொழுகினர்.

பாரதியார் எளிய நடையையே வேண்டுபவராயினும் கவிதைக்குத் தனிநடை கொண்டவராகவே விளங்கினார். அவருடைய உரை நடையில் காணப்படும் எளிமையின் மிகுதியையும், பிறமொழிக் கலப்பையும் செய்யுள் நடையில் காண முடியாது. பாரதியார் நடைக்கும், பாரதிதாசன் நடைக்கும் வேறுபாடு உண்டு. எளிமையே வேண்டுமென்போர் இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

கவிதை நடை எளிமையின் எல்லைக்கே வந்துவிட்டது. இதற்கு மேல் இனிச் செல்ல முடியாது. இறங்கிய நடை இனி நாளுக்கு நாள் படிப்படியாக ஏறியாக வேண்டும். பாரதி மூட்டிவிட்ட மொழியார்வத்தீ எங்கும் பற்றிப் பரந்து ஒளி விடும் காலம் இக்காலம். ஆதாலால் அடிமைக் காலத்தில் வேண்டப்பட்ட எளிமை உரிமைக்காலத்திற்கும் வேண்டுமெனப் பேசுவது வளர்ச்சியைக் குறிக்காது. எளிமை எளிமை எளிமையென பெரு முழக்கம் ஒருபாற் கேட்பினும் மற்றொருபால் அருமையும் வளர்ந்து கொண்டுதான் வருகிறது.

பாமர மக்களுக்காக எளிய நடை வேண்டுமென்போர் எப்பொழுதுமே மக்கள் பாமரராக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனரா? ஊர் தோறும் பள்ளிகள் வேண்டுமென்று பாரதி கண்ட கனவு நனவாகி வரும் இக்காலத்தில் கற்றவர்தொகை பெருகி மற்றவர் தொகை அருகும் இக்காலத்திலும் எளிமை வேண்டுமோ? கற்றவர் தொகை வளர்வது உண்மையாயின் கவிதை நடையும் வளர்வது தானே முறை. வளர்ச்சி பெறவேண்டிய கவிதையை தளர்ச்சிக்கு ஆளாக்குவது நன்றோ.

நினைக்க நினைக்க என்றும் இனிக்கும் கவிதைக்கு நன்மொழி புணர்த்தலே அழகாகும். தூய இனிய பொருள் செறிந்த முழுமை பெற்ற தமிழ்ச் சொற்களாலான கவிதைகள் பெருக வேண்டும். வருங்காலத்தில் பெருகி வரும் எனும் நம்பிக்கை இந்நூற்றாண்டிலேயே ஒளி வீசத் தொடங்கி விட்டது.

## ஒளி நல்கும் கவிஞர் கூட்டம்

இந்நூற்றாண்டில் கவிதைக்கு எழுச்சியூட்டித் தமிழ் மொழிக்கு ஒளி நல்கிய பாரதியார் கவியுலகின் விடிவெள்ளி. கவிவெறி கொண்டு தமிழையே தம் உயிர் மூச்சாகக் கொண்டு விளங்கிய பாரதிதாசன், இவ்வுலகின் இருளோட்ட வந்த இளஞாயிறு. அவர்தம் பரம்பரையினராக வந்து தமிழ் மொழிக்கு மெருகூட்டும் எண்ணற்ற கவிஞர் குழு அவ்விளஞாயிற்றின் செங்கதிர்கள்.

பாரதியொரு பேரருவி. பாரதிதாசன் பேரருவியால் தோன்றிய உயிராறு. பரம்பரையினர் அவ்வாற்றிலிருந்து பிரிந்து வளம் ஊட்டும் கிளையாறுகள். பாரதியொரு வித்து. பாரதிதாசன் அவ்வித்திலிருந்து முளைத்த ஆல மரம். பரம்பரையினர் அவ் ஆல மரத்தின் விழுதுகள். பாரி காதை எழுதிய இரா.இராகவையங்கார், அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், சுவர்க்க நீக்கம் போன்ற நூல்களை எழுதிய வே.ப.சுப்பிரமணியம் முதலியார் மண்ணியல் சிறுதேர் இயற்றிய பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் போன்ற அறிஞர்கள் பல பேரைக் கூறிக் கொண்டே போகலாம். எனினும் 'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்' எனும் குறிக்கோள் கொண்ட பாரதிதாசன் புதுமைக் கவிதை உலகிற்கு ஒரு முதன்மை வழிகாட்டி. அவர்காட்டிய வழியில்தான் கவிஞர் தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, சுத்தானந்த பாரதியார், ச.து.சு. யோகி போன்ற கவிஞர்கள் தொடர்ந்து செல்கின்றனர். இவர்கள் நடந்த நெறியில் நூற்றுக்கணக்கான கவிஞர் கூட்டம் தடம் பார்த்து அடியொற்றிச் சென்றனர், செல்கின்றனர்.

இவர்கள் மக்கள் மன்றத்தில் நூல் வடிவில் அறிமுகமான கவிஞர்கள். நூல் வடிவில் அறிமுகம் செய்யப்படாத உயரிய கவிவளம் கொண்ட நூற்றுக் கணக்கானோர் ஆங்காங்கே மறைந்து கிடக்கின்றனர். இவர்களைத் தவிர இன்னும் பலரும் கவிதைகள் பல புனைந்து தமிழன்னைக்குக் காணிக்கை செலுத்தி வருகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டு கவிதைக்கு ஒரு நற்காலமே. அந்நற்காலம் பொற்காலமாக மாறும் காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. மிகவிரைவிலே தமிழின் ஒளி உலகம் முழுவதும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள் என்று பாரதியார் கூறினார். அக்கூற்று வாய்மையாகி விட்டது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவி வரும் காலம் இக்காலம். பாரதி கண்ட கனவு நனவாகும் காலமும் இக்காலமே. அந்நனவைக் கவிதையால் தான் ஒலித்துக்காட்ட முடியும். தமிழ்ப் பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலிக்கும் நாள் நம்மெதிரே காட்சியளிக்கின்றது.

* * *

**கவிஞர். முடியரசன்**

## உலகம்



உன்னைப் பார்த்து உலகம் குரைக்கும்
தன்னம்பிக்கை தளர விடாதே
இரட்டைப் பேச்சுப் பேசும் உலகம்
மிரட்டும் தம்பி மிரண்டு விடாதே

ஒவ்வொரு வாயிலும் ஒற்றை நாக்கு
உலகின் வாயில் இரட்டை நாக்கு
எனக்கு நேர்ந்த இழிமொழி எல்லாம்
உனக்குச் சொல்கிறேன் உள்ளத்தில் எழுது

இன்னிசைத் தமிழை எளிமை செய்தேன்
இலக்கியம் இல்லை லேகியம் என்றது
திரைப்பாட்டுக்குள் செழுந்தமிழ் செய்தேன்
பரிமே லழகரை வரச்சொல் என்றது

குறுந்தொகை கம்பன் கொட்டி முழக்கினேன்
குண்டுச் சட்டியில் குதிரை என்றது
எலியட் நெருடா எல்லாம் சொன்னேன்
திறமை எல்லாம் திருடிய தென்றது

எளிய தோற்றமே இயல்பென இருந்தேன்
வடுக பட்டி வழியுது என்றது
அழகாய் நாடிய ஆடைகள் கொண்டேன்
கழுதைக் கெதற்குக் கண்மை என்றது

மேடையில் கால்மேல் காலிட் டமர்ந்தேன்
படித்த திமிர்தான் பணிவில்லை என்றது
மூத்தவர் வந்ததும் முதலில் எழுந்தேன்
கவிஞன் நல்ல 'காக்கா' என்றது

உயர்ந்தோர் பெருமை உவந்து புகழ்ந்தேன்
காதில் பூ வைக்கிறான் கவனம் என்றது
விரல்நகத் தளவு விமர்சனம் செய்தேன்
அரிவாள் எடுக்கிறான் ஆபத்து என்றது

மற்றவர் சூழ்ச்சியால் மண்ணில் விழுந்தேன்
புத்தி கொழுத்தவன் புதைந்தான் என்றது
மூச்சுப் பிடித்து முட்டி முளைத்தேன்
தந்திரக் காரன் தள்ளிநில் என்றது

பகையைக் கண்டு பைய நகர்ந்தேன்
பயந்து விட்டான் பாவம் என்றது
மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்தேன்
விளங்கி விட்டதா மிருகம் என்றது

பணத்தில் பொருளில் பற்றற் றிருந்தேன்
வறுமையின் வித்தில் பிறந்தவன் என்றது
என்னைத் தேய்த்து மண்டபம் கட்டினேன்
புலவன் இல்லை பூர்ஷ்வா என்றது

சொந்த ஊரில் துளிநிலம் இல்லை
இவனா மண்ணின் மைந்தன் என்றது
தென்னை மரங்கள் தேடி வாங்கினேன்
பண்ணையார் ஆனான் பாவலன் என்றது

கயவர் கேட்டால் காசு மறுத்தேன்
கறக்க முடியாக் கஞ்சன் என்றது
உண்மை இருந்தால் உறுபொருள் கொடுத்தேன்
உதறித் திரியும் ஊதாரி என்றது

மங்கைய ரிடையே மௌனம் காத்தேன்
கவிஞன் என்ற கர்வம் என்றது
பெண்கள் சிலருடன் பேசத் தொடங்கினேன்
கண்களைக் கவனி காமம் என்றது

விருதுகள் கழுத்தில் வீழக் கண்டேன்
குருட்டு அதிர்ஷ்டம் கூடிய தென்றது
மீண்டும் மீண்டும் விருதுகள் கொண்டேன்
டெல்லியில் யாரையோ தெரியும் என்றது

திசைகள் தோறும் தேதி கொடுத்தேன்
அய்யோ புகழுக் கலைகிறான் என்றது
நேரக் குறைவு நிறுத்திக் கொண்டேன்
கணக்குப் பார்க்கிறான் கவிஞன் என்றது

அப்படி இருந்தால் அதுவும் தப்பு
இப்படி இருந்தால் இதுவும் தப்பு
கத்தும் நாய்க்குக் காரணம் வேண்டாம்
தன்நிழல் பார்த்துத் தானே குரைக்கும்

உலகின் வாயைத் தைத்திடு; அல்லது
இரண்டு செவிகளை இறுக்கி மூடிடு
உலகின் வாயைத் தைப்பது கடினம்
உந்தன் செவிகள் மூடுதல் சுலபம்.

# இல்லாத பெரும்பான்மையை ஈடு செய்யும் முயற்சி!

இன்றைய அரசியலில் எழும் பிரச்சினைகளையும் அவற்றினால் எழும் சிக்கல்களையும் பற்றி ஒரு கணம் சிந்திக்கும் எவரும் ஆச்சரியம் அடையவே செய்வர்.தான் மறைந்த பின்னரும் இலங்கையின் அரசியல்வாதிகள் கட்சி பேதமின்றி தன்னையே நினைக்க வேண்டுமென்று ஜே.ஆர். ஜெயவர்த்தன தவமிருந்து வரம் பெற்றவராயிருப்பாரா? என்ற கேள்வியை இவர்கள் கேட்டுப்பார்ப்பர். தமிழ் மக்கள் இதற்கும் அப்பால் சென்று ஒவ்வொரு ஆண்டினதும் ஆடிமாதத்தில் தமிழ் சிங்கள கலவரத்தின் பிதாமகர் என்று நினைப்பதற்குத் தவறுவதில்லை.

கவுள்ள அதுவே பொ.ஐ.மு விடமும் தட்டுப்பாடு. இதனால் இதனை ஈடுசெய்யக்கூடிய வேறு வழிகளை அது நாடுகிறது. நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்த முடியாதா? என்று விஷப்பரீட்சை நடத்திப் பார்க்க முன் வந்திருக்கிறது.

ரவி கருணாநாயக்க அமைச்சரவையில் இருக்கத் தகுதியற்றவர் என்று பிரதமருக்குக் கடிதம் எழுதியமை இதனைக் காட்டுகிறது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையில்லாத நிலையைத் தீர்ப்

யலில் ஓரளவு விழிப்புப் பெற்றவர்களாகச் சமாதானத்தை ஏகமனதாக விரும்பத் தொடங்கியதும் உத்திகளை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அரசின் சமாதான முயற்சிகளை முற்றிலுமாக எதிர்ப்பது சர்வதேச ரீதியிலும். படித்தவர்கள் மத்தியிலும் பழிச் சொல்லுக்கிலக்காகி விடலாம் என்பதாலும் முற்றாக இல்லா விடினும் ஓரளவுக்குப் பல உத்திகளைக் கைவிட வேண்டியதாயிற்று.

எது போனாலும் இது இருக்கவே இருக்கிறது. இராம

றைச் செய்து விட்டு வர்த்தகர்களே நன்மையடைய அனுமதித்து அவ்வளவுடன் செல்லாமல், 'வற்'வரியின் அனுகூலத்தைப் பாவனையாளர்களுக்குக் கொடுத்தே தீருவது என்ற விடாப்பிடியில் 'வற்'வரியுடன் சேர்த்து அமுலாக்கக் கூடியதாகச் சீராக்கல் சட்டமொன்றிற்கான ஆயத்தங்கள் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் தயங்காது ஈடுபட்டு வருவது, சம்பந்தப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரிகளின் பெருங் கோபத்திற்கு ஆளாகும் விடயம்

ஆயுதங்களைக் கையிலெடுத்து கலவரத்தில் ஈடுபட்ட கைதிகளிடம் எதிர்க்கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்கள் பல தடவைகள் வந்து சந்தித்திருந்த தகவல்கள் கிடைத்துள்ளதாக அரசசார்பு பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஒருவித ஊழல் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டிருக்காத நிலையிலேயே ரவி கருணாநாயக்கா மீது லஞ்ச ஊழல் விசாரணைகள் நடைபெறுவது போன்ற கதைகள் கட்ட விழ்த்து விடப்பட்டன என்று அவரே குற்றஞ்சாட்டி மானநட்ட கோரிக்கையும் முன்வைத்திருக்கிறார். வாகன இறக்குமதி முறைகேடுகள் பற்றி ஆராயும் அமைச்சரவைக் குழு உறுப்பினர்

# இரு கட்சிகளுக்கும் இதுவே பெரும் தலையிடி!!

### அரசியல் அட்டகாசம்

முக்கியமான விடயம் இதுதான். ஆட்சியதிகாரத்தை தாமே வைத்திருக்க வேண்டும் என்பதில் பரம எதிரிகளாக உள்ளவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கட்சியுமாகும். இன்று இந்த இருகட்சிகளுமே தமக்கு உடன்பாடான சில கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு முன்னணி என்ற பெயரையும் இணைத்துக் கொண்டு அரசியலில் அட்டகாசம் புரிந்து வருகின்றன.

ஐ.தே.மு.அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்று ஜனாதிபதியைப் பதவியிறக்கவேண்டும் என்று ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்தே விருப்பம் கொண்டு வந்துள்ளது. இதனை நிறைவேற்றுவதற்குப் பல எத்தனங்களையும் செய்து பார்த்து விட்டது. தொடர்ந்தும் முயற்சித்துக் கொண்டேயிருக்கிறது. எவ்வளவுக்கு அது விரும்புவதானாலும் தடைகளைச் சந்திக்கவே செய்கிறது. பெரும்பான்மையின்மையே பிரதானதடை. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டுமே! அந்தத் தட்டுப்பாடான சாமான் பொ.ஐ.முவின் கடையில் மட்டும் தான் இருக்கிறது. என்ன விலை கொடுத்தாவது வாங்கலாமென்றாலும் கடைக்காரன் விற்கச் சம்மதிப்பதாக இல்லை. குறுக்கு வழிகளை நம்பமுடியாத நிலையில் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் சட்ட மூலத்தை நிறைவேற்றும் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறது ஐ.தே.மு. ஆனால் அதனையும் கூட இலகுவில் நிறைவேற்ற முடியாத வலைவீச்சுக்கள், அவற்றிலிருந்து விடுபடுவதற்குள் எதிரி அவகாசத்தைப் பயன்படுத்திவிடக் கூடும் என்ற அச்சம் ஒருபுறம்.

### நம்பிக்கையில்லாப் பிரேரணை

மறுபுறம், வேண்டாத அமைச்சர்களை நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து அகற்றி விடலாமா என்று பொ.ஐ.மு பலவாறாக முயற்சித்துப் பார்த்து வருகிறது. முதலில் இரண்டு அமைச்சர்களுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளது. ஆனால் அதற்கு வேண்டிய பெரும்பான்மை இருக்கிறதா? ஐ.தே.மு.விடம் தட்டுப்பாடா

பதற்கு இருகட்சிகளுமே மாற்று வழிகளில் முயற்சிக்கத் தலைப்பட்டுள்ளன.

பொ.ஐ.மு.வின் பிரதான எதிரிகளாக உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவும், நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரவி கருணா நாயக்காவும் ஆகியுள்ளனர். இவர்கள் இருவருக்கும் எதிராக பொ.ஐ.மு நம்பிகையில்லாப் பிரேரணையும் கையளித்துள்ளது. புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து சட்ட அமுலாக்கல் துறையான பொலிஸ் திணைக்களத்தினால் பொ.ஐ.மு.வின் தலைவர்கள் பலர் பாதிக்கப்பட்டனர். முன்னைநாள் அமைச்சர்கள் உட்பட எம்.பி.க்கள், மாகாண மட்டத்துத் தலைவர்கள் சிலரும் சட்டத்தின் கரங்களுக்குள் அவர்கள் எதிர்பார்க்காத நிலையில் சிக்கி விட்டிருந்தனர். முன்னைய அரசுக்குச் சார்பாகவும், முறை கேடாகவும் நடந்து கொண்ட அதிகாரி மட்டத்தவர்கள்

பாணம் போல் தைக்கக்கூடியது. மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வு என்னும் என்றும் தீராத பிரச்சினை. என்றுமில்லாதளவுக்கு உயர்ந்து நிற்கிறது. இதனைப் பிரதான சுலோகமாகக் கொண்டு அரசாங்கத்தை மக்கள் முன் மண்கவ்வச் செய்ய முடியும் என்பது பொ.ஐ.மு. வின் திட்டம் மட்டுமல்ல உண்மையுமாகும். மிகப்பிந்திய பிரசாரங்கள் எல்லாம் இதனை மையமாகக் கொண்டே முன்வைக்கப்பட்டு வருகின்றன. 1953 ஓகஸ்டில் வாழ்க்கைச் செலவு உயர்வை வைத்து ஹர்த்தால் நடத்திய பின்னரே தொழிலாளர் பரந்த மக்கள் மத்தியில் இடதுசாரித் தலைவர்கள் பெரும் அபிமானத்தைப் பெற்றனர் என்பது வரலாறு. இதனைத் தழுவி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மாபெரும் நிகழ்வு கூட ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

ஆனால் இதற்கும் கூட ஆபத்து வருகிறது என்றால்

என்பது சந்தேகத்திற்கு உரியதல்ல.

### முன்னணித் தளபதி

ஒரு புறம், அரிசி, மா, சமையல் வாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நிறுவனங்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவது போன்று, தமது இறுதியானதும், நம்பிக்கை வாய்ந்ததுமான வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்சினையைத் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தக் காத்திருக்கும் அரசியல்வாதிகளும், பெருமளவில் பாதிக்கப்படுவதற்கு ஒரு அமைச்சரே முதுகெலும்பாகத் தொழிற்படுகிறார். முதலாளிகளின் கொள்ளை இலாபத்தில் நேரடியாக கைவைத்துள்ள இவர் அடிமட்ட மக்களின் மனங்களில் நிரந்தர இடம்பிடிக்கக் கூடியவராகவும். ஆளுங்கட்சியின் ஜனரஞ்சனத் தலைவராகவும் இடம் பிடித்துக் கொள்கிறார். இதனால்

என்ற வகையில் குழுவினால் கோரப்பட்ட விபரங்கள் கிடைக்கவில்லை என்று குரல்கொடுத்தார்.

### சர்வன்

ஜனாதிபதியின் கைப்பை பற்றிய சந்தேகங்களை ஆவணங்களின் ஆதாரத்தோடு முன்வைத்தார். ஆனால் பதிலாகக் கிடைத்தது கோரப்பட்ட விளக்கமல்ல. வெடிகுண்டு கொண்டுவந்ததாக மிரட்டுகிறாயா? என்ற கேள்வியாகும். அத்துடன் இனிமேல் இப்படியான விவகாரங்களை தூக்கிப்பிடித்து மாட்டிக்கொள்ளாதே! என்ற எச்சரிக்கையுமாகும்.

### ஜீ.எல்.பீரிஸ் கருத்து

எல்லாற்றிற்கும் மேலாக, இரு அமைச்சர்களுக்கும் எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கை

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இதனால் தான் இழுபறி!!!

பலரும் சீ.ஐ.டி.யினதும், பொலிஸாரினதும் கரங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டனர். எஸ்.பி.திசாநாயக்க மீதான படுகொலை முயற்சி போன்ற வழக்குகளிலும் ஐ.தே.மு அரசாங்கத்தின் அரசியற் தலையீடுகளற்ற அரச நிர்வாகம் என்னும் கொள்கையடிப்படையில் சட்ட அமுலாக்கல்துறை வளைந்து கொடுக்காமல் நடந்து கொள்கிறது. இதனால் பொ.ஐ.முவின் பலமட்டத் தலைவர்களும் அதிருப்தியும், சீற்றமும் அடைந்துள்ளமை எதிர்பார்க்கக் கூடியதேயாகும்.

### உத்திகளை மாற்றும் தேவை

ரவி கருணாநாயக்க மீதான பொ.ஐ.மு. வின் ஆத்திரம் அரசியல் ரீதியானது என்றே கொள்ள வேண்டும். கடந்த ஆறுமாதங்களிலும் பொ.ஐ.முன்னணி ரணிலின் அரசாங்கத்திற்கெதிராக ஒவ்வொன்றாகவும், அடுக்கடுக்காகவும் தாக்குதல்களைத் தொடுத்து வந்தது. நிறைவேற்று அதிகாரம், சமாதான முன்னெடுப்புகளுக்கு நிபந்தனைகள், பேரினவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு, மத பீடங்களின் செல்வாக்கைப் பயன்படுத்துதல், உலக நாடுகளின் செல்வாக்கைப் பயன்படுத்துதல் போன்ற பல ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. மக்கள் அரசி

அதனைச் சாதாரணமாக விடலாமா? ஐ.தே.மு அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது பிரகடனம் செய்யப்பட்ட ஒன்று. இதனை இமாலயப் பிரச்சினை எனலாம். நுகர்வோர் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் விடயத்தில் விசுவாசத்துடன் பாடுபடுவது பலரும் அறிந்ததே. பால்மா விலைகளை முடிந்தளவு குறைத்தபின் கூ.மொ.வி. நிலையம் மூலம் பால்மா இறக்குமதியைச் செய்து தனியார் நிறுவனங்களுக்கு போட்டியாக 400கிராம் பைக்கற்றுக்கு சுமார் 25ரூபாவை குறைத்து மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தமை, சமையல் வாயுவை 500 ரூபாவுக்குக் குறைய விற்க முடியாது என்றும், அதுவே சர்வதேச விலை என்றும் தனியார் நிறுவனம் ஒன்று பிடிவாதம் பிடித்ததால் புதிதாக வாயு கம்பனியை உருவாக்கி 325 ரூபாவுக்கு ஒரு சிலிண்டர் வாயுவை விற்க நடவடிக்கை எடுத்தமை, மருந்து வகைகளுக்கு மேலும் விலை குறைப்பை ஏற்படுத்துவதற்கு "இணையான இறக்குமதி" செய்யும் கம்பனி ஒன்றை உருவாக்குவதில் ஈடுபட்டிருப்பது, எரிபொருள் விலைகளை அரசாங்கம் குறைத்தது. கண்துடைப்புக்காக அவற்

இவருக்கெதிரான சுலோகங்களும், எதிர்ப்புகளும் ஜனநாயக அமைப்பில் எங்கிருந்து எதிர்பார்க்கப்பட வேண்டுமோ அங்கிருந்தே கிளம்பியிருக்கின்றன. ஐ.தே.மு.வின் முன்னணித் தளபதியாகிவிட்ட இவரை வீழ்த்துவது எதிர்க்கட்சியை ஆளும் கட்சியாக்குவதற்குத்தவிர்க்க முடியாதபடி தேவைப்படும் ஒன்றாகும். இதனால், இவருக்கெதிராக ஒலிக்கும் குரல்கள் ஒலித்தவர்களிற்கு சொந்தமானதல்ல. அவர்களின் பின்னணியில் செயற்படுபவர்களினதேயாகும். வாழ்க்கைச் செலவு குறையக் கூடாது என்று அடிமனதில் நினைக்கும் மக்கள் விரோதிகளினுடையதாகும்.

அமைச்சர்கள் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கான திட்டம் நீண்ட திட்டமாக இருக்கிறது என்ற சந்தேகமும் அரசியல்வாதிகளிடம் எழுந்துள்ளது. ஜோன் அமரதுங்கவுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் வேளை அவரின் பொறுப்பிலுள்ள பொலிஸ், சிறைச்சாலை போன்ற நிறுவனங்களில் குழப்பநிலை ஏற்பட்டிருக்கிறது. தங்காலை சிறைக் கூடத்தில் ஜுன்மாத முடிவில் நடைபெற்ற கலவரங்கள் பற்றிய விசாரணைகளைச் செய்து வரும் சி.ஐ.டி. பிரிவுக்குக் கிடைத்துள்ள சாட்சியங்களின் படி சிறையதிகாரிகளின்

யில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு ஏற்றதாக களத்தை ஆயத்தம் செய்யும் நடவடிக்கைகளுமாகும். ஆற்றாத கொடுமை!

கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய பல தாற்பரியம் மிக்க கேள்விகளுக்குப் பதில் தேட வேண்டிய சூழ்நிலையில் வெறுமனே எவரும் கூறாத ஒரு வார்த்தையை ஆராய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தந்திரோபாயமாகும். அது மட்டுமன்றி அமைச்சர்களாக யார் யார் இருக்க வேண்டு மென்பதை பிரதமரின் ஆலோசனை பெற்றே முடிவு செய்ய வேண்டும். மக்களின் ஆணையுடன் முரண்படலாகாது. மீறி நடந்தால் ஜனாதிபதிக்கான நிதிகளைப் பாராளுமன்றம் நிறுத்தி வைக்கும் என்று அமைச்சர் திசாநாயக்காவும் தனது பாணியில் கூறியிருக்கிறார் மொத்தத்தில் நாடகக் காட்சிகள் அதிகமாகிக் கொண்டு வருவதை அரசியல் அரங்கில் காணக் கூடியதாயுள்ளது.

பாராளுமன்ற ஒத்திவைப்புக்கும், டிசம்பர் 5ற்குப்பின் அதனைக் கலைப்பதற்கும் முன்னோடியான ஆயத்தங்களாக இவற்றைக் கொள்ளலாமா?

***

# பிறந்த நாள் பலன்கள்

## டிசம்பர்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

கருத்துடன் எதையும் செய்வதில் இவர்கள், எந்தப் பணியில் இறங்கினாலும் வெற்றியைக் காண முடிகிறது. ஆனால் இவர்கள் தமக்கு ஏற்ற தொழில் எதுவென்று தாமே தேர்ந்தெடுப்பார்கள். மற்றவர்களின் யோசனைகளைத் திரும்பத் திரும்பப் பரிசீலிப்பார்கள்.

இவர்களுள் சிலர் பணத்தைப் பொறுத்தவரையில் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டும் மிக மட்டமாகவும் மற்றவர்களிடம் நடந்து கொள்ளுவார்கள். விளம்பரத்துக்காகப் பெரும் பணம் தருவார்களே தவிர, உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவருக்கும் உதவி செய்ய மாட்டார்கள்.

இவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நல்ல பதவியில் வேலையில் சேர்ந்து விடவாய்ப்பு உண்டு. பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் இவர்கள் ஆசைப்படுவார்கள். மதங்களில் மிகுந்த பற்றுதல் உண்டு.

பொதுவாக இந்த மாதத்தில் பிறந்தவர்கள் இசையில் பற்றுக் கொண்டிருப்பார்கள். இசையில் வல்லவர்களாகவும் வரவாய்ப்பு உண்டு. இசை தொடர்பு கொண்ட நிறுவனங்களுக்கும் பண உதவி செய்வார்கள்.

எதிர்பாராத முடிவுகளைச் செய்வார்கள். அல்லது திடீரென்று ஒரு முடிவுக்கு வருவார்கள். எந்தச் செயலிலும் இவர்களுக்கு ஓர் அளவு என்பது கிடையாது! இவர்கள் தமது தவறுகளை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அது நியாயம் என்று கூறி வாதிடுவார்கள்.

ஏதோ துடிப்பில் மணம் செய்து கொண்டு விட்டுப் பிறகு துன்பம் கொள்வார்கள் இவர்கள். ஆனால், தமது துன்பங்களை வெளியே சொல்ல மாட்டார்கள். மண வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டிருந்தாலும், மற்றவர்கள் அதைக் கண்டு பிடித்து விடாதபடி நடந்து கொள்வார்கள். கேட்டாலும் மகிழ்ச்சியாகத்தானே இருக்கிறேன் என்பார்கள்.

ஆண்களை விட இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் சிறந்தவர்கள். இவர்கள் தமது கணவனை அன்புடன் நடத்தி, அவர்களை வெற்றி பெறும்படி செய்வார்கள். பெண்கள் மிகக் கற்புள்ளவர்களாகவும், மண வாழ்க்கையில் புனிதமுள்ள வாகளாகவும் இருப்பார்கள். மண வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டாலும், எப்போதும் சிரித்தபடி வாழ்க்கையை ஏற்றுக் கொள்வார்கள்.

தொகுப்பு:-
வளவன்

பொதுவாக அனைவரும் ஆலயங்களுக்குச் செல்லுவார்கள். இவர்களுடைய செயல்கள் உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

இவர்கள் சட்டங்களை வகுப்பார்கள். பிள்ளைகளை அடக்கியே வளர்ப்பார்கள். பிள்ளைகளை ஒழுக்கத்துடனும் சிறப்புடனும் உருவாக்குவார்கள்.

வெற்றியுடன் வாழ்ந்தாலும், எப்போதும் ஏதாவது ஒரு செயலில் இவர்கள் கவனத்தைச் செலுத்தியபடி இருப்பது மிக நல்லது.

## உடல் நிலை

வாயு நோய்க்கு இவர்கள் ஆளாவார்கள். தொண்டை, உப்புசங்கள் தொடர்புள்ள நோய்கள் வரும். கட்டிகளும், தோல்வியாதிகளும், வரவாய்ப்புண்டு. நரம்பு நோய்களாலும், கடைசிக் காலத்தில் பாரிசவாயுவினாலும் துன்பம் கொள்வார்கள்.

## வண்ணங்கள்

இவர்களுக்குப் பிடித்த வண்ணம் VIOLET

***

**ஆண்கள் தாடி வளர்த்தால் முகம் அசிங்கமாகத் தோன்றும் என்று பலர் கூறுகிறார்களே. உண்மையில் ஆண்களுக்குத் தாடி அழகையும், மதிப்பையும் தருகிறது என்பது என் அபிப்பிராயம் உங்கள் அபிப்பிராயம் யாதோ?**

*பிரியா குட்டியப்புலம்*
● அழகு, அன்பு, அறிவு, பணம் இதில் நிலைத்து நிற்கக் கூடியது எது?

❖ **அழகு ~நோயோடு போகும், அன்பு~கால அசைவோடு தீரும், பணம்~ஒரு கணப் பொழுதில் மறையும், அறிவு~ஏழு பிறப்பிற்கும் தொடரும்.**

*விதுஷா காரைநகர்*
● வியாசர் சார்! பெண்களின் மனத்தின் ஆழத்தை அறியாமல் அவர்கள் முக அழகை மட்டும் ரசித்து அவர்கள் பின்னால் சுற்றும் ஆண்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

❖ **மகனே! அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்ற நம்பிக்கையில் சுற்றுகிறார்கள் போலும்.**

*அருந்தா முடமாவடி*
● ஆண்கள் தாடி வளர்த்தால் முகம் அசிங்கமாகத் தோன்றும் என்று பலர் கூறுகிறார்களே. உண்மையில் ஆண்களுக்குத் தாடி அழகையும், மதிப்பையும் தருகிறது என்பது என் அபிப்பிராயம் உங்கள் அபிப்பிராயம் யாதோ?




❖ **தாடி என்ன தாடி. தலை முடியும் மதிப்பைக் கொடுக்கும் என்பதை அப்துல் கலாம் நிரூபித்துக் காட்டியுள்ளாரே.**

*கயூரன் அரியாலை*
● வியாசரே! சீதனப்பேயிடம் இருந்து பெண்களைக் காப்பாற்ற முடியாதா?

❖ **ஏன் முடியாது? தகுதி, தரம் பார்த்து திருமணம் செய்வதில்லை எனப் பெண்கள் முடிவெடுத்தால் சீதனம் தன்பாட்டில் ஒழிந்து விடும்.**

*ஜோ.ஜெ.டி. கொழும்புத்துறை*
● எனது நண்பனிற்கு 30 வயதாகியும் திருமணம் நடக்கவில்லை. 15 லட்சம் சீதனம்வேண்டித்தான் திருமணம் செய்வேன் என்று ஒற்றைக்காலில் நிற்கிறான் இதைப் பற்றி?



❖ **ஓடு மீன் ஓட உறுமீன் வரும் வரையும் காத்திருக்குமாம் சீதனக் கொக்கு.**

*வே.சஞ்சீவன் ஓட்டுமடம்.*
● வியாசரே! சும்மா சும்மா சிரிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

❖ **சும்மா சும்மா சிரிக்கிறார்கள் என்று விட்டு விடாமல் நல்ல டாக்டரிடம் காட்ட வேண்டும்.**

*தீபன் சாவகச்சேரி*
● வியா சார்! என் தம்பி ஊர் சுற்றுகிறான். எப்படி வழிக்கு கொண்டுவருவது என விடை பகரும் ஐயா?

❖ **மகனே! வண்டிலில் பூட்டிவிடும் எல்லாம் சரியாகி விடும்.**

**வியாசர் சார்! பெண்கள் சம்பாத்தியத்தில் உட்கார்ந்து சாப்பிடும் ஆண்களைப் பற்றி..?**

*இன்பராஜ் மீசாலை*
● வியாசர் மாமா! தன் குற்றத்தை மறைத்துப் பிறர் குற்றங்களை நீதிமன்றங்களுக்கு அனுப்பும் அரசியல் தலைவர்களை என்ன செய்வது?

❖ **அவர்கள் தான் உண்மையான அரசியல் தலைவர்கள். அவர்களை ஒன்றும் செய்யாதீர்கள்.**

*வே.சஞ்சீவன் ஓட்டுமடம்.*
● டியர் வியாசர்! உயர் தர மாணவர்களை தண்டிப்பதற்கு ஆசிரிய சமூகம் பயப்படுவது ஏன்?

❖ **ஆசிரியர்களின் தனிப்பட்ட விடயங்களை மாணவர்கள் அறிந்து வைத்திருப்பதால்.**

*சிந்துஜா ஊர்காவற்றுறை*
● வியாசர் அங்கிள்! வர வர எமது கலாசாரம், பண்பாடு அனைத்தும் சீரழிந்து போகின்றதே. இது எதன் விளைவு?

❖ **நம்மவர்கள் வெளிநாடு போனதன் சன்மானம்.**

*ஜீ.நிரோஜன் வதிரி*
● தான் இன்றி இலங்கை கிரிக்கெற் அணி வெற்றி பெறாது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார் முரளி. உங்கள் கருத்து யாது அங்கிள்?

❖ **கிரிக்கெற் விடயத்தில் நான் பேர்ணாட் சோவின் பக்கம்.**

*ராஜா கரவெட்டி*
● வியா சார் ! நான் ஒரு பெண்ணை விரும்புகிறேன். அவள் குணத்தை எப்படித் தெரிந்து கொள்வது?

❖ **ராஜாக்கண்ணா! குணத்தைத் தெரிய முதல் விரும்புவது தப்பு.**

● வியாசர் அவர்களே! ஒரு மனிதனின் அழிவிற்குக் காரணம் ஆசையா? அறியாமையா?

❖ **அறியாமையோடு கூடிய ஆசை.**

# வியாசரின் பதில்கள்

● வியாசர் அங்கிள்! நீங்கள் ஒரு முதலமைச்சராக வந்தால் யாரை முதலில் கைது செய்வீர்கள்?

❖ **நிச்சயமாக ஜெயலலிதாவை அல்ல, கலைஞர் மு.க.ஜெயாவைக் கைது செய்து பட்டபாடு தெரியாதா என்ன?**

● வெளிநாட்டில் கணவனிருக்க, உள்நாட்டில் காதலிக்கும் பெண்மணிகளைத் திருத்த என்ன வழி?

❖ **கணவன் ஊர் திரும்புவதே ஒரே வழி.**

● வியாமாமா! நட்பென்று சொல்லி விட்டால் நட்பெல்லாம் நட்பாகுமா?

❖ **பாலெல்லாம் நல்லாவின் பாலல்ல, முகநக நட்பதும் நட்பல்ல.**


*பூ.கயூரன் அரியாலை*
● வியாசரே! நான் மூன்று பெண்களைத் காதலிக்கிறேன் மூன்றும் கைகூடுமா சார்?

❖ **ஐயா! பெரியவரே நான் காவது கிடைக்கவில்லையா.**

*த.ராஜினி தும்பளை*
● வியாமாமா! கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா?

❖ **மனிதன் படைத்த கடவுள் நன்றாகவே இருக்கிறது. ஆனால் கடவுள் படைத்த மனிதன்...?**

*அகல்யா நெடுந்தீவு*
● வியாசர் சார்! பெண்கள் சம்பாத்தியத்தில் உட்கார்ந்து சாப்பிடும் ஆண்களைப் பற்றி..?



❖ **சமைத்துக் கால் உளைந்திருக்கும். பாவம் உட்கார்ந்தாவது சாப்பிடட்டுமே.**

**எனது நண்பனிற்கு 30 வயதாகியும் திருமணம் நடக்கவில்லை. 15 லட்சம் சீதனம் வேண்டித் தான் திருமணம் செய்வேன் என்று ஒற்றைக் காலில் நிற்கிறான் இதைப் பற்றி?**


*ரகுவர்மன் சண்டிலிப்பாய்*
● வியாசரே! தமிழ் நாட்டு அரசியல் எப்படி இருக்கிறது?

❖ **அரசியல் பழிவாங்கலுக்குச் சட்டம் நன்றாகப் பயன் படுகிறது.**

● வியாசர் அங்கிள்! தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பித்தல் குறைவாக இருந்தும் பணம் வாங்குவதில் மும்மரமாக உள்ளவர்கள் குறித்து?

❖ **தனியார் கல்வி நிறுவனத்தை விட்டு விலகி வேறு கல்வி நிறுவனத்தில் சேர்வதற்குத் தடையில்லையே.**

*சக்தி வேலணை*
● வியாசர் அங்கிள்! அமைச்சர்களுக்கு ஊதியம் உயர்வு வழங்கப்படும் என்பது உண்மையா?



❖ **ஊதியம் உயராததால் தான் ஊழல் உயர்ந்து விட்டதெனக் கருதுகிறார்கள் போலும்.**

*த.தயா கல்வியங்காடு*
● வியாசரே! பின்லேடன் உம்மிடம் வந்து படையுடன் சேரும்படி கேட்டால் யாது செய்வீர்?

❖ **மகனே தயா! அதீத கற்பனை கடும் சுகயீனத்தைக் கொண்டு வரும்.**

*ரமேஷ் நெல்லியடி*
● வியாமாமா! நான் தொட்டதெல்லாம் தோல்வியாகிறதே ஏன்?

❖ **இதற்குப் பதிலளித்த நான் தோல்வி போக விரும்பவில்லை.**

*சுதன் மல்லாகம்*
● வியாசர்! மலரைத் தொடுவதற்கும், பெண்களைத் தொடுவதற்கும் என்ன வேறுபாடு உண்டுசார்?

❖ **மலரை வண்டு தொட்டால் மகரந்தம். பெண்களை ஆண் தொட்டால் காதல்.**

*மாணிக்கம் அல்வாய்*
● வியாசரே! என் மகளுக்கு ஒரு பெயர் சொல்லுங்கள் பார்க்கலாம்?

❖ **முதலாவது மகளென்றால் அருந்தினி என்று வையும், இரண்டாவது மகளென்றால் போதுமினி என்று வையும்.**

*நாகராஜன் கந்தரோடை*
● வியா சார்! மனைவியிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

❖ **மனைவிக்குக் கோபம் வராத வகையில் சமையலை முன் கூட்டியே செய்து முடிக்க வேண்டும்.**

*க.பூங்கோதை கொடிகாமம்*
● காதல் ஞாபகமறதி என்று பாடல் வரியில் உள்ளது. அப்போ ஞாபகம் மீளத்திரும்பினால்?

❖ **கமலஹாசனின் நிலை தான்.**

**வியாசர் அங்கிள்! அமைச்சர்களுக்கு ஊதியம் உயர்வு வழங்கப்படும் என்பது உண்மையா?**

# வாசகர் இதயநாதம்

குங்குமக் கோலம் சூழ் மங்கல எழில் வளமார் தண் பொழிலில்
மங்கள கானம் பாடும் கோகிலமே!
கொங்கு வள நாட்டில் விளைந்த தங்கமென எங்கள் யாழ் பூமியில் விளைந்த அறிவு நெறியின் புதையலே,
சங்கு, வலம்புரியில் ஒலி தரும் சங்கு நாதமே, சங்கத் தமிழின் தூய கீதமே! வங்கக் கடல் அலை குலவும் செங்கதிராய் தங்கத் தமிழர் இதயச் செங்கரும்பாய் இங்கிதம் பொங்க வந்த செங்கயல் வண்ணமே! திங்கள் தோறும், கங்குலில் உதித்து வந்து கனிந்திடும் கற்கண்டே, பைந்தமிழ் இதழ் சிரிக்கும் பங்கயப் பொற்செண்டே, நீல வானைப் பிரியாத திங்களாகக் காலங்களை வென்று தமிழ் ஓசை முழங்கும் சங்குநாதமாக, ஞாலமது நிலைக்கும் வரை நீ நிலைத்துயர மெய்ப்பக்தியாய் நிறை இறை திருப்பாதம் முத்தி செய்தேன்!

தே.வில்சன்,
முகமாலை.

வலம்புரியின் மைந்தனே
வாரம் தோறும் என்
வாசல் வரும்
வசந்த நாதமே
வாலிப இதய நாதமே
வானம் முழுவதும் உன்
வற்றாத புகழ் பரவிட
வளமுடன் வாழ்த்துகிறேன்.

ஜீ.நிரோஜன்,
வதிரி.

வண்ண வண்ண நிறமெடுத்து
வாரமொன்றில் மலர்ந்திடுவாய்
உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தினை
ஊரறிய தந்திடும் சங்குநாதமே
மௌனத்தின் தேடலில் எம்மை
மகிழ்வுறச் செய்திடுவாய்
அரசியல் விமர்சனத்தில் எம்மை
அசத்தி எடுத்திடுவாய்
அர்த்தமுள்ள இந்து மதத்தினை
ஆவலோடு படித்திட
அண்ணல் காந்தியின் சுயசரிதையை சுவைத்திட
கவிதைக் கலசமதில் கவிஞர்களை பொழிந்திட
சீதனத்தால் சிதைந்த ரோஜாக்கள் சிறுகதை
சிந்திக்க வைத்திட மகளிர் உலகமதில்
மங்கையர் மகிழ்ந்திட மரண விளையாட்டில்
மாயவன் மகிழ்ந்தளிக்க சிறுவர் அரங்கமதில்
மழலைச் செல்வங்கள் மகிழ்ந்திட
எங்கள் சங்குநாதமே
ஏற்றமுடன் பவனி வருவாயே!

கந்த.ஞானமுத்து,
கைதடி.மேற்கு.

சங்கத் தமிழன்
சங்கே முழங்கு
சங்கத்தமிழ் பரப்பிட
சங்கே முழங்கு
திங்கள் நாதம்
சங்கு நாதமாய்
சங்கே முழங்கு
சுட்டால் வெண்மை
தொட்டால் உண்மை -தரும்
சங்கே நாதமாய்
முழங்கிட வாழி நீ

லோ.அ.ராஜ்,
மானிப்பாய்.

என்றென்றும் நீடூழி நிலைத்து
பத்திரிகையிலும் சஞ்சிகையிலும் வளம் பல
பெற்று நல்லம்சங்களுடனும் நான்கு பல
வர்ணங்களிலும் உலகம் முழுக்க
வலம்புரியின் சங்குநாதம் திங்கள் தோறும்
ஒலிக்கட்டும்.

மாருதி,
ஆவரங்கால்.

சத்தம் என்னும் இனிமையிலே "ச" என்னும் வரியூடாக சங்குநாதம் என்னும் பெயரை என் மனதில் பூட்டிக் கொண்டேன்.
என் சோகத்தை உன் கவிதைக் கலசம் சிறுகதை மூலம் புரிந்து கொள்வேன்.
நித்தம் உன்னை நினைத்து வினாடிகள் நிமிடங்களாக நிமிடங்கள் மணிகளாக கரைந்து விட ஒவ்வொரு திங்களுக்காகவும் உன்னைக் காண என் கண்கள் வேகமாக சிமிட்டுகிறது.
என் கண்களை இமை மூட வைத்து வீடாதே.

றஜி,
நீர்வையூர்.

ஈழத்தின் விடிவுக்காய் ஆக்கங்கள் பல படைத்திடும் வாரமலர் சங்குநாதமே உன் ஆக்கங்கள் அனைத்தும் மிகவும் என்னை கவர்ந்தவையால் வாழ்க வளர்க உன் சேவை தமிழ்த் தேசமெங்கிலும்.

சி.இன்பராஜ்,
மந்துவில் கிழக்கு.

சங்குநாதமே நீ தாங்கி வரும் படைப்புக்களின் தரம் என்றும் நிரந்தரம். யாழ் மண்ணிலே இத்தனை சிறப்புக்களுடன் நீ வலம் வருவதை எண்ணி நான் பெருமை அடைகிறேன். அன்பான சங்குநாதமே உன்னுள் பொது அறிவுத் தேடல் என்ற பகுதியையும் உள்ளடக்கி வருவாயானால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

சி.சயந்தன்,
வட்டுக்கோட்டை.

# அர்த்தமுள்ள இந்து மதம்



கவிஞர் கண்ணதாசன்

இப்படிப்பட்ட கேள்விகளையும் இதற்கு மேலதிகமான கேள்விகளையும் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்பே கேட்டு, அவர்களுக்கெல்லாம் பல நியாயங்களும் நிரூபணங்களும் கொடுத்து ஒத்துக் கொள்ளுமாறு நமது அருளாளர்களும், ரிஷிகளும் செய்து, அவற்றைப் பின் சந்ததியார்கள் யாவரும் உணர்ந்து கொள்ளுமாறு ஏடுகளில் எழுதியும் உதவியிருக்கிறார்கள்.

## பூர்வ ஜென்மம்

அந்த உண்மைகளை நாம் திருவருளால் கண்டுணர்ந்து இன்று வெற்றி முரசு கொட்டிக் கையாண்டு வருகிறோம்.

அவ்வாறு கேட்கின்ற ஒருவரிடம், நாம் முதலாவதாக ஒரு கேள்வி கேட்கிறோம்: ''நீ இந்த உலகத்தில் பிறந்து, நன்றாக உண்டு வளர்ந்து, இவ்வாறு பேசுவதற்கு மூல காரணம் உன்னுடையஅப்பாவும், அம்மாவும் தான் என்பதை ஒப்புக் கொள்கிறாயா?'' என்பதே அந்தக் கேள்வி. 'ஆம்' என்று ஒப்புக் கொண்டால் மட்டும் மேற்கொண்டு பேசுவோம்.

மனிதனான எவனும் ஒப்புக் கொள்ளாதிருக்க முடியாது. ''உன்னை உன்னுடைய அம்மா தானே பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டித் தாலாட்டி உணவு கொடுத்து வளர்த்து வந்தாள்? அப்படியிருக்க 'நீ யாருடைய குழந்தை?' என்று கேட்டால், 'நீ ஏன் அம்மாவின் பெயரைச் சொல்லாமல் அப்பாவின் பெயரைச் சொல்லி, அவருடைய மகன் என்று சொல்கிறாயே' என்று கேட்போம்.

உன்னைப் பெற்றெடுத்தது உனது தாயார்தான் என்பதே அவள் சொல்லத்தான் தெரியுமே தவிர, நீ அறியாதிருக்க, தகப்பனார் பெயரை உன் தாயார் சொன்னதைக் கேட்டுத்தானே ஒப்புக் கொண்டு சொல்லி வருகிறாய்?'' என்போம் 'ஆம்' என்று சொல்லாமல் தீராது.

தாயாருக்கே தான் பெற்ற பிள்ளையின் தகப்பனார் யார் என்று தெரியாத நிலையிலிருந்தால், தாயார் விலாசத்தைப் போட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. தாயார் பெயரைச் சொல்லாததும், தகப்பனார் பெயரைச் சொல்லாததும் உலகம் முழுவதிலும் நடைபெறுவதாகும். அதற்கு மூல காரணம் ஒன்று உண்டு. அதாவது, ஒரு விளை நிலம் ஒருவனுக்குச் சொந்தமாக இருக்க, அதில் உழவு செய்து வித்திட்ட அவனுக்குத்தான் அந்த நிலத்தில் விளைந்து வந்த பயிர் சொந்தமாகும். அதுபோல் மனைவி, கணவனுடைய உடைமை, வித்திட்டவனும் கணவன். ஆகவே கணவனது உண்மையான மனைவியிடத்தில் உற்பத்தியான குழந்தைகள் சொந்தத் தந்தையின் குழந்தைகளாகின்றன.

அதனாலேயே பெண்களெல்லாம் கற்புடையவர்களாக இருக்க வேண்டுமென்பது உலக நீதி.

இரண்டாவது கேள்வி: ''உனக்குக் கல்யாணமாகியிருக்கிறதா?' என்பதாகும். 'ஆம்' என்பான். ''பிள்ளைகள் இருக்கின்றனவா?'' 'ஆம், இருக்கின்றனர்?' 'நீயும் உன் மனைவியும் விரும்பிய வண்ணம் குழந்தைகள் பிறந்தனவா?' 'இல்லவே இல்லை' என்பான்.

நேருஜிக்கு எவ்வளவோ வசதிகள் இருந்தும் ஆண் குழந்தைகள் கிடையாது என்பதும், பல பெரிய பணக்காரர்களுக்கும், பதவியில் உள்ளவர்களுக்கும், சில வைத்தியநிபுணர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் குழந்தையே கிடையாது என்பதும், யாவரும் அறிந்த உண்மையாகும்.

அதற்கும் உண்மையான காரணம் உண்டு. அது எந்த மனிதனும் தனது விருப்பம்போல் ஆண் மகவுக்குரிய வித்தையோ, பெண் மகவுக்குரிய வித்தையோ உற்பத்தி செய்து உண்டாக்கிக் கொள்ள முடியாததேயாகும். அந்த வித்தை, எல்லாம்வல்ல கடவுள் கொடுத்துத்தான் எந்தத் தந்தையும் பெற வேண்டியிருக்கிறது. கடவுள் கொடுக்கத் தந்தை பெற்று, தாயார் அதனைப் பெற்றதன் காரணத்தினாலேயே தாய் தந்தையரைப் 'பெற்றவர்கள்' அல்லது 'பெற்றோர்கள்' என்று சொல்லுகின்றோம்.

இந்த உண்மையை உணர்ந்த அருளாளர்கள், தந்தை இரண்டு மாதம் தங்குகின்ற நாற்றங்காலாகவும், தாயாரைப் பத்து மாதம் வளர்க்கின்ற விளைநிலமாகவும், இரண்டையும் உடையவர்கள் கடவுளே என்றும், அவற்றில் வித்திட்டவரும் கடவுளே என்றும் கண்டு, ஆண்டவனே உலகத்தில் பிறந்திருக்கிற எல்லா மனிதர்களுக்கும் எல்லாப் பிறவிகளுக்கும் உண்மையான அம்மையப்பன் ஆகின்றான் என்றும் அருளியிருக்கின்றார்கள்.

இந்துக்கள், கடவுளை 'அம்மையே அப்பா' என்றும், 'எந்தையாய் எம்பிரான்' மற்றும் யாவருக்கும் 'தந்தை தாய் தம்பிரான்' என்றும்; கிறிஸ்தவர்கள் 'நாமெல்லாம் பரமண்டலத்திலிருக்கின்ற பிதாவினது குழந்தைகளே' என்றும்; இஸ்லாமியர்கள் 'கடவுளே மனிதர்களைப் படைத்தார் என்றும் கூறி வருகிறார்கள். யாரும் உயிர்களைக் கடவுள் படைத்ததாகச் சொல்லவில்லை.

மூன்றாவது கேள்வி: 'உனக்கு ஒரு பெயரிடப் பெற்றிருக்கிறதல்லவா? அந்தப் பெயர் கண்ணுக்குத் தெரியாத உயிருக்கு இடப்பட்டதா? கண்ணுக் குத் தெரிகின்ற பாரமுள்ள உடலுக்கு இடப்பட்டதா? அல்லது வேறொரு பாரமில்லாத உன் உடலுக்கு இடப்பட்டதா? எப்பொழுது இடப் பட்டது? யாரால் இடப்பட்டது'' என்று கேட்போம். 'நான் பிறந்த பின்தான் பெயரிட்டிருக்கிறார்கள்; ஆணா? பெண்ணா? என்று பார்த்து என் பெற்றோர்கள் தான் பெயரிட்டிருக்கிறார்கள்' என்றுதான் (நாம் எழுதியிருக்கிற புத்தகத்தைப் படித்தறியாத) எவரும் சொல்வர்.

ஆனால் உண்மையில் மனிதராகப் பிறந்திருக்கிற எவருக்கும் பெயரிட்டவர் கடவுளே யாவர். ஒருவரை ஆணாகவோ, பெண்ணாகவோ பிறக்கச் செய்ய வேண்டிய தகப்பனாருடைய உடலில், அதற்குரிய அணுப் பிரமாணமுள்ள அதிசூக்குமமான வித்தைச் செலுத்தி, முன்னரேயே அவருடைய வினைகளுக்குத் தகுந்த தலையெழுத்தை முன்னரே இறைவன் எல்லோருக்கும் எழுதி விட்டார்.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## கதிரச்சமதானி தேதியிடல் [RADIOACTIVE DATING]

ஆயிரக் கணக்கான வருடங்களிற்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய பாறைகளினதும், தொல்பொருள் சிதைவுகளினதும் வயதைக் கணிப்பதற்கு சில சமதானிகளின் (Isotopes) அரை ஆயுட்காலத்தை (சமதானியானது அதன் ஆரம்ப அளவின் அரை மடங்காகத் தேய்ந்து போக எடுக்கும் காலம்) பயன்படுத்தலாம். யூரேனியம் - 238 எனும் கதிரச்சமதானி 4.5பிலியன் (billion) (பிலியன் = இலட்சம் கோடி (1,000,000,000,000) (வருடங்கள் அரை ஆயுட்காலத்துடன் தேய்வடையும். இத்தேய்வின் (decay) ஆரம்ப விளைவும கதிர்த் தொழிற்பாடுடையதால், இவ் உடைவு தொடர்ந்து நடைபெற்று இறுதியில் ஈயம்-206 (Lead -206) எனும சமதானி உருவாகும். யூரேனியம் - 238 இனதும் ஈயம் - 206 இனதும் சார்புத் தொகைகளை அளவிடுவதன் மூலம் பாறை ஒன்றின் வயதைக் கணிப்பிடலாம். புவியிலுள்ள சில பழைய பாறைகள் 3.0முதல் 4.5பிலியன் வருடங்கள் ஆயுள் உள்ளவை எனக் கணிக்கப்பட்டுள்ளன. சந்திரனில் உள்ள பாறைகள், எரிந்த ஆகாயக்கல் போன்றவை ஆகக் கூடியது 4.5பிலியன் வருட ஆயுள் உள்ளவையென கணிக்கப் பட்டுள்ளது. இதனால்த்தான் புவியினுடைய வயது கூட கிட்டத் தட்ட 4.5பிலியன் வருடங்கள் எனப்பொதுவாக நம்பப்படுகிறது. இவ்வாறு கதிர்த் தொழிற்பாடுடைய சமதானிகளைப் பயன்படுத்திப் பொருட்களின் ஆயுட் காலத்தைக் கணிப்பிடுவது ''தேதியிடல்'' என அழைக்கப்படுகிறது.

## காபன் -14 தேதியிடல் [Carbon - 14 Dating]

தொல்பொருட் சிதைவுகளின் ஆயுள் கணக்கிடப்படும் போது பெரும்பாலும் காபனின் கதிர்த் தொழிற்பாடுடைய சமதானி பயன்படுத்தப்படுகிறது. காபன் - 14 ஆனது வளி மண்டலத்தின் மேற்பரப்பில், சாதாரண நைதரசனை அண்டக் கதிர்களில் (Cosmic rags) உள்ள நியூத்திரன்கள் மோதும் போது உருவாக்கப்படுகிறது.

$$^{14}_{7}N + ^{1}_{0}n \longrightarrow ^{14}_{6}C + ^{1}_{1}H$$

இச் செயற்பாடு, புவியிலுள்ள காபனீரொட்சைட்டில் ($Co_2$) காபன் -14 இனது செறிவு உறுதி நிலையை (Steady - state) அடைய வைக்கிறது. உயிர்வாழ் தாவரங்களும்,உயிரினங்களும் இச் சமதானியைத் தமது கலங்களில் உள்ளெடுக்கும். இவை இறக்கும் போது, காபன் - 14 உள்ளெடுக் கப்படுவது நிறுத்தப்படும். அத்துடன் தாவரங்களிலும், உயிரினங்களிலும் உள்ள காபன் - 14 ஆனது அதன் அரை ஆயுட்காலம் 5730 வருடங்களுடன் தேய்வடையத் தொடங்கி இறுதியில் நைதரசன் - 14 எனும் சமகானியை அடையும். எனவே தாவரங்கள், உயிரினங்களின் வயதை அளப்பதற்கு நாம் செய்ய வேண்டியது தொல் பொருட் சிதைவுகளில் மீதமாக உள்ள காபன் - 14 தொழிற்பாட்டினை அளப்பதாகும். உதாரணமாக ஒரு மாதிரியில் (sample), புதியதாவர மொன்றிலுள்ள காபன் - 14 தொழிற்பாட்டின் அரைப்பங்கு இருந்தால், அம்மாதிரியின் வயது

கலாநிதி.நா.சிவயோகன்
பௌதிகவியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

5730 வருடங்களாகும். அதாவது இது காபன் - 14 இனது அரை ஆயுட்காலமாகும். இதே போன்று இன்னோர் மாதிரி கால் பங்கைக் கொண்டிருந்தால், அதன் வயது 11,460 வருடங்களாகும். அதாவது, இது காபன் - 14 இனது இரண்டு அரை ஆயுட் காலமாகும்.

இங்கு, காபன் - 14 தேதியிடலில், சமதானியின் உருவாக்க வீதம் வருடக்கணக்கில் மாறிலியாக இருக்குமென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், உருவாக்க வீதம் மாறிலியாக இருக்க முடியாது. எனினும், கிட்டத்தட்ட 7000 வருடங்கள் வரை, காபன் - 14 தேதியிடல் மூலம்அளவிட்ட திகதிகள், மரங்களில் வருடாந்தம் உருவாகும் வளையங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. தரங் கணித்தல் வளையிகள் (calibration curves) வரையப்பட்டு சரியான திகதிகள் கணிக்கப்படும். பொதுவாக காபன் - 14, ஆனது 50,000 வருடங்கள் வரை ஆயுள் உள்ள பொருட்களின் வயதை ஓரளவு நுணுக்கமாக அளக்கப் பயன்படும்.

புராதன மக்களால் நெருப்பிற்காக எரிக்கப்பட்டு எஞ்சிய மரக்கரியிலுள்ள காபன் - 14 இனது தொழிற்பாட்டின் மூலம் அதன் வயதைக் கணித்து, அதன் மூலம் அதே தொல்பொருள் நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஏனைய சிதைவுகளின் வயதை மதிப்பிடலாம். அத்துடன், காபன் - 14 தேதியிடல் ஆனது. பழங் காலப் பொருட்கள் (antiques) எனக் கூறி விற்கப்படும் பொருட்கள் உண்மையானவையா எனப் பார்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

## திரித்தியம் தேதியிடல் [Tritium Dating]

ஐதரசனினுடைய கதிர்த் தொழிற்பாட்டுச் சமதானியான திரித்திரியமும் தேதியிடலில் பயன்படுத்தப்படுகிறது. இதன் அரை ஆயுட்காலம் 12.3 வருடங்களாகும். இதனால் இச் சமதானி 100 வருடங்கள் வரை ஆயுள் உள்ள பொருட்களின் வயதை மதிப்பிட உபயோகிக்கப்படுகிறது. இது, முக்கியமாக, உயர்வகை சாராயங்களின் (Vrandy) வயதை அறிய மிகவும் பயன்படுகிறது. இக்குடி வகைகள், 10முதல் 50வருடங்கள் வரை பழமையானதாக இருக்கும் போது அவற்றின் விலையும் மிக அதிகமாக இருக்கும்.

இவற்றை விட வேறும் பல சமதானிகள் வெவ்வேறு கால அளவுகளை உடைய பொருட்களின் அல்லது பதார்த் தங்களின் வயதைக் கணிக்கப் பிரயோகிக் கப்படுகிறது. பின்வரும் அட்டவணை முக்கியமான சில சமதானிகளையும், தேதியிடலில் அவற்றின் பயன்பாடுகளையும் காட்டுகிறது.

| சமதானி | அரை - ஆயுள் (வருடங்கள்) | பிரயோசமான கால வீச்சு | தேதியிடல் உபயோகங்கள் |
|---|---|---|---|
| காபன் -14 (carbon) | 5730 | 500-50,000 வருடங்கள் | மரக்கரி, சேதன பதார்த்தங்கள் |
| திரித்தியம்($^3_1H$) (Tritium) | 12.3 | 1 - 100 வருடங்கள் | வயது கூடிய குடி வகைகள் |
| பொற்றாசியம்-40 (Pottasium) | $1.3 \times 10^9$ | 10,000 வருடங்கள் முதல் புவியிலுள்ள வயது கூடிய பொருட்கள் வரை | பாறைகள், புவியின் மேற்பட்டைகள், சந்திரனின் மேற் பட்டைகள் |
| றேனியம் - 187 (Rhenium) | $4.3 \times 10^{10}$ | $4 \times 10^7$ வருடங்கள் முதல் அண்ட வெளியில் உள்ள வயது கூடிய பொருட்கள் வரை | எரிந்த ஆகாயக் கல் |
| யூதேனியம் - 238 (Uranium) | $4.5 \times 10^9$ | $10^7$ வருடங்கள் முதல் புவியிலுள்ள வயது கூடிய பொருட்கள் வரை | பாறைகள் புவியின் மேற் பட்டைகள், சந்திரனின் மேற் பட்டைகள். |

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 09**

சரியான விடை :-..........................
முழுப்பெயர் :-..........................
முகவரி :-..........................
..........................
கையொப்பம் :-..........................

இவ்வாரப் புதிர் இல:09
ஒரு பெட்டியில் 10 சோடி வெள்ளைக் காலுறையும், 10சோடி கறுப்புக் காலுறையும் இருக்கின்றன. இன்னொரு பெட்டியில் இதே அளவு வெள்ளைக் கையுறையும், கறுப்புக் கையுறையும் இருக்கின்றன. ஒரே நிறத்தில் ஒரு சோடி காலுறையும், ஒரு சோ கையுறையும் பொறுக்கிச் சேர்ப்பதற்கு இருபெட்டிகளிலுமிருந்து ஆகக் குறைந்தது எத்தனை காலுறைகளும் கையுறைகளும் எடுத்தாக வேண்டும்?

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 02.08.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர்
யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா வழங்கப்படும்.

*புதிர் இல.06*
*சரியான விடை:- பி.ப.4.00மணி*

*சரியான விடை எழுதி அனுப்பிய பலரில் பரிசு பெறும் அதிர்ஷ்ட சாலிகள்.*

**1.கணேசமணி ~ சங்கீதா**
**மாமல்லபுரம்**
**உடுவில்.**

**2.தமிழினி சண்முகசுந்தரம்,**
**வழக்கம்பரை**
**தொல்புரம், சுழிபுரம்**

**3.சிவநேசன் ~ சிவச்செல்வன்,**
**தொல்புரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

புதிர் 06ற்கான பரிசுப்பணத்தை அன்பளிப்புச் செய்வோர்
**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

**குறிப்பு: புதிர்ப் போட்டிக்கான விடைகளை அனுப்புவோர் தமது முழுப்பெயரையும், முழுமையான அஞ்சல் முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடவும்.**

# அண்ணல் காந்தியின்

# கஸ்தூரி திலகம்

**பரணீதரன்**



இன்று கணவர் சற்று சாவதானமாக உட்கார்ந்திருக்கிறாரே என்று அவரை அணுகினாள்.

"நம்ம மணிலாலுக்கு ஒரு கல்யாணம் செய்து விட வேண்டும். அவனுக்கு வயதாகிறது. எனக்கும் பிள்ளையின் அம்மாவாக ஒரு கல்யாணத்தில் ஜம்பமாக அலைய வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது" என்று குழைந்தாள்.

காந்தி அவளுடைய பெண் உள்ளத்தைக் கண்டு பரிதாபப்பட்டார். அரசியல் எரிமலையில் உட்கார்ந்து கொண்டிருந்தவருக்கு அவளுடைய தூய்மையான மனமும், கள்ளமற்ற பேச்சும் பூஞ்சோலைத் தென்றல் போல் குளுமையாக இருந்தது.

"அதற்கென்ன, சீக்கிரமே ஒரு பெண்ணைப்பார்த்து ஏற்பாடு செய்து விட்டால் போயிற்று...." என்றார் காந்தி.

கஸ்தூரிபாவுக்கு உவகை பொங்கிற்று.உள்ளம் குளிர்ந்தது.

"இந்தாருங்கள், இதைச் சொன்ன வாய்க்கு இன்னும் இரண்டு திராட்சை தருகிறேன், சாப்பிடுங்கள்" என்று எடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கக் காந்தி கையை நீட்டினார்.

"மிஸ்ரர் காந்தி. உங்களைக் கைது செய்கிறேன் தயவு செய்து உடனே என்னுடன் புறப்படுங்கள்" என்றார் அப்போது உள்ளே நுழைந்த ஒருபொலிஸ் அதிகாரி.

மனைவியுடன் குடும்ப விவகாரம் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அரசாங்கம் குறுக்கிட்டு, காந்தியைச் சிறைக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டது. நீதிமன்றத்தில் தம் மீது சுமத்தப்பட்ட பழியைக்காந்தி மறுக்கவில்லை. கருணை காட்டும்படி நீதிபதியைக் கேட்கவுமில்லை. மாறாக "தீமையுடன் ஒத்துழைக்க மறுத்த 'குற்ற'த்திற்காக எனக்குக் கடுமையான தண்டனை கொடுங்கள்" என்று தான் கேட்டார். தாராள மனத்துடன் ஆறு வருடம் கொடுத்தார் நீதிபதி! சிரித்த முகத்துடன் அதை ஏற்றுக் கொண்டார் காந்தி. மன்றத்தில் கூடியிருந்தவர்கள் மனம் கலங்கி அழுதார்கள். அவர் காலில் விழுந்து கும்பிட்டார்கள். கோடியில் உட்கார்ந்திருந்த கஸ்தூரிபாவும் கண்கலங்கினார், 'சிறையில் இந்த ஆறு வருடங்களும் என் கணவரை யார் கவனித்துக் கொள்வார்கள்' என்று.

பூனா சிறையில் காந்திக்கு உடல் நலம் குன்றியது. 'பால் அருந்த மாட்டேன்' என்று சொல்லி, வயிற்றைப் பட்டினி போட்டதில் அவர் எடை குறைந்தது; உடல் மெலிந்தது; அவ்வப்போது வயிற்றையும் வலித்தது.

கணவர் சிறையில் இருப்பதையாவது பொறுத்துக் கொள்ளலாம். 'அங்கே அவர் நோயுற்று வாடுகிறார்' என்பதைக் கேட்டு எந்த மனைவி தான் மன நிம்மதியுடன் இருக்க முடியும்? கஸ்தூரிபா கணவரைக் காண ஓடி வந்தார். கால்கள் வீங்கி, வயிறு ஒட்டி, தள்ளாடித் தள்ளாடி கணவர் நடந்து வந்த காட்சி கஸ்தூரிபாவின் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது. அதற்குள் அங்கே வந்த சிறை அதிகாரி "இதோ பாருங்களம்மா, தங்கள் கணவர் வீண் பிடிவாதத்தினாலேயே தம் உடம்மைக் கெடுத்துக் கொள்கிறார். பழரசமாவது அருந்தச் சொல்லுங்கள்" என்று சொன்னதும், கஸ்தூரிபா சிரித்துக் கொண்டார். "பாவம், என் கதிதானா உங்களுக்கும்? அவர் எப்போதுமே இப்படித்தான். "ஹி ஆல்வேஸ் மிஸ்சீப்" என்று தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் மொழிந்தார். இலக்கணத்திற்குக் கட்டுப்படாத அந்த இனிமையான மொழியைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். இந்தி, குஜராத்தியுடன் தம் மனைவி ஆங்கிலமும் 'கற்று' வருவதில் சற்று ஆறுதல் அடைந்தார் காந்தி.

இரண்டாண்டுகள் ஓடி விட்டன. காந்திக்கு வயிற்று வலி குறையவேயில்லை. திடீரென்று ஒரு நாள் நிலைமை முற்றி விட்டது. டாக்டர்கள் வந்தார்கள். அன்றிரவே, சிறையிலேயே ஆபரேஷன் நடைபெற்றது. ஒரு மாதத்திற்கெல்லாம் காந்தியை விடுதலை செய்துவிட்டது அரசாங்கம். 'அதைக் குறித்து மகிழ்வதா, அவர் உடல்நிலையைக் கண்டு வருந்துவதா என்று புரியாமல் திண்டாடினார் கஸ்தூரிபா. அல்லும், பகலும் கணவர் அருகிலேயே இருந்து தேவையான ஆகாரத்தை வேளாவேளைக்குக் கொடுத்து அவரை அக்கறையுடன் கவனித்துக் கொண்டார். மனைவியின் அருகாமையும் அவள் சொரிந்த அன்பும் சேர்ந்து காந்தியைச் சீக்கிரம் குணப்படுத்தின. கடவுளுக்கு நன்றி செலுத்தினார் கஸ்தூரிபா.

விதி கஸ்தூரிபாவைப் பார்த்துக்கண் சிமிட்டிச் சிரித்தது.

உடலில் தென்பு வந்ததும் உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு செய்து விட்டார் காந்தி. நாட்டில் இந்துக்களும்,முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழாமல் சண்டை பிடித்துக் கொள்வதைக் கண்டு மனம் வெதும்பிய அவர், அவர்களுடைய மனம் மாறுவதற்காக டெல்லியில் இருபத்தியொரு நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். நாடே அதிர்ச்சியுற்றது. கஸ்தூரிபா திகைத்தார். பாவம், யாரிடம் முறையிடுவார்? எதற்கென்றுதான் துன்பப்படுவார்? எத்தனை முறைதான் வேதனைப்படுவார்? வீட்டு விஷயமாக இருந்தால் எதையாவது சொல்லி கணவர் மனத்தை மாற்றலாம். இதுவோ நாட்டு விஷயம். கணவர் மனச்சாட்சிக்குக் கட்டுப்படும் மகாத்மா. அவர் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் கஸ்தூரிபா ஒரு சாதாரணப் பெண்! 'கணவன் நீண்ட ஆயுளோடு இருக்க வேண்டும், அவர் இருக்கும் வரைதான் தனக்கு வாழ்வு, பெருமை, மகிமையெல்லாம்' என்று நினைக்கும் ஓர் உத்தம மனைவி. இப்படி அடுத்து, அடுத்து சோதனைகளாக வந்தால் என்ன செய்வது? மன உறுதி இருந்து விட்டால் மட்டும் போதுமா? உடல் வலிமை ஈடுகொடுக்க வேண்டாமா? தன் கற்பின் துணை கொண்டு கணவன் உயிருக்காகப் போராடினார், அந்த நாள் சாவித்திரியைப் போல.

உண்ணாவிரதம் முடிந்தது. கஸ்தூரிபா மகிழ்ந்தார். ஆனால் காந்திக்கு மகிழ்ச்சி இல்லை. மக்கள் மனம் மாறியதாகத் தெரியவில்லை. அதற்காக அவர் மனமுடைந்து போகவுமில்லை. நாற்புறமும் சென்று நாட்டு மக்களை நேரில் சந்திக்க முடிவு செய்தார். புறப்பட்டு விட்டார். ரயிலில் பிரயாணம் செய்தார். மோட்டாரில் போனார். கால் நடையாகவும் சென்றார்.

"கதரையே அணியுங்கள், தீண்டாமையை ஒழியுங்கள், இந்து, முஸ்லிம் ஒற்றுமையை வளருங்கள்" இந்த மூன்று மந்திரங்களும் மூலை முடுக்குகளிலெல்லாம் முழங்கின. அரசியலைச் சிறிது காலம் மூட்டை கட்டி வைத்தார். 'முதலில் மக்கள் தூய்மை அடைய வேண்டும். அவர்கள் மனம் பக்குவம் பெற வேண்டும். அதற்குப் பிறகுதான் சுயராஜ்யம் கிடைக்க வேண்டும்.' போகுமிடமெல்லாம் தன் கருத்தை வலியுறுத்தினார். அவர் பின்னாலேயே கஸ்தூரிபாவும் சென்றார். கணவன் பேசிய மொழி கஸ்தூரிபாவுக்குப் புரியவில்லை. காந்தியைத் தரிசிக்க வரும் லட்சக்கணக்கான மக்களுடைய கண்களில் தேங்கி நின்ற ஏக்கம், அன்பு மிக்க அன்னைக்கு நன்றாகப் புரிந்தது.

ரயிலில் போகும்போது திடீரென்று குடும்பக் கவலை வந்து விடும் கஸ்தூரிபாவுக்கு. "ஹரிலாலிடமிருந்து கடிதத்தைக் காணோமே... மணிலாலுக்கு ஒரு கல்யாணம் செய்தாக வேண்டும்... இவர் இரண்டு நாட்களாக வயிற்று வலி என்கிறாரே, முன் மாதிரி ஆபரேஷன் செய்ய வேண்டியிருக்குமோ...?" சிந்தனை அலைகள் ஓயாமல் மோதி,அவர் உள்ளத்தை அரித்துக் கொண்டுசெல்லும்.

சுற்றுப் பிரயாணம் முடிந்தது.

'கஸ்தூரி, இனி ஒரு வருடம் நான் எங்கேயும் அலையப் போவதில்லை. ஆச்சிரமத்திலேயே தான் இருக்கப் போகிறேன். அரசியலைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. அதிகமாகப்பேசக்கூடப் போதில்லை."

"அதிசயமாயிருக்கிறதே! மழைதான் பெய்யப் போகிறது!"

"உண்மைதான். இனிமேல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மௌனவிரதம் இருக்கப் போகிறேன். வாயைத் திறக்கவே மாட்டேன்."

"சாப்பிடுவதற்குக் கூடவா?"

தன் நகைச்சுவைக்குத் தானே சிரித்துக் கொண்டார் கஸ்தூரிபா. கள்ளங்கபடமற்ற நெஞ்சு அவருடையது.

"இதோ பாருங்கள்! கொஞ்சம் நான் சொல்கிறபடி கேளுங்கள். முன்போலப் பிடிவாதம் பிடிக்காதீர்கள்.உங்களுக்கு வயது ஆகிறது."

"ஓகோ! உனக்கும் என் வயது தான் ஆகிறது. ஞாபகமிருக்கட்டும்..."

"யார் சொன்னது? நான் உங்களை விட ஆறு மாதம் பெரியவள், எங்கப்பா சொல்லியிருக்கிறார்...?"

"ஒன்றுமில்லை, நீ எப்போ பிறந்தே சொல்லு பார்க்கலாம்...?"

"சரிதான்! நான் என்ன படித்தவளா? இதையெல்லாம் ஞாபகம் வைத்துக்கொள்ள? எனக்கென்னமோ, நான் பிறந்து ரொம்ப வருடங்களான மாதிரி இருக்கிறது.. போன ஜென்மத்திலிருந்தே உங்களுடன் இருப்பது போல தோன்றுகிறது..."

"எனக்கு மற்றொரு ஜென்மத்திலும் உன்னுடனேயே இருக்க வேண்டும் போலிருக்கிறது. கஸ்தூரி" காந்தி சொல்லவில்லை அப்படி நினைத்துக் கொண்டார்.

ஆச்சிரமத்தில் கஸ்தூரிபா ஆனந்தத்தில் மிதந்து கொண்டிருந்தார். கணவர் போராட்டம் துவக்கமாட்டார், சிறைக்குப் போகமாட்டார், உண்ணாவிரதம் இருக்கமாட்டார், என்று நினைக்கும் போதெல்லாம் அவருக்கு மகிழ்ச்சி நிலை கொள்ளவில்லை. இருபது வயது குறைந்து விட்டது போல் காணப்பட்டார்.

ஆச்சிரமத்தில், முக்கியமாக சமையலறையில் அவர் அதிகாரமும் அட்டகாசமும் அமர்க்களப்பட்டன.

"அங்கே என்ன குப்பை? இந்தத் தட்டை ஏன் சுத்தமாகத் தேய்த்து வைக்கவில்லை? உருளைக் கிழங்கு அழுகிவிட்டதே, தூக்கி வெளியே எறியக் கூடாதா...?" என்று இரைச்சல் போட்டு மற்ற ஆச்சிரமப் பெண்களை வேலை வாங்கிக் கொண்டிருந்தார். அவர்களும் பயந்துபயந்து வேலை செய்தார்கள். சொற்கள் கடுமையாக வந்தாலும் 'பா' பஞ்சைவிட மிருதுவான நெஞ்சம் படைத்தவர் என்று எல்லோருக்கும் தெரியும்.

கஸ்துாரிபாவுக்குத் தனிக் குடிசை. அங்குதான் படுப்பார். காந்தி காலை நான்கு மணிக்குளெழுந்து விடுவார். ஆகவே. கஸ்தூரிபா மூன்றரைக்கு எழுந்திருப்பார். தான் எழுந்ததும், அவர் கணவர் படுக்கையைச் சுற்றி விட்டு முகம் கழுவுவதற்கு நீர் எடுத்து வைப்பார். பிறகு எல்லோரும் பிரார்த்தனைக்காகக் கூடுவார்கள். அன்றைய சுலோகத்தை முதல் நாளே மனப்பாடம் செய்து வைத்திருப்பார் காஸ்தூரிபா. சரியாக மனப்பாடம் ஆகாவிட்டால் மனக்திற்குள்ளேயே சொல்லிக்கொண்டு நிற்பார். தவறாகச் சொன்னால், கணவர் கவனித்து விடுவாரே!

பிறகு காந்தி 'வாக்கிங்' கிளம்பி விடுவார். அதற்கென்று அவருடன் போக நிறையப் பேர் இருப்பார்கள், ஆண்களும், பெண்களுமாக.

"அவர்கள் எத்தனையோ பெரிய விஷயங்களெல்லாம் பேசுவார்கள் நமக்கென்ன புரியும்?" என்று இருந்து விடுவார் கஸ்தூரிபா. கணவர் திரும்பி வருவதற்குள் குளித்து விடுவார். பிறகு அவர் குளிக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்வார். காலைச் சிற்றுண்டிகளைத் தயார் செய்து மூடிவைத்து விட்டு, பகல் சமையலைக் கவனிக்கச்சென்று விடுவார்.

காந்திக்கு எத்தனையோ அலுவல்கள். பேட்டி காண வருபவர்களுடன் பேச வேண்டும். கடிதங்களுக்குப் பதில் எழுதவேண்டும் தம் பத்திரிகைக்குக் கட்டுரை எழுத வேண்டும். இவை தவிர, தேசத் தலைவர்கள் வந்துவிட்டால் பேசிக் கொண்டேயிருப்பார். அவருக்கு மணி ஆவதும் தெரியாது, பசி எடுப்பதும் தெரியாது.

அதையெல்லாம் கவனித்துக் கொள்ளத்தான் கஸ்தூரிபா இருக்கிறாரே! "சாப்பிட்டு விட்டுப் பேசுவது தானே. வேளை தப்பினால் இவருக்குத்தான் ஒன்றும் ஒத்துக் கொள்வதில்லையே..." என்று தனக்குள்ளேயே சங்கடப்பட்டுக் கொள்வார். ஆனால் இதை எப்படி கணவரிடம் போய்ச் சொல்வது? உள்ளே வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போவார். காந்தி புரிந்து கொண்டு விடுவார்.

தன் கையால் கணவருக்குப் பரிமாறினால்தான் கஸ்தூரி பாவுக்குத் திருப்தி. கணவருக்குப் பிடித்ததைச் சுவையாகச் சமைத்து, வயிறு நிரம்பப் போட வேண்டும் என்று தானே எந்த மனைவியும் விரும்புவாள், ஆனால் ஒரு மனைவிக்கு உரிய அந்த உரிமை கூட சில நாட்கள் அவருக்குக் கிடைக்காமல் போய்விடும். "பா இன்றைக்கு நான் பாபுவுக்கு உணவு கொண்டு போய்ப் பரிமாறுகிறேன்." என்று ஒருத்தி வந்து கெஞ்சுவாள். மறு பேச்சுப் பேசாமல் விட்டுக் கொடுத்து விடுவார் கஸ்தூரி.

கஸ்தூரிபா காலைப் பிடித்தால் தான் காந்திக்கு இதமாக இருக் கும். கஸ்தூரிபாவுக்கும் தான் பிடி த்து விட்டால்தான் நிம்மதியாக இருக்கும். ஆனால் அதற்கும் எத்தனை போட்டி?

*(தொடரும்)*

---

**சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்**

### கடவுளே காப்பாற்று

ராபர்ட் இங்கர்சால் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தத்துவமேதை. அவர் தொடக்கத்தில் கடவுளைப் பற்றிக் கேலியாகப் பேசுவார்.

ஒரு தடவை இங்கர்சாலின் மகள் மாடிப் படிகளில் ஏறும்போது தவறி விழுந்து விட்டாள்.

அதைப்பார்த்த இங்கர்சால் தன்னை மறந்து பதறியவாறு "கடவுளே என் மகளைக் காப்பாற்று" என்று கதறி விட்டார்.

நல்ல வேளையாக இங்கர்சாலின் மகள் காயப்படாமல் தப்பி விட்டாள்.

ஆனால் தன் மகள் கடவுள் அருளால்தான் பிழைத்தாள் என்று ஏற்றுக் கொள்ள அவர் மறுத்து விட்டார்.

### முடிவில் ஆரம்பம்

நீதிபதியாக இருந்த ஏ.எஸ்.பி.அய்யருக்கு, 19 வயதில் திருமணம் நடந்தது. மனைவிக்கு அப்போது 11 வயது. ஒரு சமயம் அவர் இங்கிலாந்து சென்றிருந்தார். ஓர் ஆங்கில மாது அவரிடம், "காதல் இல்லாமல் கல்யாணமா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"நாங்கள் திருமணம் செய்து கொள்ளும் பெண்ணைக் காதலிக்கிறோம். நீங்கள் காதலித்த பெண்ணை மணந்து கொள்கிறீர்கள். உங்கள் காதல் முடிவடைகிற சமயத்தில் எங்கள் காதல் ஆரம்பமாகிறது," என்றார் அய்யர்.

### வேண்டாத பொருள்

மிக எளிய வாழ்க்கை நடத்தியவர் சாக்கிரடீஸ். காலில் செருப்பு கூடப் போடமாட்டார். ஆனால் கடைகளுக்குச் சென்று அங்கு விற்பனைக்கு உள்ள பொருள்களையெல்லாம் பார்ப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

'நீங்கள் தான் எதையுமே வாங்குவது இல்லையே! எதற்காக இதையெல்லாம் பார்க்கிறீர்கள்?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"எனக்கு வேண்டாத பொருட்கள் என்னவெல்லாம் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளத்தான்."

### தாகூரின் தவறு

ரவீந்திரநாத் தாகூர் ஒரு சமயம் மலேயாவுக்குப் போயிருந்தார். ஒரு பத்திரிகாசிரியர் அவரைத் தமது சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார். தாகூர் அதற்கு இடம் கொடுக்காததால் அவரைக் கண்டபடி தாக்கித் தமது பத்திரிகையில் எழுதினார்.

"இதற்கு ஏன் மறுப்பு சொல்லக் கூடாது" என்று ஒரு நண்பர் தாகூரிடம் கேட்டார்.

"அந்த ஆசிரியர் என்னை ஒரு அரசியல்வாதி என்று எண்ணி விட்டார். நான் அவரை ஒரு கனவான் என்று கருதி விட்டேன். இருவர் செய்ததும் தவறு என்பது இப்போது தெளிவாகத் தெரிந்து விட்டது" என்றார் தாகூர்.

# மௌனத்தின் தேடல்கள்

## இல்லை!
நூற்பதற்கு நூலுமில்லை
உண்பதற்கு உணவுமில்லை
வாழ்வதற்கு வழியுமில்லை
வாழ்வளிப்பார் யாருமில்லை.

*வே.நந்குமார்,*
*கொக்குவில்.*

## வயிற்றுக்கு உணவு!
சின்னவளே! கையில் தட்டு
ஏந்தியவாறு மரத்தோடு
சாய்ந்த படி உன் பசித்த
வயிற்றுக்கு உணவு
தேடுகின்றாயா...?

*K.கசீதன்,*
*அளவெட்டி.*

## சிறுமியே!
சிறுமியே!
உடுக்க உடையின்றி உனது
உடலை கோப்பையால்
மறைத்துக் கொண்டு
என்ன யோசிக்கின்றாய்
உனது வாழ்வும் - அருகில்
உள்ள வண்டி போல
சுழன்று ஓய்ந்து விட்டது
என்றா?

*ப.தர்ஷிகா,*
*யாழ்.இந்து மகளிர் கல்லூரி.*

## உதவிட மாட்டீரோ!
உற்ற உறவிழந்து
உள்ள பொருளிழந்து
உண்ண உணவின்றி
உயிர்க்காக்கத் துடிக்கிறேன்
உதவிட மாட்டீரோ....?

*P.தமையன்,*
*கற்குளம்.*

## உன்கதி என்னம்மா?
உடுக்க உடை இன்றி
உண்ண உணவும் இன்றி
உறங்க இடமும் இன்றி
உறவுகள் ஏதும் இன்றி
ஊர் தோறும் திரியும் தங்கையே
உன் கதி என்னம்மா?

*சு.தர்சிகா,*
*நல்லூர்.*

## சுழலுதையா....!
கயிறு பின்னும் தறியிங்கே
வெகு நாட்களாய் சுழலவில்லை
தட்டிலே உணவுமில்லை
தலையிங்கே சுழலுதையா..!


*T.B.T.குமார்,*
*ஆனைப்பந்தி.*

## தவி(ர்)ப்பு!
அப்பாவிற்கோ!
கசிப்பின் மீது மோகம்
இதை எண்ணி அம்மாவிற்கு
தினம் சோகம்! அதனால்
நான் இங்கு தினம்
தவி(ர்)ப்பு.

*எஸ்.கவிதரன்,*
*சண்டிலிப்பாய்.*

## ஐயமில்லை!
துள்ளி விளையாடும் வயதில்
துயரத்துடன்
தன் வயிற்றுப் பசியைப் போக்க
தட்டு ஏந்தி நிற்கும்
இந்தச் சிறுமி நிச்சயம் ஒரு
தமிழ்த் தாயின் குழந்தை
என்பதில் ஐயமில்லை.

*P. சூர்யா,*
*இணுவில்.*



## அவல நிலை!
பொருளாதாரத் தடை நீங்கியென்ன
பொருட்கள் விலை குறைந்தென்ன
எமக்கிங்கு ஒரு வேளை கஞ்சிக்கே
பிறரிடம் கையேந்தும் அவல நிலை.

*து.முகுந்தன்,*
*சாவகச்சேரி.*

## அவள் நிலை!
குடிசையொன்றில்
குறையாடையில் தனிமை மகள்
உரிமைகள், உணர்வுகள்
நசுக்கப்பட்ட நிலையில்
நடமாடும் ஏதிலி இவளுக்கு
ஏதனம் தான் ஆடையானதோ
இவள் வதனமும் தான்
சோபையிழந்ததோ!

*யோ.பிரஷாந்தி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## வருத்தமா? வியப்பா?
காற்றாடி சுழன்று
காவிச் செல்லாதோ
வறுமையென்று
வயிறு வற்றிய குழந்தை
வருந்தி நிற்கிறதோ
வியந்து நிற்கிறதோ?
உலக யதார்த்தத்தாலே...?

*சி.மதியழகன்,*
*அல்வாய்.*

## பிச்சைப் பாத்திரம்!
இவள் கையில் இருப்பது
அடுத்தவருக்கு அள்ளிக் கொடுக்கும்
அட்சய பாத்திரமல்ல
அடுத்த வேளைக்காய் ஏந்தி நிற்கும்
பிச்சைப் பாத்திரம்.

*வேல்நந்தன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## சிந்திக்க!
சின்னஞ் சிறுமியே
உன்நிலை சிந்திக்க
இவ் உலகில் தான்
யாருமில்லையோ?

*சாலினி.*

## விதிவரைந்த பாதை!
போரின் கோரத் தாண்டவத்தால்
உறவுகள் ஒட்டிக் கொண்டன
மண்மெத்தை மேல் – நானோ
அநாதரவாக பிச்சாபாத்திரமேந்தி
வீதிதோறும் திரிகின்றேன்.....
மனச் சுமைகளுடன் – என்
பாதை தேடி அலைகின்றேன் ......
விதி வரைந்த பாதை வழியே!

*ப.தர்மினி,*
*யாழ்.பல்கலைக்கழகம்*

## நீ ஏழை என்பதால்!
சகோதரியே
ஆடை செய்ய நல்ல
ஆலைகள் உண்டு
உண்டுகளிக்க
கனிதரு மரங்களுண்டு
பசுமையான சோலைகளுண்டு
அள்ளிக் கொடுக்க
தனவான்கள் உண்டு
நீ ஏழை என்பதால்
ஏதும் இல்லை உன் வாழ்வில்.

*அருமை - அன்பு,*
*கொற்றையூர்.*

## விடியலின் பாதை!
விடியலுக்காய் காத்திருந்து
விடைவராத வேளையிலே உன்
பிஞ்சுப் பருவத்தை
பஞ்சத்தோடு போக்குகின்றாய்
கலங்காதே
காலத்தின் ஓட்டத்தில்
கட்டாயம் பிறந்திடுமே
உனக்கான விடியலின் பாதை.

*J.தனேஸ்,*
*நல்லூர்.*

## கண்ணீர்த் துளி!
வாட்டிய வறுமையில் - தனிக்
காட்டில் ஏந்திய தட்டோடு நிற்கும்
அநாதை இவளின்
மௌனத் தேடலைப்
பார்க்கும் போது
இங்கு வருவது கவித்துளியல்ல
கண்ணீர்த்துளிகள் தான்!

*ஆனந்தன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## கூறுங்கள்!
இருக்க இடமில்லை
இராட்டினத்துக்கு கயிறில்லை
உண்ண உணவில்லை
உடுக்க உடையில்லை
அரவணைக்க தாயில்லை
ஆதரிக்க யாருமில்லை
கிடைக்குமா இனி
இவையெனக்கு
கேட்கிறேன் உங்களிடம்.

*யோ. தமிழினி,*
*கல்வியங்காடு.*

## தேடல்!
இருப்பிடம் இழந்து
இருவிழி சிவந்து
உழைப்பிற்கு ஆளற்று
உணர்வுகள் மரத்தும்
வாழ்வியலின் தேடலில்
வழியுண்டோ? என்
முகாரியின் விலாசம்
முகத்தில் மறைவதும் எப்போ?

*தி.ஜெயராஜ்,*
*நல்லூர்.*

## பிஞ்சே அஞ்சாதே!
காலை உணவிற்காய்
ஏந்திய தட்டு இது
மாலையில் கூட
ஒரு பருக்கை விழவில்லை
பிஞ்சே அஞ்சாதே - உன்
கைதன்னை கொண்டு
கைராட்டினத்தை சுற்று
கைத்தொழிலை தொடங்கிவிடு
காரிகையாய் நீ வளர
காசதுவும் சேர்ந்து விடும்.

*சி.சிவா,*
*முள்ளானையூர்.*

## பிஞ்சு மனம்!
அம்மா போயிருக்கிறாள்
அரிசி வாங்கவென்று
கஞ்சி காய்ச்சும் கனவோடு
கடுஞ் சமரில் எஞ்சிய
கடைசிச் சொத்தான
கைராட்டையருகே
கையில் கலயத்துடன்
காத்திருக்கிறது
இந்த - பிஞ்சு மனம்.

*புதுக்கவி*

## வலுவான உன் கரங்கள்!
கைத்தொழில் ஒன்றைக்
கற்றுக் கொள்
காலம் உனக்கு சோறு போடும்
சுய தொழிலை விருத்தியாக்கு
சுபீட்சமான எதிர்காலம்
உன் காலடியில்
வளமான வாழ்வுக்கு
வழிவகுப்பது
வலுவான உன் கரங்களே.

*ஞா.சுதர்சினி,*
*கைதடி.*

## சோகம்!
உறவுகள் பிரிந்தது சோகமா? உடன் பிறப்பை இழந்தது சோகமா?
வெளிநாட்டு மோகத்தால் நாகரிக மேன்மையைப்
பார்த்தது சோகமா? – இல்லை சமாதானம்
சீர்குலையப் போகுது என்று சோகமா.......?

*வி.உ ரேஷ், உ சன்*

## காத்திருப்பு!
யுத்தத்தின் கொடுமையால்
சகோதரர்களை இழந்தேன்
இப்போது என் மீது
ஏழை என்ற பட்டம்
சூட்டப் பட்டு விட்டதால்
ஒரு வேளை உணவுக்காக
காத்திருக்கிறேன்.

*A. அஜித்,*
*புன்கன்குளம்.*

## வாட்டிய வறுமையில் இவள்...!
ஊட்டிய உறவுகள் எவரும்
வீட்டில் இல்லை
வாட்டிய வறுமையால்
இவள் - தனிக்
காட்டில் அநாதை
இவளை இரக்கம்
காட்டி அணைப்பார் எவரும்
இங்கு இல்லையோ?

*சசி,*
*கொக்குவில்.*

## வழிமேல் விழிவைத்து!
நூல் நூற்று அதைக் கொண்டு
சந்தையில் விற்று உணவு
ஏதும் பெற்று வருவாள்
அன்னை என்று தன் வயிற்றை
சற்றேனும் நிரப்ப வழிமேல் விழி
வைத்துக் காத்துநிற்கின்றாளா?

*ப.விதுர்சன், கல்வியங்காடு.*

## இந்நிலை மாறுமா?
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அநாதையாய் [illegible]
வயிற்றுப் பசி போக்க
[illegible]
[illegible]

*சி. இன்பராஜ்,*
*மந்துவில்.*

## துணை ஏது?
மனிதங்கள் இங்கு மரத்துப்
போனதால் ஏந்திய தட்டும்
சாய்ந்து நிற்கும் மரமும்
முன்னிருக்கும் சக்கரமும்தான்
ஏழை இவளின்
எதிர்காலத் துணையோ?

*பிரதீபன்,*
*கொக்குவில்.*

## வழியுண்டு!
வாடைக் காற்றுக்கு
ஆடை இ(ல்)லை
வறுமைப் பூக்களுக்கு
வானம் கூரை
கையேந்தும் ஜாதியில்லை
கைவேலை நமக்குண்டு
கடைத்தேற வழியும் உண்டு.

*ச.பாரதி,*
*வேலணை.*

மௌனத்தின்



தேடல்கள் – 23

அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 03.08.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் –23
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்




**கவிதை!**

கற்பனையின்
வினாக்களுக்கான
பேனாவின்
விடைகள்!

சிவா- சசிகாந்.

## வைராக்கியம் !



மனிதா!
வைராக்கியத்துடன் இரு
தடைகள் உடைத்து
சரித்திரம் படைப்பேன் என்று

கடும் போரில்
கழுத்து துண்டித்தும் வன்னியில்
நிமிர்ந்து
நிற்கும் பனை மரங்கள் போல!

துடிக்க துடிக்க
துண்டு துண்டாய் வெட்டினாலும்
ஒட்டிக்கொள்ளும்
மலைப் பாம்பு போல!

இறைச்சித் துண்டுகளை
சாம்பலில் புரட்டினால்
உயிர் தரிக்கும்
பீனஸ் பறவை போல!

தோல்வியைக் கண்டால்
சோர்ந்து விடாமல்
வெற்றி கிட்டும் வரை
தோல்விக்கெதிராய்செயற்படு
நிச்சயம்
வெற்றி உன் வசம்!

தமிழ்ப்பிரியன்,
வட்டுக்கோட்டை.

## நட்பின் உணர்வு!



நீ என்னிடம்
பேசியதை விட
எனக்காகப் பேசியதில்

தான் உணர்ந்தேன்
நமக்கான நட்பை

அன்போடு பேசுவது
காதலுக்கு நல்லது
அன்போடு ஆறுதலாகப்
பேசுவது தான்
நட்புக்கு நல்லது
நட்பின் வழியே
கசியும் அர்த்தங்களை
எந்த மொழி பேசிவிடும்
நட்பே!

எஸ்.ஆகாஷ்
கல்வியம்பதி.

## ஒரு துளி கண்ணீர்!



நிமிடங்கள் தொலைந்து
நிம்மதி கெட்டு
நின்று விடப் போகுமென்
இதயம்
நின்றுவிடு முன்
நீ விட்டுச் சென்ற
காயத்தை விலக்கிவிடு
என் இதயத்திலிருந்து....!

நாளை...
என் நரம்புகள் செத்து
நாளங்கள் துடித்து - நான்
சாகு முன் - என்
நாவால் ஒரு முறை
உன் பெயரை
உன் முன்னால் உச்சரிக்க
அனுமதிப்பாயா? அல்லது
அடங்கிப் போகும் என்
ஆன்மாவுக்குள் - நீ
என் ஆசைகளைப்
புதைத்துப் போவாயா?

இன்று... உன்னைக் காணும்
என் கண்கள் - நாளை
உன்னைப் பார்க்க
விழித்திருக்காது

உனக்குத் தெரியாது - என்
நெஞ்சின் காயங்கள்
நீயோ...

உண்மையை
வெறுத்துவிட்டாய்
என் உணர்வுகளின் ஓசை
உன் காதுகளில்
கேட்டிருந்தால்
இத்தனை காயங்களை
எனக்குள் நீ தீட்டியிருப்பாயா?

செத்துப்போன என்
ஆசைகளும்
அடங்கிப்போன என்
உணர்வுகளும்
உன் நினைவுகளின்

வேகத்தால்
ஒரு கணம் எட்டிப்
பார்க்கின்றன

உன் நினைவுகளால்
இருண்டு போன இந்த உடலை
உயிர் விட்டுப் பிரிந்தபின்
வெட்டிப்பார்

உன் கண்களில் உயிர்
இருந்தால்
என் இதயத்தில் உன்
உருவத்தைக் காண்பாய்

அப்போதாவது
என் அன்பினைப்
புரிந்து கொள்வாயா?

எனக்காக வேண்டாம்
என் காதலிற்காய்
ஒரு துளி கண்ணீர்
என் இதயத்துள் சிந்துவாயா?

அல்லது
என் கல்லறைக்காவது
உன் கரங்களால்
மலர் தூவிப் போவாயா?

S.லக்கி,
கொக்குவில்.

## இளைஞனே...!



ஹயஸ் வாவும்
கீறோ கொண்டாவும்
கொண்டு ஊர்
சுற்றுவதும்

வேடிக்கையில்
மனம் இலயித்து
கோடிட்டுத் த்லை
மயிர் வெட்டி
குறுந்தாடி விட்டு
குடித்தாடிக் கிடந்து
கேம் எனக் கேட்டு
வீம்பு பேசுவதும்



சமூக மேடையில்
உன்னை ஏற்றும்
ஏணி என்ற
எதிர்பார்ப்பு
உன் பளிங்குப் பாதையில்
நீ தூவும் முட்களின் விதைகள்
இனியேனும்
மாற்றத்தில் மனம் வைத்து
உன் பாதையில் நல்ல
பூக்களைத் தூவு.

நா.நவராஜ்,
கொழும்புத்துறை.

## நெருடல்...!



அலையை அள்ளி அள்ளி
எறிகிறது கடல் அந்தி .
இளங்காற்று..... கடலை
விட்டிறங்கி இளைப்பாறிக்
கரை மணலில் குழந்தை
போல் உருண்டு புரள்கிறது
வருவதும் போவதுமாய்
வானளக்கும் கப்பல்கள்
தொலைவினிலே முத்துக்
குளிக்கும் 'அரைக்' கதிரோன்
இனிமையான பொழுது
எங்கும் செழிப்பு வாசம்
கவலையின்றிக் காலாறும்
நாகரிகம்
பண எலும்பை
எறிவதிலே பெருமையுற்று
இனிமைவாங்கும் இடாம்பீகம்
கரையோரக் கல்லணையில் கரைந்த படி காதலர்கள்
சிறகடிக்குஞ் சிட்டுக்கள்,சொர்க்கம் ஏறும் பட்டங்கள்
எனினும்.. எனது மனது இடறிற்று!
கண்ணுக்குள் மண்ணாய் ..இக்
காட்சிகள் உறுத்திற்று!!

வரும் வழியில் கண்ட வறுமை அழிவு ஏக்கம்
இருண்ட முகங்கள்....
என்னுள் பதறிற்று
அவர்களை இவர்கள் அறிவாரா?
அவர்களைப் பற்றி
இவர்கள் நினைப்பதற்கு நேரமுண்டோ?
அவர் துயரை
இவர்கள் என்றேனும் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டா?
கேள்வி கேட்டேன்...
ஒரே பதில் தான் கிடைக்குமென்றும் நானறிவேன்
இச் சூழல் மாறாது!
இது எனக்கு அந்நியமாய்
மாற... அந்தி தனை இரசிக்க
மனமின்றி மீள்கின்றேன்.

த.ஜெயசீலன்.

## விக்கலும் சிக்கலும்!

அடிக்கடி விக்கல் எடுத்தது
என்னை அன்னை கேட்டாள்...
மகனே என்ன திருடினாய்?

அவருக்கு எங்கே தெரியும்
அன்பே! நான் உன்...
இதயத்தைத் திருடியதை.....!


த.அஜந்த குமார்.
வதிரி.

## இனவெறி!

இலங்கை நாட்டில்
இடம் பிடித்துக் கொண்ட
இருதய நோய்
இதயமே இல்லாதவனால்
உருவாக்கப் பட்ட
இம்சைப் போராட்டம்!
ஆங்கில நாட்டவன்
அறிமுகம் செய்த
அரசியல் தந்திரம்
அணைக்க முடியாமலே
சுடர் விட்டெரியும்
கொள்ளிப் பிசாசு!
பரப்பி விட்டவனே – இன்று
பரிதாபப்படும்
தொற்று நோய்
இன்று அதனை
இல்லாமல் செய்ய
இன்னொரு நாட்டிடம்
கையேந்தி நிற்கும்
இழி நிலை.

ச.அனுஷா.
நீர்வையூர்.

## பொண்ணு ஒருத்தி சும்மா!



உனக்கென்ன
ஒரு பார்வையை
வீசி விட்டுப் போகிறாய்...
என் உள்ளமல்லவா
வைக்கோலாய்ப்
பற்றி எரிகிறது
உனக்கென்ன
ஒரு புன்னகையை
உதிர்த்து விட்டுப் போகிறாய்...
என் உயிரல்லவா
மெழுகாய்
உருகி விழுகிறது
உனக்கென்ன

போகிறாய்... போகிறாய்...
என் ஆன்மாவல்லவா
அழகாய்
உன் அடிகளில் மிதி படுகிறது!

அனலையூரான்.

# அவளின் முடிவு

சிறுகதை

மாலதி தன்னுடைய அறையில் கட்டிலில் படுத்திருந்த வண்ணம் கதைப்புத்தகம் ஒன்றை வாசித்துக் கெண்டிருந்தாள். வெளிச்சாலையில் அவளுடைய தகப்பனும், தாயும் கதைப்பது அவளுக்குக் கேட்டது. "புறோக்கர் வந்திட்டுப் போறார். கெதியிலை ஒரு முடிவைச் சொல்லட்டாம், மாப்பிள்ளை வீட்டார் இது சரிவராட்டி வேறு இடத்திலை பார்க்கவேண்டுமென்று நெருக்கினமாம். மாப்பிள்ளைப் பொடியன் பெரிய உத்தியோகம், தம்பியும் காலையில ரெலிபோன் எடுத்தவன். மாப்பிள்ளை வீட்டார்கேட்கிற காசை, தான் அனுப்புறனாம். வீணா காலத்தை இழுத்தடிக்க வேண்டாம் என்று சொல்லுகிறான்." "தாய்க்காரி சொன்னாள். சரி இரண்டு மூன்று நாட்களில் முடிவு சொல்லுகிறேன் என்று கூறிவிட்டு, தகப்பன் சுவாமி அறைக்குச் சென்றார்.

இராமநாதன் தெய்வத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர். எந்தப் பிரச்சினையையும் தெய்வத்திடம் விட்டுவிடுவார்.

அடுத்தநாள் அவருடைய ஊர்க்கோயிலில் தேர்த்திருவிழா. இராமநாதன் கோயிலின் வடக்குப்பக்கம் நிற்கும் அரசமரத்தின் கீழ நின்று தேர்த்திருவிழா நேரடி வர்ணனையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரை நோக்கி கணபதிப்பிள்ளை ஆசிரியர் வந்து கொண்டிருந்தார். "மாஸ்டர் எப்ப வன்னியால் வந்தனீங்கள்? ஐந்து வருடங்களுக்குப் பிறகு உங்களைக் காணுகிறேன். முன்பு இருந்த மாதிரித்தான் இருக்கிறியள். குடும்பத்தோடு வந்தனீங்களோ?" இராமநாதன் கேட்டார்.

"நான் தனியாத்தான் வந்தனான். மகன் வவுனியாவில் படிப்பிக்கிறான். மகள் கொழும்பிலை மாமன்காரருடன் இருந்து கம்பியூட்டர் படிக்கிறாள். அவவும் மகனோடு தான் இருக்கிறா. நான் தான் வன்னியிலை இருந்து கமம் செய்கிறேன். பென்சன் வந்தாலும், மகளை ஒருவனின்ர கையிலே கொடுக்கிறதென்றால் இந்தக் காலத்தில் எவ்வளவு தேவைப்படும்? நினைச்சுப் பார்த்தால் ஏக்கமாகத்தான் இருக்கும்." கணபதிப்பிள்ளை மாஸ்டர் கூறினார்.

"மகனுக்குத் திருமணம் முடிஞ்சுதோ?" இராமநாதன் கேட்டார். "அது சம்பந்தமாகத்தான் இஞ்சை வந்தனான். எங்கேயன் நல்ல பொம்பிளை சந்திச்சால் சொல்லன்" கணபதிப்பிள்ளை மாஸ்டர் கேட்டார். "மகன் என்ன நட்சத்திரம்?" "ரேவதி" "என்னுடைய மகளுடைய நட்சத்திரத்தோடு பொருந்தும், பொடியன் இங்கே இருக்கும் போது நல்ல குணம், அப்பவே எனக்கு அவனிலை நல்ல விருப்பம். இவனைச் செய்து வைத்தால், என்னுடைய மகளைக் கலங்கவைக்காமல் பார்த்துக் கொள்வான்" 'என்ன பேச்சையே காணோம் யோசிக்கிறதைப் பார்த்தால் எங்கேயோ பெண் இருக்கிறமாதிரித் தெரியுது' கணபதிப்பிள்ளை மாஸ்டரின் குரல் இராமநாதனின் சிந்தனையைக் கலைத்தது.

"ஒன்றுமில்லை, திடீரென்று ஒரு யோசனை" இராமநாதன் கூறினார். ஆனாலும் அவருடைய மனம் 'கேள், கேள்' என்று வற்புறுத்திக் கொண்டேயிருந்தது. ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டவர் "என்னுடைய மகளுக்கும் சம்பந்தப் பேச்சு நடக்குது. உங்கடை மகனுடைய நட்சத்திரத்துக்கு என்னுடைய மகளுடைய நட்சத்திரம் பொருந்தும் என்று நினைக்கிறன்.' இராமநாதன் கூறிவிட்டு, கணபதிப்பிள்ளை மாஸ்டரின் முகத்தைப் பார்த்தார்.

டாக்டர், என்ஜினியர் மாப்பிள்ளை எடுக்கக்கூடிய நிலையிலிருக்கும் இராமநாதன் தன்னுடைய மகனைக் கேட்ட அதிர்ச்சி



அவருடைய முகத்தில் பிரதி பலித்தது. "இந்தாரும் மகனுடைய குறிப்பு. பொருத்தமென்றால் பிறகு அதுபற்றிப் பேசுவோம். நான் நாளைக்கு உங்கடை வீட்டை வாறன்". கணபதிப்பிள்ளை மாஸ்டர் கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

அன்று இரவு இராமநாதன் வீட்டில் சூடான வாக்குவாதங்கள். "இவ்வளவு சீதனத்தைக் கொடுத்து ஒரு வாத்தியாரையோ மகளுக்குக் கட்டி வைப்பது? ஊர்ச்சனங்கள் என்ரை பிள்ளைக்குப் பெரிய உத்தியோகத்திலை மாப்பிள்ளை கிடைக்கும் என்று எதிர்பார்க்கினம். வசதியில்லா விட்டால் பரவாயில்ல, பேசாமல் அந்தச் சம்பந்தத்துக்கு 'ஓம்' என்று சொல்லுங்கோ" தாய் பேசினாள்.

"நீ உத்தியோகத்தைப் பார்க்கிறாய். அந்தஸ்ததை விரும்புகிறாய். நான் மகளுடைய சந்தோஷத்தை விரும்புகின்றேன். எத்தனையோ குடும்பங்களின் கண்ணீர்க் கதைகளைக் கேட்டிருக்கின்றேன். பார்த்துமிருக்கின்றேன்

பெரிய உத்தியோக மாப்பிள்ளை கிடைத்துவிட்டால் பெரிதாகக் கதைக்கும் ஊர்ச்சனங்கள், நாளைக்குக் குடும்பத்தில் ஒரு தகராறு வந்துவிட்டால் என்ன செய்வார்கள்? அடுத்தவர் குடும்பப் பிரச்சினையில் தலையிடக் கூடாது என்று சொல்லி வீதியில், வீட்டுக்குள் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

ஒவ்வொருவரும் தங்களுக்காக வாழவேண்டுமே தவிர மற்றவர்களுக்காகத் தங்களுக்குப் பிடிக்காத ஒரு வாழ்க்கையை வாழக்கூடாது.

கணபதிப்பிள்ளை மாஸ்டரின் மகன், குணமானவன், பெரிய உத்தியோகமுள்ள, அந்தஸ்துள்ள மாப்பிள்ளைகளுக்கு இப்ப பஞ்சமில்லை, ஆனால் குணத்தோடு கூடிய ஒரு மாப்பிள்ளை கிடைப்பதுதான் பஞ்சம்". இராமநாதன் உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விட்டு, அமைதியானார்.

"எதற்கும் பிள்ளையை ஒருக்கால் கேட்டுப் பாருங்கோவன்" தாய் சொன்னாள், "நாங்கள் கதைத்தது அவளுக்கும் கேட்டிருக்கும் நீயே கேள்" என்றார் இராமநாதன்.

க.தர்மலிங்கம்

தன்னுடைய அறையை நோக்கி யாரோ வருவதை மாலதி அறிந்தாள். அது தாயாக இருக்கும் என நினைத்துக் கொண்டாள். தாயினுடைய கேள்விக்கு அவள் பதிலைத் தயாராக வைத்திருந்தாள்.

"அம்மா, அப்பா சொன்னதெல்லாம் நடைமுறையில் இருக்குதுதானே. வெளியில் சிரிப்பைக் காட்டிக்கொண்டாலும், மனதுக்குள் புழுங்கி வாழும் குடும்பங்கள் எத்தனையோ உண்டு. பத்திரிகையில் வரும் புதினங்களை வெறும் செய்தியாக மட்டும் நாங்கள் எடுக்கக் கூடாது. அதை உணர்ந்து பார்க்க வேண்டும்.

கணவன், மனைவிக்கு இடையே உளப்பூர்வமான உறவு இல்லையென்றால் எல்லாம் பூச்சியந்தான். அப்பா எதையும் என் நன்மைக்காகவே செய்வார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அவர் எண்ணப்படியே விட்டு விடுங்களேன்" என்றாள் மாலதி.

# கோன் முறை அரசு

"சுகந்தன் உனக்குப் புறமோசன் கிடைத்திருக்கு" மேல்மாடியில் வேலை செய்யும் ராசேந்திரா அவசரமாக ஓடிவந்து எனக்குக் கூறிய போது என்னால் நம்ப முடியவில்லை. "வாசிலடன், முத்துகுணரெட்ணம், இ.பாலசந்திரன், சிவபாலன் எல்லாமாய் 15 பேருக்கு இந்த பிராஞ்சில் கிடைத்திருக்கு" அவர் தொடர்ந்தார். அடுத்த கிழமை திருகோணமலையில் உள்ள அக்சோபுர என்ற இடத்திற்கு இடமாற்றப்பட்டேன். தயிர் வியாபாரம் செய்யும் பண்டா வீட்டில் தங்கியிருந்தேன். எருமை மாட்டுத் தயிரை வாங்கிச் சிறிய சட்டிகளில் ஊற்றி உறைய வைத்து விற்பது அவரது தொழில். தெருவால் போகும் வாகனங்களில் செல்வோர் மறித்து அவற்றை வாங்குவார்கள். செங்கட்டியால் கட்டிய சிறிய வீடு மனைவி. இரண்டு பிள்ளைகள் ஆண்பிள்ளை கொழும்பில் பெரிய கல்லூரியில் படித்தார். பெண்பிள்ளை கந்தளாய் சிங்கள மகா வித்தியாலயத்தில் படித்தாள். கணவன் மனைவி இருவருமே காலியைச் சேர்ந்தவர்கள். இது எனக்கு வசதியாய்ப் போய் விட்டது. 1970 காலியில் வேலை செய்தபடியால் அந்த ஊர்களின் பெயர்களைச் சொல்லிக் கதைக்க அவர்களுக்கும் சிநேகித உணர்வு விரைவாக வந்து விட்டது. "கந்தளே" என்று தான் எல்லோரும் கூறுவார்கள். சிங்கள உச்சரிப்பு அது தான். கந்தளாய் நகரில் இருந்து கபறண நோக்கிச் சென்றால் சில மைல்கள் தூரத்தில் வருகின்றது. அக்கோபுர றோட்டுக்கு ஒரு பக்கம் கந்தீளாய்க் குளம். மறு பக்கத்தில் நெல் வயல்களும் குடியேற்றத்திட்டமும், ஒரே சிங்கள மயம். கமநலச் சேவை நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க் குடும்பம். கந்தோர்ப் பியோனுக்கு 55 வயதுச் சிங்களவர். காலையில் ஒரு பெரிய கப் பால் சூடாக அந்த வீட்டிலிருந்து வாங்கி வருவார். எனக்கு ஒரு கிளார்க் சிங்களப் பெண் சுகர் பக்டரியில் இருந்து வருவாள். கணவருக்கு அங்கு வேலை. குவாட்டசில் தங்கியிருந்தாள். "எங்கே பிடித்தாய் மாத்தை யாவை" என்று கேட்டேன். "கபறணச் சந்தியில் உள்ள வங்கியில் வேலை செய்தேன். அங்கு காசு போட வருவார் என்றாள். அவளுக்குச் சிறுகுழந்தை இருந்தது. பிள்ளைக்குப் பால் கொடுக்க வேண்டுமென்று பிகு பண்ணிக் கொண்டு நேரத்தோட வீடு செல்ல முயற்சிப்பாள்.

வங்கியில் பெரிதாக வேலையில்லை. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் விவசாயக் கடன் எடுத்திருந்தால் எங்கள் வங்கியில் கடன் எடுக்க முடியாது. கிராம வாசிகள் எல்லோரும் கடன் எடுத்துத் திருப்பிச் செலுத்தவில்லை. ஒன்று விட்ட ஒரு கிழமை யாழ்ப்பாணம் செல்வேன். மத்தியானம் திருமலைக்குப் போய் இரண்டு மணி பஸ் பிடித்தால் இரவு பத்து மணிக்கு ஆவரங்கால் போய்ச் சேர்வேன். கலியாணம் செய்த புதுசு மனைவி பார்த்துக் கொண்டிருப்பாள்.

சில சனிக்கிழமைகளில் கிண்ணியா செல்வேன். டொக்டர் தயாசிங்கம் அங்கு இருந்தார்.

1970 ஆம் ஆண்டு காலியில் என்னுடன் இருந்தவர். "என்ன தயிர் முதலாளிட்டை நல்லாத் தயிர் ஓசியாய்ச் சாப்பிடுகிறாய் போலிருக்கின்றது." என்று கிண்டல் செய்வார். தம்பலகாமம் செல்வேன். பாலகிருஷ்ணன், திருஞான சம்பந்தர் என இரு சகோதரர்கள் இருந்தனர். யாழ் இந்துவில் விடுதியில் இருந்து என்னுடன் படித்தவர்கள். தம்பலகாமம் ஒரே வயல் வெளிதான். கந்தளாய்க் குளத்தில் இருந்து தான் இவ் வயல்களுக்குத் தண்ணீர் வரும். பட்டி திடலில் அவர்கள் வீடு இருந்தது. ஒரு சமயம் மீசாலைக்குச் சென்ற போது அக்கபோதி மன்னன் என்று ஒரு சிங்கள மன்னன் இருந்தவன் அது தான் இந்தப் பெயர் என்று.

மிகவும் குறைவாகக் கதைத்து நிறையவே செய்த எனது தகப்பனார் தமிழ் ஆசிரியர்.மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர்.

பண்டாரா மெல்லிய உருவம் என்னைப் போல் நல்ல உயரம். சிகப்பு நிறம். நஸ்னல் அணிந்தவர். எந்நேரமும் அரசாங்கத்தைப் புகழுவார். 1977 பொதுத் தேர்தல்களுக்குச் சில மாதங்களே இருந்தது. பாராளுமன்றம் கலைக்கப்படவில்லை. வீட்டில் ஒரு வேலையாள் இருந்தான். அவன் எதிர்க்கட்சி. இரவில் வீட்டில் ஒரே விவாதம் நடக்கும். அரசாங்கம் தமிழர்கட்கு அநியாயம் செய்து விட்டதாக வேலையாள் கூறுவான். நான் பேசாமல் கேட்டுக் கொண்டு இருப்பேன். முதலாளி காகம் வெள்ளை என்று சொன்னால் கூட நான் ஓம் என்றுதான் சொல்வேன். ஏன் என்றால் அங்கு வேறு இருப்பிடம் தேடுவது மிகக் கடினம். அரசாங்கத் தலைவர்களின் படம் எல்லாம் வீட்டு உட்சுவர்களில் ஒட்டி வைத்திருந்தார். எல்லா இடங்களிலும் ஒரே பதட்டமாக இருந்தது. எப்படியாவது தேர்தலுக்கு முன் யாழ்ப்பாணம் செல்ல வேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன்.

சி.குமாரலிங்கம்

திருமலை மாவட்டக் காரியலயத்தில் யாழ் இந்துவில் என்னுடன் படித்த தனபாலசிங்கமும், வயித்திலிங்கமும் இருந்தார்கள். அவர்களை அடிக்கடி போய்ச் சந்தித்து லீவு பெற முயற்சித்தேன். திருமலையில் சம்பந்தன் கூட்டணியில் போட்டியிட்டார். நேமிநாதனுக்கு ரிக்கற் வழங்கப்படவில்லை. சம்பந்தன் திருமலை மாவட்டத்தில் செல்வாக்கு மிக்கவராகக் காணப்பட்டார். வட கிழக்குப் பகுதி எல்லாம் ஒரே உணர்ச்சிமயம் . தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையை வைத்துப் போட்டியிட்டது. சிறையில் இருந்த தீவிரவாத இளைஞர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களும் பல தேர்தல் கூட்டங்களில் பேசினார்கள். கூட்டணித் தலைவர்களுக்கு விரலைப் பிளேட்டால் கீறி இரத்தத் திலகம் இட்டனர் பல தமிழ் இளைஞர்கள். தயிர் முதலாளி பண்டாராவின் மகன் O/L படிப்பவர். அவர் சுகர் பக்டரிக் கூட்டத்தில் பேசினார். ஒரு மாதிரியாக லீவு கிடைத்தது. வீடு வந்து சேர்ந்தேன். வீட்டில் கிணற்றுத் தண்ணீரை தலையில் ஊற்ற எவ்வளவு ஆசையாக இருந்தது. கந்தளாய்க் குளத்தின் எல்லையில் குளிக்கும் போது எருமை மாடுகள் கலக்கிய தண்ணீரில் குளிக்க உடம்பெல்லாம் ஒரே மண்தான் தலையத் தடவ மண்தான் வரும். யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம் தான். பிரச்சினை எல்லாம் தீர்ந்து விடும் என்று நம்பினார்கள். பல கூட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் பார்த்தேன்.

தேர்தல் நடந்தது. அரசாங்கம் படுதோல்வி அடைந்தது. பழைய இடது சாரித் தலைவர்கள் எல்லோருமே தோற்கடிக்கப்பட்டார்கள். தேர்தல் வன்செயல்கள் தொடங்கின. எனக்குப் பண்டாராவின் ஞாபகம் அடிக்கடி வரும். ஏன் என்றால் நான் திரும்பி அங்கு செல்ல வேண்டும். உத்தியோகம் அங்கே. பண்டார அரசாங்கத்தின் தேசியமயக் கொள்கைகளை ஆதரித்து வாதம் செய்தது. வீட்டில் அவரது வேலையாட்கள் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவது பற்றி எதிர் வாதம் புரிவது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

பல வாரங்கள் நீடித்த கலவரங்கள் இனக்கலவரமாக மாறியது. கொழும்பில்இருந்து கப்பலில் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்கள், கொழும்பில் தொழில் புரிபவர்கள் எல்லாம் வந்து இறங்கினார்கள். யாரும் திருப்பி சிங்களப் பகுதிகளுக்கு வேலைக்குப் போகக் கூடாது எனப் பெரிய இயக்கம் ஆரம்பித்தார்கள். அதற்கு ஆதரவாகக் கூட்டங்கள் யாழ்ப்பாணத்திலும், பருத்தித்துறையிலும் நடாத்தினார்கள்.கடைசியாக ஒவ்வொருவராக இரகசியமாகப் போனார்கள். நானும் போனேன். திருமலை மாவட்டக் காரியாலயத்திற்குப் போனேன். எனக்குக் கிண்ணியாவிற்கு இடமாற்றம் தந்தார்கள். கொழும்பில் தலைமைக் காரியாலயத்திற்கு முன்னால் அம்பாள் கபே எரித்த கும்பலில் காணப்பட்ட உத்தியோகத்தர்கள் எனது இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள். எனது பொருட்களை எடுப்பதற்கு நான் அக்கோபுரவிற்குச் சென்றேன். எனக்கு ஒரே ஆச்சரியம், பண்டாராவின் வீட்டில் எல்லாப் பழைய படங்களும் கிழிக்கப்பட்டுப் புதிய அரசாங்கத் தலைவர்களது படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. "புதிய அர சாங்கம் நல்லது" என்று பண்டார கூறினார். புதிய அரசை ஆதரிக்காமல் தொழில் நடத்துவது கடினம் என்று சென்னார். தெருவில் நடக்கும் பொழுது சிங்களவர்கள் ஒரு வித புன்சிரிப்புச் சிரித்தார்கள். ஒரு மாதிரித் தப்பிவிட்டார்கள் என்பது தான் அதன் அர்த்தம்.

நேற்று நல்லூர்க் கோயிலில் அமர்ந்திருந்தபோது கோவிலில் பஜனை செய்பவர் "ஐயா சமாதானம் வருமா" என்று கேட்டார். நான் திருப்பிக் கேட்டேன் என்ன. சமாதானம் வந்து 6 மாதம் ஆகி விட்டது இப்படிக் கேட்கிறீர்கள் என்றேன். "இல்லை நிரந்தரமாய் நீடிக்குமா என்று சமாளித்தார்.

"நீங்கள் அதற்கு என்ன செய்தீர்கள்" என்று திருப்பிக் கேட்டேன் நான்.

* * *

## சிந்தனைக்கு....

* ஒவ்வொரு உயிரிலும் தெய்வீகத் தன்மை மறைந்திருக்கின்றது. வெளியேயும், உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி உள்ளே குடிகொண்டுள்ள இந்தத் தெய்வீகத் தன்மையை மலரும் படி செய்வதுதான் முடிவான இலட்சியம் ஆகும்.

* சுயநலம் அற்ற நன்மையின் அளவுதான் வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் எல்லா நேரத்திலும் நிர்ணயம் செய்கின்றது.

சுவாமி விவேகானந்தர்.



# மகளிர் உலகம்

## குழந்தைகளை அடிக்கலாமா?



குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பதில் இன்னும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. ''அணைத்து வளர்க்க வேண்டும்'' என்பது இன்னொரு சாரார் கருத்து. ''அடித்து வளர்க்க வேண்டும்'' என்பது இன்னொரு சாரார் கருத்து.

ஆனால் பல மேல் நாடுகளில் குழந்தைகளை அடிக்கக் கூடாது என்று சட்டம் செய்திருக்கிறார்கள். பெற்றோர் மட்டுமல்ல, பள்ளிக்கூடத்தில் கூட குழந்தைகளை அடிக்கக்கூடாது. ஆனால் நம் வீடுகளில் சில பேர் குழந்தைகளிடம் 'சட்' என்று கைநீட்டி விடுவார்கள். எதற்கு எடுத்தாலும் அடிதான். அம்மாவும் அடிப்பார், அப்பாவும் அடிப்பார். சில வீடுகளில் குழந்தைகளை அடிக்க என்றே பிரம்பு வைத்திருக்கிறார்கள்.

குழந்தைகளை அடிப்பது கெட்ட பழக்கம். அதிலும் அம்மா, அப்பா இருவரும் அடிப்பது மகா தவறு. இருவருமே ஆளுக்கொரு பக்கம் அடித்தால் அந்தப் பிஞ்சு ஆதரவு தேடி யாரிடம் போகும். தனக்கு யாரும் இல்லை என்ற எண்ணமும் பெற்றோர் மீது வெறுப்புந்தான் அக்குழந்தைக்கு ஏற்படும்.

இவ்வாறு குழந்தைகளுக்கு அடிப்பதால் அவர்கள் முரடு ஆகிவிடுவதற்குக் கூட சாத்தியம் இருக்கிறது. மனவளர்ச்சி குன்றி விடுகின்றது. படிப்பில் மந்தமாகி விடுவதோடு சுறுசுறுப்பற்றவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

எனவே குழந்தைகளை இயற்கையாக வளர விடுவது தான் நல்லது. அப்படி வளரும் குழந்தைகள் பிற்காலத்தில் சிறப்பாகவும், தன்னம்பிக்கை உடையவர்களாகவும், செந்தக் காலில் நிற்கும் வலிமை பெற்றவர்களாகவும் மாறிவிடுகிறார்கள். குழந்தைகள் குறும்பு செய்வது இயற்கை. அதனைக் கண்டு மகிழுங்கள். குறும்புக் குழந்தைகள் தான் நாளை புத்திசாலிகளாக இருப்பார்கள்.

தவறு என்பது மனிதர்களுக்குப் பொது. குழந்தைகள் தவறு செய்யும்போது அன்போடு கண்டியுங்கள். அவர்கள் தாங்களே திருந்தி விடுவார்கள்.

எனவே தாய்மார்களே! குழந்தைகளைப் பயத்துடன் வளர்க்காதீர்கள். நட்புரிமையுடன் வளருங்கள்.

## உருளைக் கிழங்கு ரொட்டி



### தேவையானவை

*பாண்துண்டு - 4*
*பெரிய உருளைக்கிழங்கு - 2*
*பெரியவெங்காயம் - 2*
*முந்திரிப்பருப்பு - 6*
*தேங்காய்த் துருவல் - தேவையானளவு*
*பச்சைமிளகாய் - 2*
*கெட்டியான தயிர் - தேவையானளவு*
*கொத்தமல்லி. கடுகு - 1/2 கரண்டி*
*தேவைக்கேற்ப உப்பு*

### செய்முறை

உருளைக்கிழங்கை வேகவைக்கவும். வெங்காயம், கொத்தமல்லி இலை இரண்டையும் சிறிதுசிறிதாக அரியவும். முந்திரப்பருப்பை வறுத்துக் கரகரப்பாகப் பொடி செய்யவும். பாணை தயிரில் நனைத்து வைத்துவிட்டு பச்சைமிளகாய், தேங்காய் இரண்டையும் அரைக்கவும். ஒருபாத்திரத்தில் எண்ணெய் விட்டு அடுப்பில் வைக்கவும். எண்ணெய் காய்ந்தவுடன் கடுகைப் போடவும். கடுகு காய்ந்தவுடன் வெங்காயத்தைப் போடவும். வெங்காயம் வதங்கியவுடன் உருளைக்கிழங்கை உதிர்த்துப் போடவும். பாண், அரைத்த தேங்காய், முந்திரித்தூள், உப்பு, கொத்தமல்லி இலை என்பவற்றைப் போட்டுக் கிளறி இறக்கவும்.


*S. கௌரி.*

## தீர ஆராய்ந்து தீர்வு காணுங்கள்!



திருமண வீடயமென்றால் மிக அவதானமாகவும் பொறுமையாகவும், அமைதியாகவும் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டியது அவசியமாகும். கல்யாண வயதை எட்டியுள்ள பருவப் பெண்ணைப் பெரும் சுமை என்று கருதும் பெற்றோர்களும், தன்னைச் சுமையாகப் பலரும் எண்ணுகின்ற பிரச்சினைக்கு என்று தான் விடிவு ஏற்படுமென்று எண்ணிப் பெரு மூச்சு விடுகின்ற பெண்களும் நம் மத்தியில் ஏராளம்.

பெண்ணுக்கு ஏதாவது நல்ல வரன் கிடைக்காதா? என்ற பெற்றோரின் ஏக்கமும், எதிர்பார்ப்பும் வழக்கமாகி வீட்ட ஒன்று. 'திருமணம்' ஆயிரம் காலத்துப் பயிர். அது பல காலம் செழிப்பாக இருக்க அதற்கு இடப்படுகின்ற ஆரம்ப நீரூற்றுக்கள் உரம், கவனிப்பு என்பன எதிர் காலத்தை கவனத்திலும், கருத்திலும் கொண்டு அத்திவாரம் இடப்படுமாயின் அப்பெண்ணின் வாழ்க்கை ஸ்திரத்தன்மையைக் கொண்டதாக அமையும்.



பெற்றோர்களால் தீர்மானிக்கப்படும் மாப்பிள்ளையை (வரன்) கல்யாணம் செய்வதில் பெண்கள் எல்லா விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமுள்ளது. பெற்றோர்களுக்குப் பிடித்திருந்தால் தனக்கும் பிடித்திருக்குமென்று பெற்றோரைச் சந்தோசப்படுத்தப் பயன்படுத்தும் வார்த்தையினால் பிற்காலத்தில் அப்பெண் கண்ணீர் சிந்த வேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.

பெரும்பாலும் பெண்களின் திருமணங்கள் பெற்றோரின் சுய விருப்பத்திற்காகவும், மிரட்டலுக்கும் பயந்தே பொருத்தமற்ற வாழ்க்கை வாழ நேரிடுகிறது. இதனால் அப்பெண்ணின் எதிர்பார்ப்பு, ஆசா பாசங்கள், விருப்புகள், கனவுகள் யாவும் காற்றோடு கரைந்து விடுகிறது. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்ற கருத்தில் உண்மை யுள்ளதா என நோக்கும் போது பெண் வாழ்க்கைச் சூழலைக் கருத்தில் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. பொருளாதாரம் வரதட்சணை பெற்றோரின் எதிர்கால நிலைமை, குடும்பச் சூழ்நிலை இவற்றைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனைய பெண்களைப் பொறுத்த வரையில் தங்களின் தகுதிக்கும், தராதரத்திற்கும் ஏற்ற வகையிலேயே திருமணம் நிச்சயம் செய்யப்படுகின்றது. அதனால் சில பெண்களின் வாழ்க்கையில் ஒளி தீபம் பிரகாசிக்கிறது. ஏனையோரது வாழ்வில் அது இன்னும் இருண்ட வண்ணமாகவுள்ளது. திருமணம் பற்றிப் பேசும் போது அது பெற்றோர் பார்த்து நிச்சயம் செய்த திருமணமாகவிருந்தாலும் தீரவிசாரித்து முடிவெடுப்பதில் இரு வீட்டாரும் பெரும் அக்கறையோடு செயலாற்றுவது பொருத்தமானதாகும்.

இந்த வழிமுறையை ஒவ்வொரு பெற்றோரும் பின்பற்றுவது அவசியமானதாகும். ஓர் வளமான திருமண வாழ்க்கையில் இணைகின்ற இரண்டு பறவைகளின் முழு வெற்றிக்கும் இருதரப்பினர்களின் பொறுப்புணர்வுகள் உண்மையாக வழங்கப்படுமாயின் ஒவ்வொரு பெண்ணின் வாழ்வும் சிறப்புப் பெறும்.

*என்.எஸ்*

## வாழ்க்கையில் முன்னேற...

- அளவுக்கதிகமாக ஆசைப்படக் கூடாது.
- இருப்பதை வைத்துச் சந்தோஷமாக இரு.
- கிடைக்காத ஒன்றுக்காய் கவலைப்படாதே.
- கிடைக்காது எனத் தெரிந்தால் அதற்காகக் காத்திருக்காதே.

## வெயிலோ வெயில்!



மழையைக் கண்டு ஆனந்தப்படுபவர்கள் வெயிலைக் கண்டால், சுருண்டு போய்விடுவார்கள். வெயில் கொஞ்சம் அதிகமானாலும் அவர்களால் அதைத் தாங்கவே முடியாது. வியர்த்துக் கொட்டும். காற்று இருக்காது. சீக்கிரமே களைப்பு எற்பட்டு விடும். சிலருக்கு வெயில் தலைவலி வேறு வேதனை தரும்.

கொஞ்சம் புத்திசாலித்தனமாக இருந்தால் இவர்கள் வெயிலைச் சமாளித்து விடலாம். எப்படி என்கிறீர்களா?

கோடை காலத்தில் சீக்கிரமே வெளிச்சம் வந்துவிடும். அதிகாலையிலேயே எழுந்துவிடலாம். இதனால் கொஞ்சம் நேரத்துடனேயே விழித்து எழுவது நல்லது. எழுந்ததும் குளித்துவிட்டு மிதமான சூட்டில் காப்பி குடித்துவிட்டு, வீட்டு வேலைகளைத் தொடங்கி விட்டால் வெயில் ஏறுமுன் வேலைகளை முடித்து விடலாம். இது வியர்வையிலிருந்தும் களைப்பிலிருந்தும் உங்களைக் காப்பாற்றி விடும்.

கோடைகாலத்தில் அசைவத்தைத்தவிர்த்து எளிய உணவுகளை அளவோடு உண்ணுங்கள். மதிய உணவில் தயிர் சேர்த்துக் கொள்ளுங்கள். இக்காலத்தில் எடுக்கும் தாகத்திற்கு அளவே இல்லை. தாகத்தைத் தீர்த்துக்கொள்ள இளநீர், எலுமிச்சைச் சாறு, மோர் போன்றவற்றை அதிகளவு அருந்துங்கள். இவ்வாறான பழச்சாறுகளும், குளிர்மையான உணவுவகைகளும் உடல் வெப்பத்தைத் தணித்து உங்கள் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

வெயில் ஏறஏறச் சில பெண்களுக்கு தலைவலி ஏற்படும். இவர்கள் மாத்திரை உபயோகிக்க வேண்டியதில்லை. குளிர்ந்த நிழலில் சற்று ஓய்வெடுத்தாலே தலைவலி பறந்து விடும். ஒரு நாளைக்கு இரு முறை குளியுங்கள். இதனால் உங்களுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். அது மட்டுமன்றி பருத்தி உடைகளையே அணியுங்கள்.

வெயில் காலத்தில் வெளியில் போனால் கையில் குடை பிடித்துக் கொள்ளுங்கள். வயதானவர்கள் உச்சி வெயில் நேரத்தில் வெளியே போகாதீர்கள். மாலையில் காற்றோட்டமான நேரத்தில் வெளியில் உலாவி வர வேண்டும். இது உங்களை, உடலை ஆசுவாசப்படுத்தும்.

உணவு, உடை, ஓய்வு இந்த மூன்றிலும் நீங்கள் கவனம் செலுத்தினால் வெயிலைச் சமாளித்து விடலாம்.

*எஸ்.கஸ்தூரி*

## அதிக மேக்கப் வேண்டாமே!

இன்றைய நவீன உலகில் எண்ணற்ற அழகு சாதனப்பொருட்கள் மலிந்து காணப்படுகின்றன. இன்றைய பெண்களில் சிலர் எது இல்லாவிட்டாலும் இருப்பார்கள். ஆனால் அழகு சாதனப் பொருட்கள் இன்றி இருக்க மாட்டார்கள். அந்தளவிற்கு இந்த அழகு சாதனப் பொருட்கள் அவர்களிடம் வரவேற்புப் பெற்றுள்ளது.

மேக்கப் போடுவதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் அதிகரித்த மேக்கப் மூலம் அப்போது முகம் பளிச்சென்று காணப்பட்டாலும் காலப் போக்கில் முகம் பொலிவிழந்து விடுகிறது. எமது முகம் மென்மையான தோலினால் ஆனது. எனவே அதனை நாம் பாதுகாப்பது அவசியம்.

அதிகளவு மேக்கப் போடுவதன் மூலம் முகத்திலுள்ள நாளங்கள் மூடப்பட்டு முகத் தோலுக்குச் செல்லும் காற்றோட்டம் தடைப்படுகிறது. இது முகத்தின் செழுமையையும், இளமைத் தோற்றத்தையும் இழக்கச் செய்கின்ற அபாயத்தை உருவாக்குகிறது.



அதிகளவு மேக்கப் முகம் விரைவாக முதிர்ச்சியடைய வழி சமைக்கிறது. அதிகரித்த முகப் பருக்கள் தோன்றி முகத்தை அசிங்கப்படுத்தி விடுகின்றன.

எனவே பெண்களே! இறைவன்படைப்பில் எல்லாப் பெண்களும் அழகானவர்களே. விசேட தினங்களில் என்றைக்காவது ஒருநாள் மேக்கப் போட்டுக் கொள்ளுங்கள். இதனையே தொடர்ந்து அதிகளவில் உபயோகித்து உங்களிடம் உள்ள இயற்கையான அழகை இழந்து விடாதீர்கள்.

*கே.கிருபா.*

# மரண விளையாட்டு

## தொடர்கதை

### அங்கம் 19

மாயவன்

நாம் இவர்களுக்குப் பிரதியுபகாரமாகத் தற்செயலாக உயிருடன் திரும்பி வந்தால் இவர்களுக்கு நல்ல நிலையில் பதவிகளும்,அந்தஸ்தும் பெற்றுத் தருவதாகச் சொன்னேன்.' என்று கூறிச்சற்றே நிறுத்தியவன் தொடர்ந்தும் 'ஆனால் இவர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.அதாவது நீ வைத்த பரீட்சையில் சித்தியடைந்து விட்டார்கள்' என்று முடித்தான்.

'ஓகே அர்ஜுன் இவர்களைத் தப்பவைக்கும் பொறுப்பு என்னுடையது. ஒவிசியல் ரீதியாக விடுவித்தால் வீண் பிரச்சினைகள் வரும். நான் இவர்களை என் அண்ணனைக்கொண்டு விடுவிக்கிறேன்' என்று கூறிக் கைதிகள் அனைவரிடமும்விடைபெற்று அர்ஜுனும், அரவிந்தும் புறப்பட்டனர்.

அரவிந் அர்ஜுன் கூட்டான அதிரடி நடவடிக்கையால் இலங்கையில் இயங்கி வந்த அப்துல் ரகீமின் தீவிரவாத அமைப்பின் பத்துக் கிளைகளும் அழிக்கப்பட்டன. இறுதி நடவடிக்கையாக நிரஞ்சினியையும் அவள் வீட்டில் தங்கியிருக்கும் மூன்று தீவிரவாதிகளையும் அழிக்கும் பொறுப்பை அர்ஜுனும், ப்ரியாவும் எடுத்திருந்தனர். அரவிந்த், அர்ஜுன், ரம்யா,கார்த்திக்,ப்ரியா ஆகியோர் அரவிந்தின் பங்களாவில் குஷன் சோபாக்களில் வட்டமாக அமர்ந்திருந்தனர்.

'ரம்யா நீ சொன்னபடி இனி நிரஞ்சினியையும்அவள் வீட்டில் தங்கியிருக்கும் தீவிரவாதிகள் மூவரையும் அரஸ்ட் பண்ணலாம்.'' என்றான் அரவிந்த்.

'டிடக்டிவ சேர் அந்தப் பொறுப்பை யார் ஏற்பது? வழமைபோல் நீங்களும் அர்ஜுனும் தானா?' என்றாள் ப்ரியா. 'இல்லை ப்ரியா இம்முறை நான் இந்த நடவடிக்கையில் இறங்க முடியாது.'

'அப்போ வேறு யார் யார் போவது?'

ப்ரியா நீயும் அர்ஜுனும் செல்லுங்கள். ஏதாவது அபாயம் என்றால் ரம்யாவையும், கார்த்திக்கையும் அழையுங்கள்' என்றான் அரவிந்த். ஓகே சேர் என்றாள் ப்ரியா.

'ஏன் அரவிந்த் நான் இதுவரையில் எந்த ஒப்பரேசனிலும் முழுமையாகப் பங்கெடுத்துக் கொள்வதில்லை. பார்க்கப் போனால் நான் பேசாமல் கை கட்டிக் கொண்டு பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்' என்று முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தாள் ரம்யா.

'ரம்யா ப்ளீஸ் கோபிக்காதே. இன்னும் நாம் சந்திக்க வேண்டிய ஆபத்துக்கள் எவ்வளவோ உள்ளது. இதுவரை சந்தித்தது வெறும் தூசு. இனித்தான் மிகப் பெரிய அபாயங்களில் தலையெடுக்கவுள்ளோம். அதில் இருந்து யார் யார் உயிருடன் திரும்புவோமோ தெரியாது. சிறிதளவேனும் இத்திட்டத்தில் பிசகு ஏற்பட்டாலும் நாம் மட்டுமல்ல எமது நாட்டு மக்களும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டும். நாம் எல்லோரும் எமது முழுத்திறமையையும் புத்தியையும் உபயோகித்தால் மட்டுமே வெற்றி பெற முடியும். ஆகவே நீ அதிருப்தி கொள்ளாதே இனித்தான் நாம் திறமையாகவும் செயற்பட வேண்டும் புரியுதா'

'உம்' என்றாள் ரம்யா மொட்டையாக.

'அர்ஜுன் ப்ரியா நீங்கள் இருவரும் இன்றே புறப்படுங்கள்.



நிரஞ்சினி வீட்டுக்குப் புறப்படுங்கள். ஆல் த பெஸ்ற்' என்று வாழ்த்தி விட்டு அனைவரும் கலைந்து சென்றனர்.

நிரஞ்சினி வீட்டில் தன் கூட்டாளிகள் மூவருடனும் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தாள். ''டியர் ப்ரண்ட்ஸ் அந்த டிடெக்டிவ் நாய் இனி நம்மேல்தான் கை வைக்க நினைப்பான். பெரும்பாலும் அவன் ப்ரெண்ட்ஸ் தான் வரப்பார்ப்பார்கள். நீங்கள் எமது ஆட்களில் பன்னிரண்டு பேரை அனுப்பி அவர்கள் எமது பங்களாப் பக்கம் வரப் போகிறார்களா என்று தெரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு வந்தார்களாயின் அவர்களை அந்த இடத்திலேயே நாசமாக்கி விடுங்கள்' என்றாள் ஆக்ரோஷத்துடனும், கண்டிப்புடனும். ''ஓ.கே நிரஞ்சினி இனி நாம் பொலிஸின் இடத்திற்குச் செல்ல முயற்சிப்போம்'' என்று ஒரு தீவிரவாதி கூறும் போதே செல்போன் கிணுகிணுத்தது. நிரஞ்சினி அதனை எடுத்துக் காதில் பொருத்தினாள்.

''எஸ் நிரஞ்சினி கியர்''

''..................''

''வாட் அவர்கள் வருகிறார்களா?''

''..................''

''ஆங் நான் கவனித்துக் கொள்கிறேன். ஓ.கே''

''........................''

''என்ன நிரஞ்சினி என்ன விஷயம்'' என்றான் தீவிரவாதி ஒருவன்.

''நான் நினைக்கவில்லை அவர்கள் இவ்வளவு சீக்கிரமாக வருவார்கள் என்று நீ போய் செய்ய வேண்டியவற்றைச் செய்'' என்று கூறிவிட்டு அவசரமாக எங்கோ புறப்பட்டாள்.

அர்ஜுனும் தன் பென்ஸ் ஸைச் செலுத்திக் கொண்டிருந்தான். அருகில் ப்ரியா. சிறிது நேரத்தில் தனது காரை ஒருகார் பின் தொடர்வதை அவதானித்தவன் உஷாரானான். பென்ஸின் வேகத்தைக் கூட்டிப் பறந்தவன்ஏர்ப்போட்செல்லும் சாலையில் பாய்ந்தான்.அவன் யூகம் தப்பாகவில்லை. அவனது காரைப் பின் தொடர்ந்து நான்கு கார்கள் பேய் வேகத்துடன் வந்துகொண்டிருந்தன.

ஏர்போர்ட்டைக் கடந்ததும் அடுத்த ஐந்தாவது கிலோமீற்றரில் நான்கு கார்களும் அர்ஜுனின் காரைத் தாண்டிச் சென்று குறுக்காகத் திரும்பி நின்று வழியை மறித்தன. அவைகளின் மறியலிற்கு வேண்டு மென்றே தன் காரின் வேகத்தைக் குறைத்தவன் இறங்கினான். தொடர்ந்து இறங்கப் போன ப்ரியாவைத் தடுத்து விட்டு காரின் முன்பக்கமாகச் சாய்ந்து நின்று கண்களால் நான்கு கார்களினையும ஊடுருவப பாததான.

நான்கு கார்களிலிருந்தும் எல்லாமாகப் பன்னிரெண்டு பேர் இறங்கினர். அவர்களின் முகத்தில் கொலை வெறி ஆக்ரோஷமாக ஆக்கிரமித்திருந்தது. அர்ஜுனை நெருங்கிய டஜன் உருப்படிகளில் ஒன்று தமிழை மென்றது.

''ஏய் நீதானே அர்சுனு?''

''டேய் முதலில் பெயரை ஒழுங்காக உச்சரிக்கப் பழகிக்கொள் தெரியுதா?''

''சரி ஆ கிடக்கட்டும், நீ மருவாதையாய் திரும்பிப் போய்விடு. நிரஞ்சினி மேடத்தோடை ஏதாவது விளையாட்டுக் காட்ட நினைத்தாய், கைமா பண்ணி மாட்டுக்கறியோட அனுப்பிடுவேன் ஜாக்கிரதை'' என்று எச்சரித்தவனை உறுத்து ஒரு பார்வை பார்த்தவன் எதிர் பாராத விதமாக ஓங்கி ஒரு புயல் குத்து விட்டான். அடிபட்டவன் அப்படியே அலறிச் சாய்ந்தான்.

''இது எப்படியடா இருக்கு கூலிக்கார நாயே'' என்றவனைச் சூழ்ந்து மீதி அனைவரும் தாங்கு தலைத் தொடுக்க வியூகம் அமைத்தனர். அதே வேளை காரில் ப்ரியா அர்ஜுனிற்கு அபாயம் ஏற்படின் களத்தில் குதிக்கத் தயாரானாள். அர்ஜுன் தான் அமைத்த ஸ்டேன்சில் பன்னிரெண்டு பேருக்கும் சுழன்றவன் அதே கணத்தில் மின்னலின் அண்ணணாய் இடப் பக்கமாகச் சுழன்று வலக்காலை உயர்த்தி ஒருவனின் அடி வயிற்றில் விட்டான் ஒரு உதை. அதே நொடியில் துள்ளி இடது முஷ்டியால் இன்னொருவனின் முகத்தில் ஸ்ராம்பஞ்ச் செய்தான்.

எட்டுப் பேரை நிலத்தில் சாய்த்தவனை நோக்கி மீதி நால்வரும் சூழவும் அர்ஜுன் காற்றில் எகிறிச் சுழன்று நொடியில் தரையில் சேர்த்தான். திரும்பி ஓடிவரும் ஒருவனின் தலை மயிரைக் கொத்தாகப் பிடித்தவாறு முகத்தில் நச் சென்று குத்தினான். குத்துப்பட்டவன் ''ம்மா'' என்றவாறு அலறிச் சாய்ந்தான்.

திடீரென்று சீழ்க்கை ஒலி. திரும்பி கவனம் சிதறினான் அர்ஜுன். ஒரு நொடி எதிராளிகளில் ஒருவன் அர்ஜுனை மணல் பள்ளமொன்றில் தள்ளிவிட்டு 12பேரும் பாய்ந்து சென்று கார்களில் ஏறிப்பறந்தனர். அர்ஜுன் பாய்ந்து சென்று பென்சில் ஏற ப்ரியா அதனை உசுப்பி அதற்கு உயிர் கொடுத்து பறக்கவிட்டாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிராளிகள் தென்படவில்லை.

நிரஞ்சினியின் பங்களாவை நோக்கிப் பென்சைச் செலுத்தச் சொன்னான். காரை நிரஞ்சினியின் பங்களாவின் சிறிது தூரத்தில் நிறுத்தி விட்டு இறங்கினார்கள். பதுங்கும் புலிகளாய்ப் பொத்தி பொத்தி நடந்து மதிலை அடைந்து அதில் ஏறி தட், தட் என்று குதித்தனர். தொடர்ந்து சுற்றுப்புறத்தை லேசாகப் பார்வையால் அலசிய வண்ணம் நடந்தார்கள். பங்களாவினுள் நுழையும், சமயம் ''நில்'' என்ற குரலை தொடர்ந்து தீவிரவாதி ஒருவன் ப்ரியாவை துப்பாக்கி முனையில்கொண்டு வந்தான். ''சந்தேகப்பட்டது சரியாகப் போய்விட்டது. டேய் நீ டிடெக்டிவ் நாயின் ப்ரண்ட் தானே'' என்று அர்ஜுனைநோக்கி வினாவினான்.

''ஆமாம் மரியாதைக்குரிய முட்டாளே''

''எங்கேயடா வந்தாய் மரியாதையாகத் திரும்பிப் போய் விடு''

''முடியாது''

போக மாட்டாய். வழியிலேயே மரண விசா எடுத்திருக்க வேண்டியவன். நல்ல காலம் தப்பி விட்டாய். இப்போது பார் என்றவன் ட்ரிக்கை அழுத்தப் போனான்.

சரியான சமயம் வந்தாய் அரவிந்த் என்று உலகே ஆனந்தமாய்கூவினான் அர்ஜுன்.


தீவிரவாதி அதிர்ந்து திரும்பினான். யாரும் இல்லை என்று தெரிந்ததும் சாத்தானாய் மாறினான். கிடைத்த மூன்று நொடி அவகாசம். அர்ஜுன் வலது காலை மடக்கி உயர்த்தி அவனின் துப்பாக்கிக் கையைச் சிதறடித்தான். காற்றில் உடலின்சுழற்சியைத் தொடர்ந்து தயங்கி மயங்கும் அவனின் பின்னந்தொடையைத் தாக்கினான்.

சண்டை உக்கிரமடைந்து காற்றில் ஏறி கங்காரு துள்ளல் அமைத்து அவனின் மேல் நெஞ்சில் உதைத்தான். சரிந்து விழுந்த தீவிரவாதியின் குரல் வளையை மிதித்தான். சடக் என்று என்பு முறிந்து தீவிரவாதி மரண தேசத்திற்கு விசா பெற்றான். அர்ஜுனும் பிரியாவும் நிரஞ்சினியைத் தேட ஆரம்பித்தனர். ஒவ்வொரு அறையாகத் தேடிவிட்டு அண்டர்கிறவுண் அறையினுள் நுழைந்தனர். ப்ரியா ரிவால்வரை எடுத்துக் கொண்டு ஒவ்வோர் அடியாய் அளந்து உள்ளே நடந்தாள். ஸ்டென்ஸ் அமைத்தபடி உடன் நடந்தான் அர் ஜுன். அறையின் சகல பாகங்களையும் அலசி விட்டு வெளியேறினர். வெளியே காரொன்று அவசரமாக புறப்படதைக் கவனித்த ப்ரியா குரல் கொடுத்தாள். ''அர் ஜுன் அதோ நிரஞ்சினி காரில் புறப்பட்டுப் தப்பிக்க பார்க்கிறாள்.'' அர்ஜீன் முன்னே ஓட ப்ரியா தொடர்ந்து ஓடினாள். பென்சினுள் நுழைந்து அதனை உசுப்பி உயிர் கொடுத்துப் பறக்க விட்டான். இரண்டு கார்களும் சாலையில் போட்டி போட்டுக் கொண்டு பாய்ந்தன.


(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற்



ஆனால் அந்த விடயம் யாகூ டிறெக்ரறியில் எந்தப் பிரிவுக்குள் வரும் என்று எமக்குச் சரியாக தெரியாத சந்தர்ப்பங்களில், அந்த விடயத்தை இந்த ரைப் செய்ய ஒதுக்கியிருக்கும் பெட்டிக்குள் ரைப் செய்து Search என்ற பட்டனை அழுத்தினால், நாம் ரைப் செய்த விடயத்தை ஒத்த டிறெக்ரறியில் இருக்கும் அத்தனை வெப் பக்கங்களின் முகவரியையும் யாகூ எமக்குத் தரும்.

உதாரணமாக நாம் tamil என்று ரைப் செய்து Search பட்டனை அழுத்தினால், யாகூ தமிழ் தொடர்பான தனது டிறெக்ரறியில் உள்ள அனைத்துப் பிரிவுகளையும், அத்தனை வெப் பக்கங்களையும் எமக்குத் தரும்.

நாம் மேற்சொன்ன முறையைப் பயன்படுத்தித் தேடும் போது, எப்போதுமே எமக்குத் தேவையான விடயத்தைக் குறுகிய வட்டத்திற்குள் வைத்திருப்பது விரும்பத்தக்கது. ஏனெனில், நாம் ஒரு விரிவான விடயத்தைத் தேடினால், இன்ரர்நெற் டிறெக்ரறிகள், பெருந்தொகையான வெப் பக்கங்களின் முகவரிகளை எமக்குத் தருகின்றன. ஆனால், எமக்குத் தேவையான முகவரியை அந்தப் பெருந்தொகையான முகவரிகளுக்குள் கண்டுபிடிப்பது கடினமான விடயமாகும். உதாரணமாக, நாம் தமிழ் tamil என்ற விரிவான ஒரு விடயத்தைத் தேடும் போது யாகூ எமக்கு 200இற்கும் மேற்பட்ட முகவரிகளைத் தந்ததை மேலே பார்த்தோம். அந்த 200 முகவரியையும் ஒவ்வொன்றாகத் தேடுவது என்பது நேரத்தை விரயமாக்கும் செயலாகும். எனவே நாம் எந்த ஒரு விடயத்தைத் தேடும் போதும், எமக்கு உண்மையில் என்ன தேவை என்பதை முடிவு செய்து கொண்டு அந்த விடயத்தைத் தேடினால் எமது தேடல் மிகவும் பிரயோசனமானதாக அமையும். உதாரணமாக, நாம் Tamil என்று தேடாமல், tamil cinema என்று தேடுவோமேயானால், எமக்குத் தேவையான முக்கியமான tamil cinema உடன் நேரடித் தொடர்புடைய வெப் பக்கங்களின் முகவரிகளே எமக்குக் கிடைக்கும்.

எமது தேடலை இன்னமும் சுருக்க வேண்டுமாயின், tamil cinema என்ற சொல்லை ரைப் செய்யும் போது மேற்கோள் குறிக்குள் ரைப் செய்தால் எமக்கு மேலும் குறைந்த, சிறந்த, தேவையான முகவரிகள் கிடைக்கும்.

இன்ரநெற் டிறெக்ரறிகளில், இன்னமும் நுணுக்கமான, சிக்கலான தேடுதல்களை நாம் மேற்கொள்ளலாம். ஆனால், நாம் இங்கே குறிப்பிட்ட சாதாரண தேடலே எமக்கு இன்ரநெற்றை இலகுவாக உபயோகிக்கப் போதுமானது. இன்ரநெற்றுடன் நன்கு பரிட்சயமான பின்னர், நீங்கள் விரும்பினால், நுணுக்கமான, சிக்கலான தேடல்களை மேற்கொள்ளலாம்.

இப்போது உங்களுக்கு இன்ரநெற்றிலே மிகவும் பிரபல்யமான யாகூ (YA-HOO - www. yahoo. com) டிறெக்ரறியை ஓரளவுக்கு உபயோகிக்கத் தெரியும்.

* * *

# இன்றைய விளையாட்டுலகில் இளமைக்கு ஓர் 'ஓ'போடு!

ஒரு கணம்....... உங்கள் மூளையெனும் Tape - Recorder இனை இம்மாதம் 13ம் திகதியை நோக்கி Rewind செய்து கொள்ளுங்களேன்! ஆம், கிரிக்கெட் மைதானங்களிற்கே மையத்தானமாகிய லோட்ஸ் அரங்கம் - அதுவும் இங்கிலாந்திற்கேயெதிராக - அதிலும் வெற்றி இலக்காக 326 ஓட்டங்களைப் பெறவேண்டிய ஓர் இறுதிப் போட்டி சற்றுச் சிந்தியுங்கள், ஒருநாள் போட்டிகளின் முதல் நிலைத் துடுப்பாட்ட வீரரான சச்சினின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து, வெறும் 143/5 என்ற நிலையில் களமிறங்குகின்றார். 21 வயது நிரம்பிய ஓர் இளம் வீரர். மறுபுறம் அங்கே ஆடுகளத்தில் இவரை வரவேற்று நிற்பவரோ இவரை விட ஒரு வயது குறைந்த இன்னொரு இளம் ஆட்டக்காரர். அதன் பின்........


இங்கிலாந்து இரசிகர்களின் பரிகாசப் போக்கும் இந்திய தேசத்தின் பரிதாப நோக்கும் அந்த இளம் இரத்தங்களைச் சூடேற்றத் தொடங்கின. படிப்படியாக, சாதுரியத்தையும் சாதிக்க வேண்டும் என்ற வெறியையும் ஒருங்கே இணைத்து, வாலிபத்திற்கேயுரிய துடுக்குடனும் அந்த வைபத்திற்கு வேண்டிய பொறுப்புடனும் ஓட்டங்கள் சேர்கின்றன. திடீரென விழித்து என்னதான் நடக்கின்றதென இங்கிலாந்து சுதாரிக்க முன்னரே நிலைமை கட்டுமீறிப் போய் விட்டது. தொடர்ந்து ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளின் மகத்தான வெற்றியுடன் இந்தியா தலை நிமிர, இப்போது விளையாட்டுலகையே ஆட்டிப்படைக்கும் ''இளமையின் தேடலிற்கு'' யுவராஜ் - கை.்.ப் இணை இன்னோர் உதாரணமாகியது.



இந்தியாவின் கை.்.பும் சிம்பாப்வேயின் ரைபுவும்

வேகமும், விவேகமும் வேண்டப்படும் விளையாட்டுலகில் தற்போது வேகத்தின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டு போவது போலவே தெரிகின்றது. நவீன தொழில் நுட்பத்தின் தயவினால் ஆட்டமொன்றின் நுணுக்கம் பற்றி எல்லோருமே அலசி ஆராயலாம் என்ற நிலையில் - அனுபவத்தின் அத்தியாவசியம் அடிபட்டுப்போக, ஆற்றல்மிக்க இளமையின்வேகமே வெற்றிப்படிகளை எட்டிக்கடக்க முடியும் என்பது போன்ற சூழ்நிலை சூல் கொண்டு விட்டது! ஆக்ரோஷத்துடன் கூடிய ஆட்டத்திறன், விருப்பத்திற்கேற்ப வளைந்து கொடுக்கும் உடல்வாகு, சமூக, பொருளாதார ரீதியாகக் கிடைக்கும் உற்சாகம் மிக்க எதிர்பார்ப்புக்கள், எல்லாவற்றிற்கும் மேலாகத் திகழும் அந்தப் பருவத்திற்கேயுரிய மனோதத்துவப் பாங்கு யாவும் சேர்ந்து - குருத்தோலைகளின் கலகலப்பைப் பார்த்துக் காவோலைகள் சலசலத்தே ஆக வேண்டும் என்ற நிலைக்கு - இளம் வீரர்களையும் மூத்த வீரர்களையும் ஒரு புதிய பார்வைக்கு உட்படுத்தியிருக் கின்றன.

சினிமா நட்சத்திரங்களிற்கும் மாடல் தெய்வங்களிற்கும் ஜொள் வடித்து (!) நிற்கும் இன்றைய இளம் சந்ததியினர் மத்தியில் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெறும் அடுத்த நிலை வேட்பாளர்கள் விளையாட்டு வீரர்களே. அந்த வகையில் பிரபலத்திற்கு மட்டுமல்ல பில்லியன்களின் கட்டுக்



பூரிக்கும் ஹுவிட்டும் யோசிக்கும் சாம்ப்ராசும்

களிற்கும் குறைவில்லாத இந்தத் துறையில் கொடிகட்டிப் பறப்பதற்குப் போட்டி இல்லாமலா இருக்கும்? இருக்கவே செய்கின்றது. கடும் போட்டி - அதுவும் கவர்ச்சியை மட்டுமே நம்பியிருக்க முடியாத, வக்கிரமற்ற உக்கிர போட்டி. ''திறமையிருந்தால் மட்டும் தாக்குப்பிடி; இன்றேல் நடையைக் கட்டு'' என்கின்ற கோட்பாட்டிற்குள் முட்டி மோதியே முன்னேற வேண்டிய கட்டாயம். இதற்குள்ளே சாதித்து எழ வேண்டுமாயின் அடுப்பங்கரையின் சூடுமட்டும் போதாது (ஹி.....ஹி... அனுபவந்தான்!); அநாயாசமான சக்தித்தேவையும் வேண்டப்படுகின்றதென்பதே இன்றைய விளையாட்டுலகில் இளம் நட்சத்திரங்களின் அபாரமான சாதனைகள் மூலம் தெரியவரும் உண்மையாகும்.

## துடியாட்டம் விரும்பப்படும் துடுப்பாட்டம்

கடந்த பதினாறு வருடங்களிற்கு மேலாக ஸ்ரீவ் அல்லது மார்க் என்கின்ற ''வோ'' க்கள் இல்லாமல் எழுதப்பட்டிருக்காத ஆஸ்திரேலிய ஒரு நாள் கிரிக்கெட் அணியின் பட்டியல், கடந்த மார்ச் மாதமளவில் அவர்கள் இருவரது பெயரையுமே இனங்காட்டத் தவறியதிலிருந்து கனவான்களின் விளையாட்டிற்கும் கட்டிளமை அவசியமே என்ற கருத்து வலுப்படத் தொடங்கியிருக்கின்றது. கடந்த தலைமுறையில் அனுபவங்களின் மூலமாகவே ஆட்டத்தின் பரிணாமங்களை அணுக முடியும் என்கின்ற நிலையிருந்தது. ஆனால் IBW க்களைக் கூட வீடியோக் கமராக்கள் துல்லியமாக்கின்ற இந்த யுகத்தில் அனுபவத்தின் சிபாரிசு மட்டும் அணித் தெரிவிற்குப் போதுமானதல்ல என்றாகி விட்டது.

இல்லாவிட்டால் ஹோலிவூட் சினிமாக் கதாநாயகன் கெட் - அப்பில், உலகின் நளினமிகு துடுப்பாட்டக்காரர் என்ற பெயருடன், அதிகளவான டெஸ்ற் பிடிகளைக் கொய்த (!) களத்தடுப்பாளர் என்ற சாதனையும் கொண்ட மார்க்வோவும், இந்த நூற்றாண்டு கண்ட தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவரும், மார்க்கிற்கு 4 நிமிடங்களிற்கு முன் இந்த மண்ணிற்குக் ''குடி வந்த'' வருமான ஸ்ரீவும் இப்பேர்ப்பட்ட துர்ப்பாக்கியத்திற்கு ஆளாக முடியுமா?


கிரிக்கெட் போட்டிகளில் - அதிலும் ஒரு நாள் போட்டிகளில் களத்தடுப்பு என்று வருகின்ற போது இளம் வீரர்கள் இன்றியமையாதவராகி விடுகின்றனர். சீறிப்பாயும் பந்துகளை மீறிப் போக விடாது மின்னலெனப் பாய்ந்து தடுக்கத் தேவையான அந்த நெகிழ்ச்சியும், விக்கெட்டுகளிற்குஇடையே வேகவேகமாக ஓடி ஓட்டங்குவிக்கும் உற்சாகமும் இளமையின் துள்ளலிற்கே இசைந்து கொடுக்கின்றன. இதனால் தான் லக்ஸ்மனைக் காக்க வைத்து விட்டு கை.்.ப் களத்தில் நிற்கிறார்! கிரகாம் தோர்ப் உட்கார்ந்திருக்க கொலிங்வூட் மட்டை வீசுகின்றார்! இன்றைய கிரிக்கெட்டின் இன்னொரு கில்கிறிஸ்ட் என்று வர்ணிக்கக் கூடியளவிற்கு வளர்ந்துள்ள சங்கக்காராவின் முன் களுவித்தாரனாவின் அனுபவம் எடுபடாததும் இதே அடிப்படையில்தான்.

ஆஸ்திரேலியாவிற்கு ஒரு ஸ்ரீவ்வோ என்றால் அன்ட்டி .்.ப்ளவர் சிம்பாப்வேயிற்கு எனப்படும் சந்தர்ப்பத்தில் கூட, அந்த அன்ட்டி ''.்.ப்ளவர்'' எனும் ஜாம்பவான், வெறும் 19 வயதே நிரம்பிய ரய்புவிடம் விக்கெட் காப்பாளரிற்கான கையுறைகளைக் கையளித்து விட்டு, அந்தப் பிஞ்சின் சுகந்தத்தை அருகில் நின்று ''மணந்த''வாறே இரசிக்கின்றார் என்றால் இளமையின் தேடலின் சுவாரசியம் மேலும் தெளிவாகின்றது. வேகப் பந்து வீச்சாளர்களை அதிகம் கொண்ட ஆஸ்திரேலியத் தெரிவு அணியில் பிரெட்லீயின் அசுரவேகமே மக்ராத்திற்கு ஜோடியாக அவர் மாற உதவியது. இவ்வாறு எத்தனையோ எடுத்துக் காட்டுக்களை முன் வைக்கலாம். ஆனால் முடிவாகப் புலப்படுவது ஒன்றே ஒன்றுதான். - அதாவது தொழில் சார் துறையாகப் பரிணமித்திருக்கும் இவ்வாட்டத்தில், வெற்றி ஒன்றே இலக்காகக் கருதப்படும் நேரத்தில், களம்பல கண்டு காயப் பட்டவர்களைவிட, களமினிப் புகுந்து களைகட்டப் போகும் இளமையின் திறமைகள் வரவேற்கப் படத் தகுதியானவையே என்பதே அது ஆகும்.

## ரீனேஜால் கலங்கும் ரென்னிஸ் உலகம்!

பந்தை அடிப்பதன் மூலம் பணத்தைப் புரட்டவல்ல இன்னொரு பிரபலம்மிக்க விளையாட்டே ரென்னிஸ். ஆனால் இங்கும் குறித்த அந்த நேரத்தில் உடலின் உச்சக்கட்ட வலுவைப் பயன்படுத்துகின்றபோதே வெற்றி நிச்சயம் என்ற அவசியம் நிலவுகின்றது. அவ்வாறு பார்க்கின்ற போது ஆக 16 இற்கும் 22 இற்கும் இடைப்பட்ட வயதினரே தற்கால ரென்னிஸ் உலகின் தாரகைகளாக ஜொலிக்கிறார்கள். உலகின் மிகப் பெரும் ரென்னிஸ் போட்டி (Grand Slams) களையெல்லாம் உரித்தாக்கிக் கொண்டுவரும் வில்லியம்ஸ் சகோதரிகளிலிருந்து கடைசி விம்பிள்டனைக் கைப்பற்றிய உலகின் ஆடவர் முதல் நிலை ஆட்டக்காரரான ஆஸ்திரேலியாவின் லெய்ட்டன் ஹுவிட் வரை எல்லோருமே இந்த வயதெல்லைக்குள்ளேயே நிற்கிறார்கள்.

சாதனைத் தடவைகளாக 13 Grand Slam பட்டங்களைச் சூடிய பீட் சாம் ப்ராஸ், 2001 அமெரிக்கத் திறந்த போட்டியில் ஹுவிட்டிடம் இறுதிப் போட்டியில் துவண்டதன் பின் மராட் ச.்.பீன், அன்ட்டி ரொடிக் போன்ற ''பாலகர்''களின் வேகத்தின் முன் ஈடுகொடுக்க முடியாது திணறியிருக்கின்றார். சாம்ப்ராஸிற்குத் தெரிந்த நுட்பங்களில் ஓர் இருபது சதவீதமேனும் தெரிந்திருக்குமோ தெரியாது ச.்.பீனிற்கு! ஆனாலும் பூமித்தாயின் மடியில் வீழ்ந்ததில் சாம்ப்ராஸிலும் பார்க்க ஒரு தசாப்தம் அளவு பின்தங்கிய இவ்வீரர்களின் ஆட்ட வேகமே அந்த மாபெரும் வீரரையே கலங்கடிக்க வைத்திருக்கின்றது. இதே நிலைதான் மகளிர் பிரிவிலும். க.பொ.த.(சா/த) இல் கற்கும் ஒரு மாணவி சர்வதேச ரென்னிஸ் ஆட்டமொன்றில் சாம்பியனானால் எப்படியிருக்கும்? அப்படித்தான் 1997 இல், மூன்று Grand Slam கிரீடங்களை முடிசூடியவாறே மார்ட்டினா ஹிங்கிஸ் என்னும்பூங்காற்று ரென்னிஸ் உலகினுள் புதியதொரு புயலாகப் பிரவேசித்திருந்தது.



மார்க் - ஸ்ரீவ் வோக்கள்

முப்பத்தைந்து வயதுவரை ஆரோக்கியமாய் ஆடவல்ல கிரிக்கெட், ரென்னிஸ் ஆட்டத்துடன் ஒப்பிடுகையில் ஓரளவு பரவாயில்லை போலிருக்கின்றது. வெறும் வெள்ளிவிழா ஆண்டு பூர்த்தியானவுடனேயே ''இந்தக் கிழத்திற்கு இனியென்ன விளையாட்டு?'' என்ற விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறார்கள் ரென்னிஸ் வீரர்கள்! கோல்.்.ப், சதுரங்கம், பில்லி யாட்ஸ் போன்ற விளையாட்டுக்களின் பாங்கு வேறு; கிரிக்கெட், ஹென்னிஸ், உதை பந்தாட்டம், மெய்வன்மையின் தடப் போட்டிகள் (Track Events) என்பவற்றின் போக்கும் வித்தியாசமானது. முன்னையவற்றில் சாதுரியத்தை வைத்தே சாதித்துச் செல்லலாம். பின்னைய ஆட்டங்ளிலோ சமயோசிதம் மட்டுமன்றி சக்திப் பிரயோகமும் அபரிமிதமாகத் தேவைப்படுகின்றது. இதனாலன்றோ பிறேசிலில் நிகழ்ந்த சுற்றுப் போட்டிகளில் அதிக கோல் பெற்றிருந்த ரொமாரியோவைப் புறந்தள்ளிவிட்டு இருபதுகளின் தொடக்கத்தில் நிற்கும்ரொனால்டின்யோ ஆசியாவிற்கு வந்தார்!

## எப்படியிருக்குமோ எதிர்காலம்?

எவ்வளவுதான் வாலிபம் வந்து வலுவுற்று நின்றாலும் உடலையும் உள்ளத்தையும், ஆரோக்கியமாக வைத்திருக்கும் வரை மூத்தவீரர்களை எவருமே முறியடிக்க முனைவது கடினமே. சுமார் 40 வயதுகளை அண்மித்த நிலையிலும் இங்கிலாந்தின் விக்கெட்டுகளிற்கு முன்னாலும், பின்னாலும் அலெக்ஸ் ஸ்ரூவாட் செய்யும் அற்புதங்கள் அதே அகவையையொத்த மைக்கேல் ஜோர்டான் 30,000 புள்ளிகளைப் போட்டு முடித்த பின்பும் கூடையை நோக்கி எம்பிக்குதிக்கும் குதூகலங்கள்; இருபத்தைத் தாண்டிய பின்பும் தனது முதலாவது கிராண்ஸ்லாமை ஜெயித்திருக்கும் ஜெனீ.்.பர் கப்பிரியாற்றியின் உற்சாகங்கள்; இவற்றிலும் ஒருபடி மேம்பட்டு ''மீண்டும் ஆஸ்திரேலிய ஒரு நாள் கிரிக்கெட் அணியில் இடம் பெறப்பாடுபடுவேன்'' எனக் கூறும் ஸ்ரீவ் வோவின் மனோதிடங்கள் போன்றவை என்னதான் இளமைகள் துள்ளினாலும் ''அவர்கள் அவர்கள் தான்!'' என்கின்ற அளவிற்கு அனுபவம் மிக்க மூத்த வீரர்களிற்கு ஓர் அளப்பரிய கீர்த்தியையே ஏற்படுத்தியிருககின்றன.

**க.சேந்தன்**

முன்னேறிவரும் உயிரியல் - இலத்திரனியல் தொழில் நுட்ப இணைப்பின் மூலம் தேவைப்படும் மனிதவலுக்கூட, செயற்கையாக - ஆடிக் கொண்டிருக்கும் போதே - அதிகளவில் கிடைக்கக் கூடியளவிற்கு வழங்கும் சாதனங்கள் அபிவிருத்தியடையும் போது மீண்டும் ''அனுபவமே வாவா, அரைகுறைகள் போபோ'' என்கின்ற பழைய ''லோஜிக்''குகள் தலைதூக்கலாம். ஆனாலும் சாத்தியப்பாடுகளுடனும் சமுதாய ரீதியான விளையாட்டு நோக்குகளுடனும் அவதானிக்கும் போது வேகத்திற்கும் துடிப்பிற்குமே வெற்றி நிச்சயிக்கப்படப் போகின்றது போலவே தெரிகின்றது. ஐம்பதுகளிற்குப் பின்னரும் அரிதாரம் பூசிவிட்டு, ''சுற்றிச் சுற்றி வந்தீக!, வெற்றிக் கொடியை நட்டீக!'' என்று சாதிப்பதற்கு விளையாட்டு ஒன்றும் சினிமாவுமல்ல, வீரர்களொன்றும் படையப்பாக்களுமல்ல.

ஆக மொத்தத்தில் இன்றைய விளையாட்டுலகில் சாதிக்க வேண்டும் என்ற ஆதங்கத்துடனும் நிற்கும் இளம் வீரர்களின் செல்வாக்கு அதிகரித்திருக்கின்றதே என்பது உண்மையாகும். ஆனால் இந்த நிலைமை வலுப்பெறுமா? இன்றேல் மீண்டும் அனுபவத்திற்கே அதியுயர்தானம் கிடைக்கப் போகின்றதா? என்பது காலத்தின் ஓட்டத்திலேயே தெரியவரும்.

**எப்படியோ ஆடுபவர் நன்றாய் ஆட, அதைப் பார்த்திருப்போர் பரவசத்தை நாட... விளையாட்டுக்கே ஓர் ''ஓ'' போடு!.**

* * *




## பொது அறிவு

❄ நூறு இல்லாத நாடு எது?
சவுதி அரேபியா

❄ எமது உடலில் குருதி பாயாத பகுதி எது?
கண்ணின் கருமணி

❄ நின்று கொண்டே தூங்குவன எவை?
யானை, குதிரை

❄ இலங்கையில் முதன்முதலில் தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு?
1857

❄ உலகிலேயே மிக உயரமான இடத்திலமைந்த ஏரி?
டிட்டிக்கா ஏரி

❄ இலங்கையில் மிருகக்காட்சிச்சாலை உள்ள இடம் எது?
தெகிவளை

*லோ.கோபிக்கிருஸ்ணா,*
*யா.கொழும்புத்துறை இ.ம.வி.*

## விநாயகர் தலை



கு.பிரதீபன்,
யா.கந்தரோடை
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## கஸ்தூரி திலகம்



யோ.ஜசிந்தா,
கம்பர்மலை

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## பாரில் புதுமைகள் சேர்த்திடுவீர்

முதுகில் புத்தகப் பையுடனே
முந்திச் செல்லும் பிள்ளைகாள்
எதுவும் கற்று அறிந்திட
ஆசை கொள்ளும் பிள்ளைகாள்

அன்னை தந்தை உறவினர்
அன்பைப் பேணி வாழுவீர்
என்றும் உயர்வு கொள்ளவே
எதையும் ஆய்வு செய்குவீர்

தினமும் உடலைப் பேணிடவே
தேகப் பயிற்சி செய்திடுவீர்
மனதில் உறுதி கொள்வதால்
வெற்றி என்றும் கிட்டுமே

தெருவோரம் காணும் பொருட்களை
தீண்டின் அபாயம் நேரலாம்
குருவின் சொல்லைக் கேட்டுமே
கற்று உயர்வு கொள்ளுவீர்

தமிழர் என்ற பெருமையை
தரணி தன்னில் நாட்டவே
தமிழர் தம் கலைகளை
அறிந்து தெளிவு கொள்ளுவீர்

ஒற்றுமை எங்கும் ஓங்கிடவே
ஒன்றாய் இணைந்து கைகோர்த்து
பற்றுடன் மண்மேல் வாழ்ந்திடுவீர்
பாரில் புதுமைகள் சேர்த்திடுவீர்.

*சி.சிவதாஸன்,*
*அரியாலை.*

## நான்

எனது பெயர் தி.நிரோஜன்
எனது அப்பாவின் பெயர்
ச.திருச்செல்வம்
எனது அம்மாவின் பெயர்
தி.ஜெந்திரா
நான் யாழ் மத்திய கல்லூரியில் தரம் இரண்டில் கல்வி கற்கிறேன்.
எனக்கு ஒரு சகோதரர் உண்டு
எனக்குப் பிடித்த பாடம் தமிழ், ஆங்கிலம்
எனது நண்பர்கள் அஜித், சாந்தன், அபிரா
எனக்குப் பிடித்த விளையாட்டு கிரிக்கெட்
எனது இலட்சியம் மருத்துவர் ஆக வேண்டும் என்பதே.

தி.நிரோஜன்,
யாழ்.மத்திய கல்லூரி.

## சென்றவார விவேகப் புதிருக்கான விடைகள்

| | | |
|---|---|---|
| 13 | 18 | 11 |
| 12 | 14 | 16 |
| 17 | 10 | 15 |


## இவ்வார விவேகப் புதிர்

ஒரு இலக்கத்தை முறையே தனித்தனியாக 2ஆல், 3ஆல், 4ஆல், 5ஆல், 6ஆல் வகுத்தால் ஒவ்வொன்று மீதி வரும். ஏழால் மட்டும் வகுத்தால் மீதம் வராது அந்த இலக்கம் என்ன? முயன்று பாருங்கள். முடியாவிட்டால் அடுத்த வாரஇதழில் எதிர் பாருங்கள்.

நா.மகேந்திரலிங்கம்.

## நாடுகளும் வீடுகளும்

*(வர்ணிப்புப் பெயர்கள்)*



- நியூக்கினியா - மரக்குறிவீடு
- வட அமெரிக்கா - குடிசை வீடு
- கிறீன்லாந்து - பனிக்கட்டி வீடு
- சைபீரியா - சுரங்க வீடு
- ஜப்பான் - காகித வீடு
- ஆபிரிக்கா - குகை வீடு
- சீனா - செங்கட்டி வீடு
- கலிபோர்னியா - மூங்கில் வீடு
- அவுஸ்திரேலியா - பற்றை வீடு
- ஹவாய் - புல்வீடு
- பிலிப்பைன்ஸ் - மரவீடு

இ.சிவசுதன்,
ஹாட்லிக் கல்லூரி.

## Proverbs பழமொழிகள்

❖ Friend in need is a friend in deed
ஆபத்துக்கு உதவுபவனே உண்மையான நண்பன்

❖ Many a slip between the cup and the lip
கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை

❖ Man Proposes, God disposes
தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது

❖ Health is wealth
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

❖ All that glitters is not gold
மின்னுவதெல்லாம் பொன்னல்ல

*சி.சித்திராங்கி,*
யாழ்.இந்து. மகளிர் ஆரம்பப் பாடசாலை.

பிரம்மச்சாரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கின்ற ஒரே ஒரு காரணத்தினாலேயே எல்லா விதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்று விட முடியும்.
*சுவாமி விவேகானந்தர்*

## வேண்டாத நட்பு..!



ஒரு குளக்கரையில் எலி ஒன்று வசித்து வந்தது. அந்தக் குளத்தில் வசித்து வந்த ஒரு தவளைக்கும் எலிக்கும் இடையே நட்பு ஏற்பட்டது.

இரண்டும் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் உல்லாசமாக உரையாடி மகிழ்ந்தன. தாங்கள் இருவரும் இணை பிரியாத நண்பர்களாக இருக்க வேண்டும் எனத் தவளையும், எலியும் தீர்மானித்தன. இதற்காகத் தவளை தன் காலுடன் எலியின் காலை ஒரு நீண்ட கயிற்றினால் பிணைத்தது. அந்தக் கயிற்றின் பிணைப்பை நட்பின் பிணைப்பாகக் கருதி தவளையும், எலியும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தன. .

நண்பர்களிற்கு கயிறு மூலம் ஏற்பட்ட அந்தப் பிணைப்புக் காரணமாகப் புத்துணர்ச்சியும், உற்சாகமும் அடைந்த தவளை பேரானந்தத்துடன் நீருக்குள் துள்ளிப் பாய்ந்து அங்கும் இங்கும் நீந்திச் சென்றது.

தனது காலுடன் எலியின் கால் பிணைக்கப்பட்டிருக்கும் விடயத்தை தவளை மறந்து விட்டது.

தவளை தண்ணிருக்குள் பாய்ந்த போது அதன் காலுடன் கயிற்றினால் பிணைக்கப்பட்டிருந்த எலியும் தண்ணீரில் விழுவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

தண்ணீரில்விழுந்த எலி தவளையினால் அங்குமிங்கும் இழுத்தடிக்கப்பட்ட போது நீரில் மூழ்கி மூச்சு விட முடியாதபடி இறந்து விட்டது. தன் நண்பன் இறந்து விட்ட செய்தியைத் தவளை அறியவில்லை.

உயிரிழந்த எலியின் உடல் உப்பி தண்ணீரின் மீது மிதக்கத் தொடங்கியது.

அப்போது வானத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு கழுகின் கண்களில் நீரில் மிதக்கும் எலியின் உடல் தென்பட்டது.

உடனே கழுகு கீழ் நோக்கிப் பறந்து வந்து தன் கால்களால் அதனைப் பற்றி எடுத்துக் கொண்டு திரும்பவும் ஆகாயத்தில் பறந்தது.



அவ்வாறு கழுகு மேலே சென்ற போது எலியின் காலுடன் பிணைக்கப்பட்டிருந்த தவளையும் சேர்ந்து வருவது தவிர்க்க முடியாததாகி விட்டது.

எலியுடன் சேர்த்து தவளையையும் உண்டு மகிழ்ந்தது கழுகு.

சிறுவர்களே!

கதையைப் படித்தீர்களா? ஒத்த இயல்பு, வாழ்க்கை முறை உள்ளவர்களுடன் கொள்ளும் நட்புத்தான் என்றும் நீடிக்கும். நீங்களும் உங்களிற கேற்ப நண்பர்களைத் தெரிவு செய்து மகிழ்ச்சியுடன் வாழுங்கள்.

*தொகுப்பு:- சுஜா*

# விதுர்ஷிகாவின்

**இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல: — 22**

படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தேவலோக கன்னி ஒருத்தியின் பெயரைக் கொண்ட நடிகை இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 03 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

‘இவரைத் தெரியுமா போட்டி இல:- 22’
‘விதுர்ஷிகா நகையகம்’,
1/5,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ‘வலம்புரி’ காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: — 22**

படத்தில் உள்ளவரின் பெயர் :- ..............................

அனுப்புபவரின் முழுப் பெயர் :- ..............................

அனுப்புபவரின் முகவரி :- ..............................
..............................
..............................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 21 சரியான விடை**





**கலைஞர் மு. கருணாநிதி**

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 21 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

**முதற்பரிசு :—** மு.கிருசாந்
பருத்தித்துறை வீதி,
குடமியன்,
வரணி.

**இரண்டாம்பரிசு:—** இ.ராஜரட்ணம்
657/1, தொடர்பகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம்பரிசு:—** க.தயாளன்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-
*த.அரவிந்தன் கோண்டாவில், க.வசந்தன் மானிப்பாய், மு.புஸ்பராணி பருத்தித்துறை, பொ.செந்தூரன் வரணி, சு.கிரிதரசர்மா புத்தூர், யோ.கலாரஞ்சினி சாவகச்சேரி, V.நாகநாதி யாழ்ப்பாணம், கு.கார்த்திகன் சுன்னாகம், செ.அச்சுதன் கொழும்புத்துறை, மா.மகாலிங்கம் கைதடி, வ.ராதா யாழ்ப்பாணம்.*


## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### ராஜயோகம்


தியானம் 1 அல்லது 2நாட்களில் செய்து முடிக்கக் கூடிய காரியம் இல்லை. அடைய விரும்பும் ஒருவன் முதலில் நல்லபலனை அடையாவிடில் மனதில் கவலை கொள்ளாமல் மறுபடியும் மறுபடியும் அவன் வெற்றி பெறும் வரை இதைச் செய்ய வேண்டும். தியானம் சரியானபடி இருந்தாலும் அல்லது சரியாக இல்லாதபடி இருந்தாலும் மனிதனுக்கு அது அவசியம். மனது ஒரு நீருள்ள குட்டையைப் போலுள்ளது. சிறு காற்றுக் கூட அதன் பரப்பைக் கலக்கும். அடிக்கடி எண்ண அலைகள் மனத்திற்குள் வருகின்றன. அலைகள் மனதில் கலக்கத்தை உண்டு பண்ணியும் மற்றும் எண்ணங்களைக் கொண்டு வந்தும் பலத்தைச் சிறிது காலத்தில் குறைத்து விடுகிறது. மனிதன் ஒரு பாட்டில் இரத்தம் மாத்திரம் அல்ல. மாமிச பிண்டமாயும் எலும்புகள் உள்ளதாயுமிருக்கிறான். விரும்பல் வெறுத்தல் உள்ளவனாக இருக்கிறான். கொள்கைகள் உணர்ச்சிகள் நம்பிக்கையுள்ளவனாகவும் இருக்கிறான். பிறப்பிலிருந்து இறக்கிற வரையும் சுகமானதும் கஷ்டமானதுமாகவுள்ள அனுபவங்களை அடைகிறான். அவனுடைய மனது பல தரப்பட்ட உணர்ச்சிகள் எண்ணங்கள் அடங்கிய பழைய மரங்கள் வைக்க கூடிய இடம் மாதிரி ஆகிறது. இவைகள் எல்லாம் அவனுடைய தெய்வீக குணத்தை அடக்குகிறது.

(தொடரும்....)





அ.துஷந்தினி
வயது - 16
வன்னியசிங்கம் வீதி,
கைதடி மத்தி, கைதடி.
வழமையானவை




சி.நித்தியா
வயது - 19
திருநெல்வேலி தெற்கு,
சைவப்பாடசாலைலேன்,
திருநெல்வேலி.
வானொலி, பேனா நட்பு



அ.யாழினி
வயது - 20
பீச்றோட் ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
பத்திரிகை வாசித்தல்




ப.வினுஷா
வயது - 16
கல்லாகம் வீதி,
கைதடி மேற்கு, கைதடி
வழமையானவை



இ.தர்சினி
வயது - 21
2ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மேற்கு.
வானொலி, பத்திரிகை

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 23




*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -23**
*‘சங்குநாதம்’,*
*இல:- 15, வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

.............✂ இங்கே வெட்டுக..............................

### இடமிருந்து வலம்

(1) ஒரு புலவரின் பெயர் (3) ஒரு நிறம் (6) உடல் வனப்புப் பெற தங்க ... சாப்பிடுவார்கள். (8) இது இல்லாவிட்டால் யார் மதிக்கிறார்கள் (9) அறுக்கும் (10) தபால் (12) ஆறு, குளங்களுடன் தொடர்புடைய சொல் திரும்பியிருக்கிறது.

### மேலிருந்து கீழ்

(1) திரைகடல் ஓடியும் தேட வேண்டும். (2) ஏழ்மை (3) பேருந்து, ரெயில் போல ஒரு வாகனம் (4) ஒரு வகைப் பட்டாசு (5) சட்டையைக் கழற்றும் (6) சாட்டையால் அடித்தால் சுற்றும் (7) சந்ததி (11) இளையவன் தலைகீழாக நிற்கிறான்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.22 இன் விடைகள்**
**இடமிருந்து வலம்**
1. மனப்பிராந்தி 4. வாழ்த்து 5. சாமை 6. ஐது 7. மாகோ 10. ஆடி 11. கோமாரி

**மேலிருந்து கீழ்**
1. மணவாட்டி 2. பித்து 3. திறமை 5. சாது 8. கோடரி 9. மடி 10. ஆழி 11. கோழி

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

முதற் பரிசு :- தி.தங்கேஸ்வரி
62/5, பிறவுண்வீதி,
1ஆவது ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு :- சி.கௌதமன்
கரம்பைக்குறிச்சி கிழக்கு,
வரணி.

மூன்றாம் பரிசு :- வி.செல்வநாயகம்
‘சத்திரை’
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**
*சி.சிவனேஸ்வரன் சுன்னாகம், செ.ஐங்கரன் யாழ்ப்பாணம், ஞா.கிருபதீசன் கைதடி, திருமதி க.மலர் யாழ்ப்பாணம், க. சசிலா வட்டுக்கோட்டை, ச.சர்மிகா யாழ்ப்பாணம், த.சபாரத்தினம் பருத்தித்துறை, கோ.இராசேந்திரம் திருநெல்வேலி, ப.சிவசூரியர் சங்கானை, S. தர்சினி சாவகச்சேரி.*

குறிப்பு:-
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “குறுக்கெழுத்துப் போட்டி இல.23” எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 03-08-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ‘வலம்புரி’ காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |



# சினிமாச் சிதறல்

## சொஃப்ட் கரக்கடருக்கு ராஜாதான் கடைசிப்படம் இனி அடிதடிதான் - பேட்டி

"எடையைக் குறைக்கணும்கறதுக்காக டயட்லாம் இல்ல ஸார். எப்பவும்போல்தான் சாப்பாடு. சாப்பாடு விஷயத்தில் கட்டுப்பாடு வச்சிக்கிறது கிடையாது! அதுக்கேத்த மாதிரி எக்சர்சைஸ் பண்ணினால் சரி பண்ணிடலாம். இந்த ப்ராஜெக்ட் பேச ஆரம்பிச்சப்போ ரவிக்குமார் ஸார் வெயிட் குறைச்சால் நல்லா இருக்கும்னு சொன்னார். டெய்லி 3 மணி நேரம்னு ஆரம்பிச்சேன். இப்போ ட்ரிம் ஆகிட்டேன்" என்று சொல்லும் அஜீத் இப்போதும் அதை மெய்ன்டெய்ன் பண்ணிக் கொண்டிருக்கிறாராம். இதற்காகவே அதிகாலை சீக்கிரம் எழுந்து விடுவாராம்!

"இந்த டெடிகேஷன்தான் இவர்கிட்ட எனக்குப் புடிச்சது. பஞ்ச தந்திரம் ஷூட்டிங்ல இருக்கறப்போ போன்லதான் பேசினோம். போன்லயே ஒரு லைன் சொன்னே. இரண்டு நாள் முன்னால வரைக்கும் முழுக்கதை என்னன்னு அவருக்கு தெரியாது. கதை இப்படிப் போகும்னு தெரிஞ்சு போச்சு... அப்பறம் என்ன ஸார். நீங்க சொல்லுங்க அதை அப்படியே பண்றேன்னு சொல்லிட்டார். இதனால எனக்கு கூடுதல் பொறுப்பும் பயமும் வந்திடுச்சு" என்று நடுவில் புகுந்தார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார்.

"இப்படி ஒரு காம்பினேஷன்னு எப்படி முடிவெடுத்தீங்க ?" கேள்வியை அஜீத் பக்கம் திருப்பினோம்.

"அதான் சொன்னேனே நான் சாதாரணமா இருந்தப்போ எனக்குன்னு ரெஸ்பான்ஸ்பிளிட்டி கிடையாது. இப்போ அப்படியில்ல. நடிகர் நடிகைகளுக்கு சம்பளம் இல்லாமல் குறைந்த பட்சம் 3 கோடியாவது ஒரு படத்திற்கு தேவைப்படுது. அதைத் திரும்ப எடுக்கணும்னா சரியான ப்ராஜெக்ட் பண்ண வேண்டிய அவசியம் இருக்கு. அதான்" என்று அஜீத் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இடை மறிக்கிறார் கே.எஸ். ரவிக்குமார்.

"28 படம் பண்ணிட்டேன். இது 29. பெரிய ஆர்டிஸ்ட்டோட சேர்ந்து பண்ணிட்டேன். இப்படியே போயிடக்கூடாது. யூத்தோட சேர்ந்து ஒர்க் பண்ணனும். என்னைப் புதுப்பிச்சுக்கணும்னு நானும் நினைச்சுக் கிட்டிருந்தேன். சரியா செட்டாகிடுச்சு" என்றார்.

"இந்தப் படத்தில் மெசேஜ் இருக்குமா ?"



"நான் ஒரு நடிகன். ரசிகர்களுக்கு பொழுது போக்கு அளிப்பவன். அதற்காகத்தான் எனக்கு ரசிகர்களும் மக்களும் மரியாதை தருகிறார்கள். அந்த மரியாதையை நான் காப்பாற்றிக் கொள்வேன். மெசேஜ் சொல்வீர் களா என்று முதலில் கேட்பீர்கள். அடுத்த கேள்வி நீங்கள் அரசி யலுக்கு வருவீர்களா என்று கேட்பீர்கள். நான் ஒரு நடிகன் அவ்வளவு தான்."

"'வில்லன்' படத்தில் என்ன ஸ்டைல் பண்ணப் போகிறீர்கள் ?"


"இந்தப் படத்தில் நிச்சயம் வித்தி யாசம் இருக்கும். அதை சஸ்பென்சாக வைத்திருக்கிறோம். இதுவரை இல்லாத அளவுக்கு இப்படத்தில் எனது உடை அலங்காரத்தில் நான் அதிக கவனம் செலுத்துகிறேன். அதற்காக மும்பையிலிருந்து பிரபல காஸ்ட்யூமர் சேகல் என்பவரை வரவழைத்திருக்கிறேன். அதே போல் ஸ்டில்ஸ் விஷயத்திலும் கவனம் செலுத்தி இருக்கிறேன். இந்த படத்திற்கு ஸ்டில்ஸ் எடுக்க மும்பையிலிருந்து தபுரத்னானி வரவழைக்கப்பட்டுள்ளார். அந்த ஸ்டில்ஸ் உங்களுக்கு கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு உதவியாளரைக் கூப்பிட்டு எடுத்த ஸ்டில்ஸ்களைக் கொடுக்கச் சொல்லிச் சொன்னார். செம கலக்கலான ஸ்டில்ஸ்! டைரக்டர் கே.எஸ். ரவிகுமார் 'வில்லன்' பற்றி இப்படிச் சொல்கிறார் – "இந்தப் படம் முற்றிலும் வித்தியா சமான படமாக யாரும் எதிர்பார்க்காத விதத்தில் இருக்கும். இதில் பஸ் கண்டக்டராக அஜீத்குமார் நடிக்கிறார். இதில் அரசியல் இருக்காது என்று நான் கூறமாட்டேன். படத்திற்கு வில்லன் என்று டைட்டில் வைத்திருப்பதால் அஜீத் வில்லனா என்று யோசிக்காதீர்கள். அவர் வில்லன்களுக்கு வில்லன். இதில் அவர் ஷிவா என்ற வேடத்தில் நடிக்கிறார். எனக்கும் இந்த படம் முக்கிய படமாகும். இப்போதுதான் முதன்முறையாக நாங்கள் இணைந்திருக்கிறோம். நிச்சயம் கமர்ஷியலாக ஒரு பெரிய வெற்றிப்படமாக இது அமையும்."

நிக் ஆர்ட்ஸ் பேனரில் எஸ்.எஸ். சக்கரவர்த்தி இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.



## மந்த்ரா ஜாலம்

அஜித் நடித்து வெளியான 'ராஜா' படத்தில் ஒரு பாட்டுக்கு டான்ஸ் ஆடினார் மந்த்ரா. 'த்ரில்' படத்திலும் இது தொடர்கிறது. சரத்குமார்_மீனா நடித்து வெளிவந்த 'மாயி' படத்திலிருந்தே மந்த்ராவுக்கு ஒரு பாட்டு வாய்ப்புதான் தொடர்கிறது. இந்த நிலமையை மாற்றியே தீருவது என்ற நினைப்பில் தினமும் காலையில் எழுந்ததும் ஹீரோக்களுக்கு போன் போடுவதை முக்கியக் கடமையாக வைத்திருக்கிறார் மந்த்ரா. போன் போடுவதால் ஹீரோயின் சான்ஸ் வருகிறதோ இல்லையோ படத்தில் தலைகாட்டுவதற்கு உத்தரவாதம் கிடைக்கிறதாம். இதாண்டா மந்த்ரா ஜாலம்.



ஜெமினி படம் ஓடியதிலிருந்து ஸ்டுடியோ பெயர்கள் கொண்ட படங்கள் வரிசையாக வர ஆரம்பித்துள்ளது. அடுத்து வாஹினி. இதிலும் விக்ரம்தான் ஹீரோ. ஹீரோயின் சாக்ஷி. வந்தே மாதரம் புகழ் ஸ்ரீனிவாஸ் இசையமைக்கிறார். தெலுங்கு முன்னணி இயக்குனர் எம். சுப்பையா டைரக்ட் செய்கிறார்



நடிகர் அருண்பாண்டியன் கஷ்டப்பட்டு இயக்கிய படம் தேவன். இந்தப் படத்தால் அருணுக்கு நல்ல பெயர். அந்த வெற்றியைத் தொடர்ந்து பல படங்கள் அருணுக்கு வந்துக் கொண்டிருக்கிறது. அதில் டைரக்ட் மட்டும் செய்யுங்கள் எனவும், நடிப்பதுடன் இயக்கியும் தாருங்கள் எனவும் பல தயாரிப்பாளர்கள் கேட்டிருக்கிறார்களாம். இதில் குறிப்பாக ஆஸ்கர் பிலிம்ஸ் ரவிச்சந்திரன் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்

இந்த தேவனுக்கு! நடி இல்லை டைரக்ட் செய். எது வேண்டுமானாலும் செய்துக்கோ என்று அ.பாண்டியனுக்கு சலுகை கொடுத்திருக்கிறாராம்





## மஞ்சக் காட்டு மைனாவின் காதல் வலையில்

மஞ்சக்காட்டு மைனாவாகத் துள்ளிய காயத்ரி ஜெயராம் தீவிரமான காதல் வலையில் சிக்கியிருக்கி-றாராம். ஜெயா பட ஷூட்டிங் கில் இருந்த காயத்ரியிடம், குறிப்பிட்ட அந்த நபரைக் காதலிக்கிறீர்களாமே, உண்மையா? என்றதும் வாயைப் பொத்திக் கொண்டு கள்ளச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். இந்த சிரிப்புக்கான அர்த்தம்? 'இந்த வருஷத்துலயே சிறந்த ஜோக் இதுதான்' என்று சொன்னவர், வதந்திகளுக்குத்தான் கை, கால், மூக்கு, நாக்கு எதுவுமே கிடையாதே, பிறகு எப்படி நான் பதில் சொல்ல முடியும்? என மடக்கினார். காதலை மறைக்கலாம். காதலனை...?

## Cine Magic

### புலவரின் கற்பனையில்





உங்கள் லக்கி ஸ்ரார் அஜீத்தை நாயகியாக்கி ரசியுங்களேன்...




இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது